KALKI 4.12.88 ரூ. 2.


கல்கி



"கருணாநிதியை எதிர்க்க யாரோடும் சேருவோம்..."

—பண்ருட்டி பேட்டி

கொஞ்சும் அவள் அழகு முகம் மங்கித் தெரிகிறதா?





ஃப்ளாஷ் உபயோகிக்கையில் இருக்க வேண்டிய இடைவெளி நான்கு முதல் எட்டு அடியாகும்.

நல்ல புகைப்படங்கள் எடுக்க இந்து கூறும் சில குறிப்புகள்

சில எளிய வழிமுறைகளை நினைவில் கொண்டால் வீட்டுக்குள்ளேயே புகைப்படங்கள் எடுத்தாலும் அவை நல்ல புகைப்படங்களாக அமைவது மிக சுலபம்.

உதாரணமாக, நீங்கள் ஃப்ளாஷ் உபயோகித்தால், உங்களுக்கும் படமெடுக்கப்படும் பொருளுக்கும் இடையில் சரியான இடைவெளி இருத்தல் வேண்டும். இடைவெளி குறைவுமாயின், ஃப்ளாஷிலிருந்து வெளிப்படும் ஒளிக்கும் இடைவெளிக்குமிடையே உள்ள விகித நிலை வேறுபட்டு புகைப்படம் கூடுதல் ஒளியினால் வெளிர்த்து காணப்படுகிறது. புகைப்படத்தில் எடுக்கப்பட்ட பொருளின் தன்மைகள் சரிவர வெளிப்படுவதில்லை.

ஆனால் இடைவெளி கூடுதலாய் நின்று படமெடுப்பது சரியான புகைப்படங்களைத் தராது. குறைவான ஒளியினால் உங்களுக்கு மங்கலான புகைப்படமே கிட்டும். சரியான இடைவெளி நான்கு முதல் எட்டு அடிகள் மட்டுமே. இந்த இடைவெளிக்கு உட்பட்டு நீங்கள் புகைப்படமெடுத்தால் முடிவுகள் பெருமையுறும் வண்ணம் அமையும்.

இக்குறிப்புக்களை மனதில் கொள்வது பயனளிக்கும். மேலும் நல்ல தரமுள்ள கலர் ஃபிலிமையே தேர்ந்தெடுங்கள். "இந்து"வைப் போல், வண்ணங்கள் என்றென்றும் உங்கள் எண்ணத்தில் நிறைந்திருக்கும்.



INDU

ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
இந்து நகர், உதகமண்டலம் 643 005.
வட்டாரத் தலைமையகம்: சுப்ரமணியம் பில்டிங்ஸ்
எண் 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002.



"பெயிண்டிங் வாங்க வந்திருப்பவர் பெரிய பணக்காரர் போலிருக்கு!"

"எப்படிச் சொல்றே?"

"ஆயில் பெயிண்டிங் வேண்டாமாம். நெய் பெயிண்டிங் இருக்கான்னு கேட்கிறார்!"

— ரா. ரகோத்தமன்.




ஒருவன்: பெண் பார்க்கப் போன இடத்தில் பெண்ணோட அப்பாவுக்கு என்னை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது.

நண்பன்: அப்படின்னா... கல்யாணம் நிச்சயம் ஆகிவிட்டதாச் சொல்லு!

ஒருவன்: இல்லே, தனியாக் கூப்பிட்டு, 'பாவம், நல்ல பையனாத் தெரியறே... வேறே இடத்துலே நல்ல பெண்ணாப் பார்த்துக் கட்டிக்க'ன்னு சொல்லிட்டாரு!

— திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.



"என் மனைவியை நினைச்சு... நினைச்சு... நான் ஏங்காத நாளே இல்லை..."

"ஏன், பிரிஞ்சுட்டீங்களா?"

"இல்லே, இன்னமும் கல்யாணமே ஆகலே..."

— ஆர். வசந்தகுமார்.



இவர்: என் வீட்டுக்காரி, புடைவை எடுத்து முடிக்கிற வரைக்கும், என்னால் சும்மா இருக்க முடியாது... ரொம்பப் போரடிக்குது, சார்...!

முதலாளி: என்ன செய்யணும்றீங்க...?

இவர்: "தினசரி சம்பளத்தில்" ஏதாவது ஒரு வேலை போட்டுக் கொடுங்களேன்...!?

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.



மனைவி: உங்களுக்கு அதிர்ஷ்டமே யில்லை. உங்ககூட எந்த பஸ் ஸ்டாப்பில் நின்னாலும் பஸ்ஸே வரமாட்டேங்குது.

கணவன்: உனக்கு மட்டும் ரொம்ப அதிர்ஷ்டமாக்கும்?

மனைவி: ஆமாம். நான் தனியாகப் போகும்போதெல்லாம் உடனே ஆட்டோ கிடைக்கிறதே!

— ரா. ரகோத்தமன்.

கேள்வி: எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க. இப்படி சிதறுண்டு போனதற்கு என்ன காரணம்?

பண்ருட்டி ராமச்சந்திரன்: எப்படி செங்கற்களை இணைக்கும் ஒரு சக்தியாகச் சிமெண்டு கலவை இருக்கிறதோ அப்படி அனைவரையும் ஒன்றிணைக்கும் சக்தியாக எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தார். அவர் மறைவுக்குப் பிறகு அந்தச் சக்தி வேறு யாருக்கும் இல்லை. அதுதான் காரணம்.

கேள்வி: அ.இ.அ.தி.மு.க. என்பது எம்.ஜி.ஆர். என்ற தனி மனிதச் செல்வாக்கில் இருந்த கட்சி — கொள்கை அடிப்படையிலான கட்சி அல்ல; அதுதான் இந்தச் சிதறலுக்குக் காரணம் என்று சொல்லலாமா?



"கருணாநிதியை எதிர்க்க யாரோடும் சேருவோம்..."



—மனம் திறந்து பேசுகிறார் பண்ருட்டி

பண்ருட்டி: பொதுவாகக் கீழ்த் திசை நாடுகளில் என்று எடுத்துக் கொண்டாலே பெரும்பாலும் தனி மனிதச் செல்வாக்குள்ள கட்சிகள்தான். பாகிஸ்தானில் கூட பூட்டோவின் மகள் என்கிற செல்வாக்கில் தான் பெனாசிர் பூட்டோ அரசியலில் இருக்கிறார். இந்நிலை இங்கு தவிர்க்க முடியாதது.

கேள்வி: ஓர் ஆரோக்கியமான அரசியல் சூழ்நிலைக்கு இந்தத் தனி நபர் செல்வாக்கு என்பது மறைய வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

பண்ருட்டி: நிச்சயமாக. காலம் செல்லச் செல்ல இந்நிலையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தானாகவே மறைந்து போகும்.

கேள்வி: எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு. முதல்வர் போட்டி என்று வந்த போது ஜானகி அணியில் 97 பேர் இருந்தார்கள். நீங்கள் ஆதரித்த ஜெயலலிதா அணியில் முப்பத்து மூன்று பேர்தான் இருந்தார்கள். ஜனநாயக அடிப்படையில் பார்த்தால் பெரும்பாலானவர்கள் ஆதரித்த ஜானகி அணியைத்தானே நீங்கள் கடைசியில் ஒப்புக் கொண்டு ஆதரித்திருக்க வேண்டும்?

பண்ருட்டி: எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவுக்குப் பிறகு நடந்த போட்டியில் ஜானகி அம்மையார் வருவார் என்று எங்களில் யாரும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அந்நிலையில்தான் இடைக்கால முதல்வராக நியமிக்கப்பட்ட நாவலர் அவர்களே — அப்போதைய அமைச்சரவையோடு தொடர்ந்து முதல்வராக இருக்



கட்டும் என்று தீர்மானித்தோம். அதை ஒரு சிலர் சுயலாபம் கருதி எதிர்த்தார்கள். நாவலர் அல்லாமல் அப்போதைக்கு மற்றவர்களில் யார் வந்தாலும் நிலைமை சுமுகமாக இருக்காது என்பதால்தான் நாங்கள் கட்சி நலன் கருதி கடைசி வரை எங்கள் நிலையை விட்டுக் கொடுக்க முடியாமல் இருந்தோம்.

கேள்வி: அப்போதைய போட்டியின் ஆரம்பத்திலேயே ஜானகி அம்மையார் கலந்து கொண்டிருந்தால் உங்கள் நிலை என்னவாக இருந்திருக்கும்?

பண்ருட்டி: நிச்சயம் ஜானகி அம்மையாரையே நாங்கள் ஆதரித்திருப்போம்.

கேள்வி: பிறகு ஆதரிப்பதில் உங்களுக்கு என்ன சங்கடம்?

பண்ருட்டி: முன்பே சொன்ன மாதிரி, ஏற்கெனவே நாங்கள் நாவலரை முதல்வராக ஒப்புக் கொண்டு விட்டதால் பிறகு அதிலிருந்து பின்வாங்குவதென்பது சரியானதாக இருக்காது என்பதுதான்.

கேள்வி: ஒருவேள்ளை அப்போதே இரு தரப்பினரும் மனம் விட்டுப் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால் நீங்கள் இறுதியில் ஜானகியையே ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும். இல்லையா?

பண்ருட்டி: இருந்திருக்கலாம்.

கேள்வி: இந்நிலையில் நீங்கள் ஜெயலலிதாவை ஆதரித்ததற்கு என்ன காரணம்?

பண்ருட்டி: நாங்கள் அப்போது ஜெயலலிதாவை ஆதரித்தோம் என்பதைவிட எங்கள் நிலையை அவர் ஆதரித்தார் என்பதுதான் சரியானது.

கேள்வி: எம்.ஜி.ஆர். கட்சிக்குள் ஜெயலலிதாவை நுழைத்த போது கட்சிக்குள் அப்போதே ஒரு பரவலான எதிர்ப்பு இருந்தது. அப்போது உங்கள் நிலை என்னவாக இருந்தது?

பண்ருட்டி: அவர் சினிமா மூலம் பிரபலமானவர் என்பதால் கட்சிக்குப் பயன்படுவார் என் று தா ன் நினைத்தோம். அதைத் தவிர வேறொன்றும் நினைக்கவில்லை.

கேள்வி: ஜெயலலிதா, கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டவுடன், அவர் கட்சியின் மூத்த உறுப்பினர்களைக் கூட மதிக்கவில்லை. சொல்லப் போனால் அவர்களெல்லாம் தம்மைக் கண்டதும் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும் என்று விரும்பினார் என்று சொல்லப்பட்டது. அப்போது உங்களிடம் அவர் எவ்வாறு நடந்து கொண்டார்?

பண்ருட்டி: என்னைப் போன்றவர்கள் அப்போது அவருடன் சந்தித்துப் பழக வேண்டிய அவசியமே இருந்ததில்லை. எனவே, நீங்கள் சொல்லுகிற மாதிரியான பிரச்னைகளை நாங்கள் எதிர்கொள்ளவில்லை.

கேள்வி: தமக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையிலானதோர் உறவு எப்படிப்பட்டதோர் உறவு என்பதை ஜெயலலிதாவே பலமுறை சொல்லியிருக்கிறார். நீங்கள் கூட அந்த உறவை நியாயப்படுத்துவது போல் பேசியிருக்கிறீர்கள். எந்த அடிப்படையில் அதை உங்களால் நியாயப்படுத்த முடிந்தது?

பண்ருட்டி: வேண்டாமே... இந்த விஷ

யத்தைத் தவிர்த்து விடலாமே...!

கேள்வி: சரி, ஜெயலலிதா அணியிலிருந்து மீண்டும் நீங்கள் நால்வர் அணியாகப் பிரிய வேண்டிய அவசியமென்ன? அவர் கணக்குக் காட்டாதது மட்டும்தான் காரணம் என்பதை நம்ப முடியவில்லை...

பண்ருட்டி: அவருக்கு ஓர் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தக் கூடிய அளவுக்குத் திறமை இல்லை. அவரை யாரும் கேள்வியே கேட்கக் கூடாது என்று நினைக்கிறார். எல்லா அதிகாரங்களும் தம்மிடமே இருக்க வேண்டுமென்பதிலும் குறியாக இருக்கிறார். இதெல்லாம் ஒரு கட்சிக்கு — இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் தகுதிகளல்ல. எனவேதான் நாங்கள் விலக வேண்டியதாயிற்று.

கேள்வி: இதையெல்லாம் நீங்கள் முன்பே உணரவில்லையா என்ன?

பண்ருட்டி: எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த வரை ஜெயலலிதாவைத் தலைமைப் பொறுப்பிலமர்த்தி இயங்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லையே! இப்போது பொறுப்பைக் கொடுத்த பிறகுதானே அவருடைய திறமைக் குறைவுகள் வெளிப்பட்டன. அதோடு கட்சிக்காகச் சேர்க்கப்படும் பொதுப் பணத்திற்குக் கணக்குச் சொல்ல மாட்டேன் என்பது என்ன நியாயம்? 'சிவன் சொத்து குல நாசம்' என்பது போல் மக்கள் பணத்தைச் சாப்பிடும் யாரும் நாசமாய்த்தான் போவார்கள். அதனால்தான் இன்னமும் கருணாநிதியால் அரசியலில் எழுந்து நிற்கவே முடியவில்லை.

கேள்வி: நீங்கள் சொல்லுகிற கருணாநிதியின் ஊழல்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். ஜானகி அணி, ஜெயலலிதா அணி என்று இரண்டுபட்ட நிலையில் நீங்களே ஒருவருக்கொருவர் ஊழல் குற்றச்சாட்டுக்களைக் கூறிக் கொண்டீர்களே, அதெல்லாம் உண்மையில்லையா?

பண்ருட்டி: ஒரு பெரிய கட்சிக்குள் இருக்கிற அத்தனை பேருமே ஒரே மாதிரியாகச் சுத்தமானவர்களாக இருந்து விட முடியாது. சிலர் தவறுகள் செய்யலாம். ஆனால், தலைவனே தப்புச் செய்யலாமா? செய்யக் கூடாது. எல்லாக் கட்சியிலும் தொண்டர்கள்தான் தப்புச் செய்வார்கள். ஆனால், தி.மு.க.விலோ தலைவரே தப்புச் செய்தார். அதைத்தான் சொல்கிறேன்.

கேள்வி: எம்.ஜி.ஆர். தவறே செய்யவில்லை என்கிறீர்களா?

பண்ருட்டி: அப்படிச் சொல்லவில்லை. தவறுகள் யாருக்கும் நிகழவே செய்யும். ஆனால் அதைத் தவறு என்று தெரிந்ததும் திருத்திக் கொள்ள வேண்டும். எம்.ஜி.ஆர். அப்படிப்பட்டவர். சொன்னால் உடனே திருத்திக் கொள்ளுவார். ஆனால் கருணாநிதி அப்படிப்பட்டவரல்லர். யார் என்ன சொன்னாலும் கேட்கவே மாட்டார். மாறாகத் தவறுகளைச் சுட்டிக் காட்டுபவர்களைச் சமயம் பார்த்து மறக்காமல் பழிவாங்குகிற குணம் அவருக்கு. ஒரு சர்வாதிகாரியைப் போல்தான் கருணாநிதி செயல்படுவார்.

கேள்வி: ஆனந்த விகடன் ஆசிரியரை எம்.ஜி.ஆர். அரசு சிறையிலடைத்ததும், அண்மையில் ராஜீவ் காந்தி பத்திரிகைகளை ஒடுக்குவதற்காகச் சட்டம் கொண்டு வந்ததும் எதில் அடங்கும் என்கிறீர்கள்?

பண்ருட்டி: தவறு என்று தெரிந்ததும் — பிறர் சுட்டிக் காட்டியதும் உடனே விகடன் ஆசிரியரை விடுதலை செய்து விடவில்லையா? பத்திரிகைகளை ஒடுக்குகிற மசோதா பற்றிய எதிர்ப்பு வந்ததும் ராஜீவ் காந்தி அதை வாபஸ் பெற்றுக் கொள்ளவில்லையா? ஏன், ராஜீவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைக் கூறிக் கொண்டிருக்கும் வி.பி. சிங்கைக் கூட ராஜீவ் அரசியலில் தனிமைப்படுத்த முயற்சி செய்கிறாரே தவிர, ஒழித்துக் கட்ட விரும்பவில்லை. இதைத்தான் நான் சொல்கிறேன்.

கேள்வி: சரி, பழையபடி உங்கள் கட்சி விவகாரங்களுக்கே வருவோம். நீங்கள் முன்பே ஒப்புக் கொண்டபடி இன்றைய சூழ்நிலையில் தனிமனிதச் செல்வாக்கு என்பது அரசியலில் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. இந்நிலையில் ஜானகி — ஜெயலலிதா ஆகியோரின் தனிமனித பாப்புலாரிட்டிக்கு மத்தியில் உங்கள் அணி எந்த அளவுக்கு மக்களிடம் செல்வாக்குப் பெற முடியுமென்று நம்புகிறீர்கள்?

பண்ருட்டி: மக்கள்தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும்!

கேள்வி: இப்போது உங்கள் நால்வர் அணியிலிருந்து திருநாவுக்கரசு விலகி மீண்டும் ஜெயலலிதா அணியில் சேர்ந்திருக்கிறாரே அதற்கு என்ன காரணம்?

பண்ருட்டி: அவரிடம்தான் கேட்க வேண்டும்.

கேள்வி: அவரிடம் கேட்பது ஒருபுறம் இருக்கட்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பண்ருட்டி: என்னைப் பொறுத்தவரை திருநாவுக்கரசு அவர்களை நால்வர் அணிக்குள்ளேயே இருத்தி வைக்கப் போதுமான ஈர்ப்பு சக்தி இல்லையென்பதைக் காட்டுவதாகவே நினைக்கிறேன்.

கேள்வி: திருநாவுக்கரசு என்கிற ஒரு நபரையே இருத்தி வைக்கும் அளவுக்கு உங்களிடம் ஈர்ப்பு சக்தி இல்லாத போது, எப்படி வெகு ஜனங்களை ஈர்க்க முடியுமென்று நம்புகிறீர்கள்?

பண்ருட்டி: உண்மையில், எல்லாத் துறைகளிலும் எங்கள் ஈர்ப்பு சக்தியை



ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்

கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான நாத ஜோதி ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அமரத்துவம் அடைந்த எட்டையபுரத்தில் (சிதம்பரனார் மாவட்டம்) நவம்பர் 6, 7, 8 தேதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள மண்டபத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டையும், ஸ்ரீ தீக்ஷிதரின் பஞ்சலோக, கற்சிலை பிரதிஷ்டையும் மிகச் சிறப்பாக நடந்தேறியது. சுற்றுப்புற சுவர் எழுப்பும் வேலையும் தளம் போடும் வேலையும் விரைவில் துவங்க இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் ஸ்ரீ தீக்ஷிதரின் பிறந்த (ஏப்ரல் மாதம்) நாளை, திருவையாற்றில் நடப்பதுபோல் கொண்டாடவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஆஸ்தீக அன்பர்கள், கர்நாடக இசை ரசிகர்கள் அனைவரும் உறுப்பினர்களாக சேர்ந்து ஸ்ரீ தீக்ஷிதர் நினைவாலயத்தை விரிவாக்க வேண்டுகிறோம்.

நிதி அனுப்ப வேண்டிய முகவரி :

The Secretary & Treasurer
Natha Jothi Sree Muthuswamy
Dhikshidhar Memorial Committee,
ABCOY Gardens,
Sankarnagar P.O. 627 357
Tirunelveli Kattabomman District

MEMBERSHIP

Patron:- Rs. 1000.00 **Life Member:- Rs. 300.00**
Donation:- Any Amount.



கல்கி அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஸ்ரீ K. வெங்கட்ராமன் அவர்களின் குமாரி சௌபாக்கியவதி சியாமளாவுக்கும் வட்கோவஞூர் (Late) ஸ்ரீ K. கோபாலய்யரின் கனிஷ்ட குமாரன் சிரஞ்ஜீவி ஸ்ரீனிவாசனுக்கும் (Assistant Manager, New India Assurance Company Limited) சென்னையில் சமீபத்தில் விவாஹம் வெகுசிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

வளர்த்துக் கொள்ள வேண்டியதன் எச்சரிக்கைதான் அவர் விலகல். மேலும் அவருடைய விலகல் என்பது, 'ஜெயலலிதாவுக்குத் தலைமை தாங்குகிற தகுதி கிடையாது' என்று பிரகடனப்படுத்தினோமே அந்த எங்கள் அரசியல் நிலைக்குத் தரப்பட்ட ஓர் அதிர்ச்சி என்றும் சொல்லலாம்.

கேள்வி: அவரைத் தொடர்ந்து நீங்களும்...

பண்ருட்டி: ஒருபோதும் மாட்டோம். அது இனி நடக்கவே நடக்காது.

கேள்வி: சரி, உங்கள் அணி ஜானகி அணியோடு சேரும் வாய்ப்பு உள்ளதா?

பண்ருட்டி: அதற்குத்தான் அவர்களுக்குள்ளேயே கருத்து வேற்றுமை இருக்கிறதே! எதிர்ப்பும் இருக்கிறதே!

கேள்வி: தேர்தல் உடன்பாடு என்றால் மட்டும் எப்படி? எதிர்ப்பு இருக்காதா?

பண்ருட்டி: அ.இ.அ.தி.மு.க.-வின் மூன்று அணிகளுக்கும் சரி, காங்கிரஸுக்கும் சரி, கருணாநிதி ஒரு பொது எதிரி என்கிற நிலை. இந்நிலையில் ஒரு பொது எதிரியை வீழ்த்த ஒத்த கருத்துடையவர்கள் ஒரே அணியில் திரண்டு நிற்பதுதானே முக்கியம்.

கேள்வி: கருணாநிதியை வீழ்த்துவதற்காக இனி ஜெயலலிதா அணியோடும் சேர்ந்து நிற்பீர்களா?

பண்ருட்டி: அதில் எந்தத் தவறும் இல்லை. அவரை எங்களால் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியாதே தவிர, இனி அவரோடு ஒன்று சேர முடியாதே தவிர, கருணாநிதி எதிர்ப்பு என்கிற ஒரு பொது நோக்கத்திற்காக அவர்களோடு இணையாக நிற்க நாங்கள் தயாராய் இருக்கிறோம்.

கேள்வி: நீங்கள் தி.மு.க.வில் இருந்த போதும் சரி, அதன் பிறகு அ.தி.மு.க.வுக்கு வந்த போதும் சரி, எப்போதுமே உங்களுக்கு காங்கிரஸோடு ஒரு மறைமுகமான உறவு இருந்து கொண்டேதான் இருக்கிறது என்று சொல்லப்படுவது குறித்து நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

பண்ருட்டி: அதெல்லாம் சுத்தப் பொய். தி.மு.க.வில் இருந்த போது எனக்குக் காங்கிரஸ்காரர்களோடு எந்தவிதத் தொடர்பும் கிடையாது. பிறகு எம்.ஜி.ஆர். அவர்களோடு அவருக்குத் துணையாக டெல்லி சென்றேன். அப்போது பலரிடமும் பழக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதைத் தவிர வேறு எந்தத் தொடர்பும் கிடையாது. உண்மையில் நான் தி.மு.க.வினர் சொல்வது போல் 'தமிழ் நாட்டின் பாஸ்கரராவாக' இருந்திருந்தால், எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு நான் சில எம்.எல்.ஏ.க்களைச் சேர்த்துக் கொண்டு காங்கிரஸோடல்லவா சேர்ந்து ஆட்சியமைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லையே! இதிலிருந்தே அவர்கள் சொல்வது அப்பட்டமான பொய் என்று நிரூபணமாகவில்லையா?

கேள்வி: அ.தி.மு.க.வில் எத்தனையோ பேர் இருக்க, உங்களை மட்டும் தி.மு.க.வினர் குறிப்பாகத் தேர்ந்தெடுத்து இப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன?

பண்ருட்டி: (சிரிக்கிறார்) என்னைக் கண்டால் அவர்களுக்கு அப்படியொரு பயம் போல் இருக்கிறது! வேறு என்ன சொல்வது?

கேள்வி: அப்படி என்ன பயமாக இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

பண்ருட்டி: எனக்கென்ன தெரியும்? (சிரிக்கிறார்) நீங்கள் அவர்களிடம்தான் போய்க் கேட்க வேண்டும்.

பேட்டி: **இளங்கோவன்**


அட்டை வண்ணப்படமும், படங்களும்:
கே. வி. ஆனந்த்



அடுத்த இதழில்...

லஞ்ச அரக்கனை வீழ்த்த முடியுமா..?

—கவர் ஸ்டோரி



பாகிஸ்தான்
பெனாசிர்
சர்வாதிகார சக்திகள்
ஆட்சி உரிமை
அரிஜனங்கள்
வன்னியர்
உரம்.ம்.ம்.. பா..பா!
தா..பார்..புல்லு!



ஸ்ரீ

கல்கி

1988 டிசம்பர் 4
மலர் 47 இதழ் 18
விபவ கார்த்திகை 19



சூரியன் மேற்கே உதிக்குமா?
நரசிம்மராவ் விரும்புவது நடக்குமா?

"ஈழத் தமிழர்கள் வன்முறைக்கு முடிவு காண விரும்புகிறார்கள்; அமைதி நிலவுவதையும் ஜனநாயகம் தழைப்பதையும் காணவே ஆசைப்படுகிறார்கள்' என்கிறார் வெளியுறவுத் துறை அமைச்சர் பி. வி. நரசிம்மராவ். ஈழத்தில் வட கிழக்கு மாகாணத்தில் தேர்தல்கள் நடந்தேறியது இதனை நிரூபிப்பதாகச் சொல்கிறார். ஈழத் தமிழர்கள் வன்முறையை வெறுக்கிறார்கள், அமைதியான ஜனநாயகத்தை விரும்புகிறார்கள் என்பதற்கு ஒரு நிரூபணம் தேவையில்லை. அது ஏற்கெனவே அனைவரும் அறிந்த ஒன்றுதான். அதனால்தான் அவர்கள் விடுதலைப் புலிகள் தேர்தல்களைப் புறக்கணிக்குமாறு கூறியும் கேட்கவில்லை. வோட்டுப் போட நீள நீளமான க்யூவில் நின்றார்கள். அறுபது சதம் வாக்காளர்கள் வோட்டுப் போட்டார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால் அவர்கள் இன்று அடைந்துள்ள ஜனநாயகமும் நடந்துள்ள தேர்தலும் அவர்களுக்கே முழுத் திருப்தி அளிப்பதாக இருக்க முடியாது. இந்திய ராணுவத்தின் பாதுகாப்புடன் நடக்கும் ஒரு தேர்தலை எப்படி சுதந்திரமான தேர்தலாகக் கருத முடியும்? விடுதலைப் புலிகள் இந்தத் தேர்தலை அங்கீகரிக்கவில்லை' என்னும் போது இத் தேர்தலின் விளைவாக அமையும் அரசு எவ்வாறு நிர்பயமாக ஆட்சி நடத்த முடியும்? ஈழத்தில் அமைதி திரும்பி விடப் போவதாக நம்பத்தான் இந்தத் தேர்தல் இடம் தருமா? மேலும் சில காலம் முன் நடந்த வடக்கு மாகாணத் தேர்தலில், எதிர்த்துப் போட்டியிட வேட்பாளர் யாருமே முன்வரவில்லை என்பதைத்தான் மறக்க முடியுமா?

"ஈழத் தமிழரின் விருப்பம் என்ன என்று புரிந்து விட்டதால் நீங்களும் வன்முறையை விட்டொழித்து விட்டு சுயாட்சியிலும் ஜனநாயகத்திலும் இரண்டறக் கலந்து விடுங்கள்'' என்று விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் நரசிம்மராவ். அந்த அதிசயம் நடக்குமானால் சூரியன் மேற்கே உதிக்கும்.

'எத்தனை காலம் ஈழத் தமிழருக்குப் பாதுகாப்பு அளித்துக் கொண்டும் விடுதலைப் புலிகளைச் சமாளித்துக் கொண்டும் நமது ராணுவம் அங்கே இருக்கப் போகிறது?' என்றால், 'இந்தியா — இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமுலாகும் வரை' என்று கூறுகிறார் நரசிம்மராவ். அதற்கு இன்னும் பல படிகள் ஏற வேண்டியிருப்பதையும் அவரே குறிப்பிடுகிறார். அதாவது, அடுத்து பதவிக்கு வரப் போகும் ஜனாதிபதி பிரேமதாசா அல்லது சிரிமாவோ, அமைதிப்படையை வாபஸ் பெறுமாறு இந்தியாவைக் கேட்டுக் கொண்டால்கூட, இந்தியா டேரா தூக்காது. 'ஒப்பந்தம் முழுமையாக அமுலாகட்டும்; அப்புறம் பார்ப்போம்' என்றுதான் இந்தியா பதில் கூறும் என்ற உறுதியான உள்ளர்த்தம் நரசிம்மராவின் பேச்சில் தொனிக்கிறது.

இது விரும்பத்தக்க கொள்கையா என்பதைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அமைதிப்படையின் வீரத்தையும் செயல்திறனையும் அவர்கள் காட்டுகிற பொறுமையையும் ஈழத் தமிழர்களுக்கு அளிக்கிற பாதுகாப்பையும் நாம் குறைத்து மதிப்பிடவில்லை; போற்றவே செய்கிறோம். ஆனால் அதே சமயம் அவர்களை அளவுக்கு மீறிச் சோதிப்பதும் சரியல்ல என்று எச்சரிக்க விரும்புகிறோம். தாய்நாட்டை எதிரியின் தாக்குதலிலிருந்து காப்பது வேறு; வேற்று நாட்டு மண்ணில் எதற்காகப் போராடுகிறோம் என்று புரியாமல் உயிரைப் பணயம் வைத்துப் போரிடுவது என்பது வேறு. போதாக்குறைக்குக் கருணாநிதி போன்றவர்கள் 'இந்தத் தேர்தலே இந்திய ராணுவத்தினர் நடத்திய நாடகம்' என்றெல்லாம் துஷ்பிரசாரம் செய்யும் போது, நம் ராணுவத்தினர் மனமென்ன, நமது மனமே நொந்து போகிறது.

மத்தியஸ்தம் செய்யப் போன இந்தியா, ராஜதந்திரம் இழந்து, ஒரு தரப்புடன் கூட்டுச் சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொண்டு, மற்றொரு தரப்பை விரோதித்துக் கொண்டது. ஒரு பக்கம் ஒப்பந்தத்தின் விளைவான முன்னேற்றங்களைக் கண்டாலும் மறுபக்கம் விடுதலைப் புலிகளை விரோதித்துக் கொண்டதால் அனர்த்தங்கள் தொடர்கின்றன. ஒரு புதை சேற்றில் ராஜீவ் இந்தியாவையும் இந்திய ராணுவத்தையும் சிக்க வைத்திருக்கிறார். எத்தனை சீக்கிரம் மீண்டு வருகிறோமோ, நல்லது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

ரம்யா ஏன் பொய் சொன்னாள்?

சத்யா ஸ்ரீனிவாசன்

வாசலில் விளையாடிக் கொண்டிருந்த ராதாவும், ரவியும் தெருமுனையில் கன்னைய்யா வரும்போதே கவனித்து விட்டனர். விளையாட்டை அப்படியே நிறுத்தி விட்டு, ''ஹைய்யா தாத்தா, தாத்தா'' என்று சந்தோஷமாகக் குதித்தோடியபடி அவரை எதிர்கொண்டனர். பேரனையும், பேத்தியையும் அன்பாக அரவணைத்துக் கொண்ட கன்னைய்யாவின் பார்வை, பேத்தியின் கழுத்தில் தகதகவென மின்னிக் கொண்டிருந்த நெக்லஸில் பதிந்து நின்றது.

மெதுவாக நெக்லஸைத் தடவினார். 'டாலருடன் சேர்த்து எப்படியும் நாலு பவுனுக்குக் குறையாது' என்று எடை போட்டது அவர் மனம். ''புதுசாம்மா?'' என்றார் பேத்தியிடம்.

''இல்லையே. வாங்கி ரொம்ப ரொம்ப நாளாச்சே!'' என்ற பேத்தி, ''அம்மா எப்பவும் பீரோவுலேயே வச்சிருப்பாங்க. ஏதாவது விசேஷம்னா எடுத்துப் போடுவாங்க. மறுபடியும் எடுத்து உள்ளே வச்சுடுவாங்க...'' என்று விளக்கினாள்.

அதற்குள், கன்னைய்யாவின் கையைப் பிடித்து, அவருடைய பார்வையைத் தன் பக்கம் ஈர்த்து, ''எனக்குக் கூட சங்கிலி இருக்கே...'' என்று ரவி பெருமையாகக் காட்டிய போதுதான் அவன் கழுத்திலும் சுமார் ஒண்ணரைப் பவுன் மதிக்கக்கூடிய மைனர் சங்கிலி இருப்பதைப் பார்த்தார்.

இவ்வளவு நகைகளைச் செய்திருக்கிறார்கள்... மகனோ, மருமகளோ ஒரு வார்த்தை கூடத் தம்மிடம் சொல்லவில்லையே என்று எண்ணிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்த அவரைப் பார்த்ததும் திகைத்து நின்றாள் மருமகள் ரம்யா.

தம்மைக் கண்டதும் அவளுடைய முகபாவம் சட்டென மாறியதாகவும், அவள் முகத்தில் இனம் தெரியாத ஒரு கலவரம் படர்ந்ததாகவும் உணர்ந்தார் கன்னைய்யா. மருமகளையே ஒரு நிமிடம் கூர்ந்து கவனித்தார். இரண்டு கைகளிலும் தலா இரண்டு வளையல்களை அணிந்து, கழுத்திலும் இரட்டைவடம் செயின் அணிந்திருந்தாள்.

திடீரென மாமனாரைக் கண்ட திகைப்பிலிருந்து மீண்ட ரம்யா, ''வாங்க மாமா, வாங்க. என்ன திடீர்னு, லெட்டர் கூடப் போடாமல் வந்திருக்கீங்க!'' என்று வரவேற்கவும், படுக்கையறையிலிருந்து, ''யாரு வந்திருக்காங்க, அப்பாவா?'' என்றபடி வெளியே வந்த அவர் மகன் பாலுவின் கழுத்திலும் ஒரு மைனர் சங்கிலி.

கன்னைய்யா நிரந்தரமாகச் சென்னையில் வசிப்பவர். கோயம்புத்தூரில் இருந்த மகன் வீட்டுக்கு எப்போதாவதுதான் வருவார். இப்போது அவர் வந்திருந்தது இரண்டாவது தடவை. குழந்தைகளுக்கு விடுமுறை விடப்படும் போது மகனும் மருமகளும் சென்னைக்கே வந்து விடுவது வழக்கம். அப்போதெல்லாம் அவர்கள் மிகவும் சர்வ சாதாரணமாகத்தான் வருவார்கள். நகை, நட்டு என்று எதுவும் அணிந்திருக்க மாட்டார்கள். ஒருமுறை சென்னை வந்திருந்த பாலுவை அவனுடைய அத்தைதான் கேட்டாள், ''ஏம்பா பாலு, பெண்டாட்டி, ரெண்டு குழந்தைன்னு சின்ன குடும்பம். கை நிறையச் சம்பளம் வாங்கறே. ஏதாவது நகை நட்டு பண்ணிக்கக் கூடாதோ?'' என்று. உடனே ரம்யா ''எங்கே முடிகிறது அத்தை? வர்றதெல்லாம் வீட்டு வாடகை, குழந்தைங்க ஸ்கூல் பீஸ், மளிகைச் சாமான்னு செலவாயிடறது. மாசா மாசம் இருநூறு ரூபா இங்கே அனுப்பறதுக்குள்ளேயே உன்னைப் பிடி, என்னைப் பிடின்னு ஆயிடறது. நகையாவது நட்டாவது?'' என்றாள். மனைவிக்கு ஒத்துப் பாடினான் அவனும். கன்னைய்யா அவர்கள் சொன்னதை நம்பினார். இப்போதல்லவா திருட்டுத்தனம் தெரிகிறது!

''என்னப்பா, திடீர்னு ஒரு லெட்டர் கூடப் போடாமல் வந்திருக்கீங்க?'' என்று மனைவி கேட்ட அதே கேள்வியைப் பாலுவும் கேட்டதும், ஒருவிதமான செயற்கைப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, ''ஏன்பா என் மகன் வீட்டுக்கு நான் சொல்லிண்டுதான் வரணுமா என்ன?'' என்றார்.

''அதுக்கில்லேப்பா, லெட்டர் போட்டிருந்தா நானே ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனுன்னுதான்...'' என்று பாலு சொன்னதும், ''அதனாலென்ன பரவாயில்லை'' என்றபடியே கால், கை கழுவ பாத்ரூமை



நோக்கிச் சென்றார்.

அவர் மனம் எண்ணமிட்டது. 'நாம் கடிதம் எழுதிவிட்டு வந்திருந்தால் முன் ஜாக்கிரதையாக நகைகளை எடுத்து மறைத்து வைத்திருப்பார்கள்.' அதோடு, 'வீட்டிலே ஏதாவது விசேஷம்னாதான் நகை எடுத்துப் போடுவாங்க' என்று பேத்தி சொன்னதும் நினைவுக்கு வந்தது. அவராக ''என்ன விசேஷம் இன்னிக்கு?'' என்று கேட்க விரும்பவில்லை.

கை, கால் கழுவிக் கொண்டு வந்த அவரிடம் காப்பியைக் கொடுத்தவாறே, ''இன்னிக்கு உங்க பிள்ளைக்குப் பிறந்த நாள். நல்ல நாள்லேதான் வந்திருக்கீங்க...'' என்ற மருமகள் ரம்யா, ''என்னங்க... வாங்க, அப்பா கால்லே விழுந்து ஆசீர்வாதம் வாங்கிப்போம்'' என்றாள் கணவனிடம்.

மௌனமாகக் கையை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார் கன்னைய்யா.

பிறகு —

''இப்போ சொல்லுங்கப்பா, என்ன விஷயம்? திடீர்னு வந்திருக்கீங்க...'' என்றபடி அருகில் வந்து அமர்ந்தான் பாலு.

மகனிடம் மனம் திறந்து பேசக்கூடிய நிலையில் இல்லாதிருந்த கன்னைய்யா, ''ஒண்ணும் முக்கியமான விஷயம் இல்லேடா'' என்றவர், ''உனக்கு ஆபீஸுக்கு நேரமாகலே? நீ குளிச்சு முடிச்சுட்டேல்லே? சாப்பிட்டுட்டு ஆபீஸுக்குப் போய் வா. எனக்கு ராத்திரி பூரா தூக்கமில்லை. ஒரே டயர்டா இருக்கு. சாப்பிட்டுத் தூக்கம் போட்டாத்தான் சரிவரும். சாயங்காலம் பேசிக்கலாம்...'' என்று பட்டும்படாமலும் சொல்லி விட்டார்.

அப்பாவாகப் பேசா விட்டால்; அதாவது பேச அவர் விருப்பப்படா விட்டால், அவரைப் பேச வைப்பது முடியாத காரியம் என்பதை அறிந்திருந்த பாலுவும் அதோடு விட்டு விட்டான்.

சாதாரணமாகவே மருமகளிடம் அதிகம் பேசும் பழக்கமில்லாத அவர், மனம்

சரியில்லாததால் மௌனமாகவே, குளியலை முடித்துக் கொண்டு, சாப்பிட்டார்.

மாலையில் காப்பியைக் குடித்து விட்டுக் காலாற நடந்து விட்டு வரலாம் என்று புறப்பட்டார். வழியில் ஒரு பூங்கா தென்படவே, உள்ளே நுழைந்து ஒரு பெஞ்சில் அமர்ந்து கால்களை நீட்டிக் கொண்டார்.

அவர் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

மகளுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்திருந்தார் கன்னைய்யா. அந்த விஷயங்களை மகனிடம் சொல்லி விட்டுப் பணம் கேட்க வந்திருந்தார் அவர். 'தான் வசதியாய் இருப்பதை அப்பா தெரிந்து கொண்டு விட்டால், அதிகமாகப் பணம் கொடு என்று கேட்பாரோ என பயந்து, செய்து வைத்த நகைகளைக் கூடத் தம்மிடம் மறைத்து வைத்த மகன் என்ன பெரிதாகப் பணம் கொடுத்து உதவப் போகிறான்?' என்று அவர் மனம் வேதனைப்பட்டது. 'இவ்வளவு சாமர்த்தியம் அவனுக்குத் தானாக வந்திருக்காது. அவன் மனைவிதான் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும்' என்று நினைத்த அவர், அப்படிப்பட்ட அவளை முன்னால் வைத்துக் கொண்டு மகனிடம் பணம் கேட்டால் பைசா கூடப் பெயராது என்றும் நினைத்தார்.

'உங்கப்பா எதுக்கு வந்திருக்கார் தெரியுமில்லே? உங்க தங்கச்சிக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருப்பாரு. உங்ககிட்ட பணம் கேட்க வந்திருப்பாரு. நீங்க உடனே வள்ளலா மாறி, 'என்ன வேணும்னாலும் செய்யறேன்பா'ன்னு எக்கச்சக்கமா மாட்டிக்காதீங்க. நமக்கும் ஒரு பொண்ணு இருக்கா, ஞாபகமிருக்கட்டும்... இந்த நகையையெல்லாம் அவளுக்காகப் பண்ணி வச்சிருக்கோம். யாருக்கோ எடுத்துத் தானம் பண்ண இல்லே' என்று இப்போதே கூட அவனிடம், மருமகள் எச்சரித்து வைத்திருப்பாள் என்று தோன்றியது கன்னைய்யாவுக்கு.

மறுநாள் காலை பாலு ஆபீஸிக்குச் சென்ற பின், அவனை ஆபீஸிலேயே சந்தித்து, நிலைமையை விளக்கித் தம் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டும். அதுதான் சரியான வழி என்று பட்டது அவருக்கு.

வெகுநேரம் கழித்து நிம்மதியாக வீடு திரும்பினார் கன்னைய்யா.

கதவு மூடியிருந்தது. உள்ளேயிருந்து மகனும் மருமகளும் பேசிக் கொண்டிருப்பதும், அதில் 'மாமா', 'அப்பா' என்று தன் விஷயம் அடிபடுவதையும் கேட்ட அவர், என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் கதவைத் தட்டாமல் கூர்ந்து கேட்டார்.

ரம்யாதான் பேசிக் கொண்டிருந்தாள்.

''இதென்ன கேள்வி, அப்பா எதுக்கு வந்திருக்கார்னு? போன மாசமே லெட்டர் போட்டிருந்தார் இல்லே, உங்க தங்கச்சிக்கு ஒரு நல்ல இடம் தகையறமாதிரி இருக்குன்னு! அந்த இடம் நிச்சயம் பண்ணியிருப்பாரு. விஷயத்தைச் சொல்லி விட்டுப் பணம் கேக்க வந்திருப்பாரு.''

''ஐயய்யோ'' என்ற பாலு ''இப்ப திடீர்னு பத்தாயிரம் கொண்டா, பன்னிரெண்டாயிரம் கொண்டான்னா, எங்கே போறது? யாருகிட்டே கேக்கறது? பி.எப். லோன், பெஸ்டிவல் அட்வான்ஸ்ன்னு போட்டாக்கூட ஐஞ்சாயிரத்துக்கு மேல் வராதே? என்று அலறியதும், ''யார்கிட்டே யாவது ஏன் கேக்கணும்?'' என்ற ரம்யா, ''நாம எதுக்கு இவ்வளவு நகை சேர்த்து வச்சிருக்கோம்? சமயத்திலே உதவியா இருக்கத்தானே?'' என்றாள்.

''என்ன சொல்றே நீ? இந்த நகையை எல்லாம் நம்ப ராதாவுக்குத்தானே நீ சேர்த்து வச்சிருக்கே? அதை எப்படி...'' என்று அவன் இழுத்த போது —

''என்னங்க நீங்க? நான் உங்ககிட்டே அப்படி சொன்னேனா? இப்ப யாருக்கு அவசரம்? உங்க தங்கச்சிக்கா? இல்லே ராதாவுக்கா? இப்ப இந்த நகையெல்லாம் வச்சு எவ்வளவு பணம் வருமோ அவ்வளவு வாங்குங்க. ஆபீஸ்லே லோன் போட்டுப் பணம் எடுங்க. அப்பா கேக்கற பணத்தைச் சுணங்காமே கொடுத்தனுப்புங்க. பெரியவங்க மனசு சந்தோஷப்பட்டாத்தான் நாம நல்லாயிருக்க முடியும்!'' என்றாள்.

''அப்ப ஏன் ரம்யா? நம்ப நகை பண்ணின விஷயத்தை எல்லாம் அம்மா கேட்ட போது சொல்லாம இருந்தே? அப்பாகிட்டே கூடக் காட்ட வேணாம்னு சொன்னயே ஏன்?'' என்று பாலு கேட்டதும், கன்னைய்யாவும் காரணத்தைத் தெரிந்து கொள்ளக் காதைக் கூர்மையாக்கிக் கொண்டார்.

''அது வந்துங்க...'' என்று ஆரம்பித்த ரம்யா, ''நான் மாமாவை தப்பாச் சொல்லலே. ஆனா அவருக்கு ஏனோ சேமித்து வைக்கணுங்கற எண்ணமே வந்ததேயில்லை. பெரிய கை அவருக்கு. மெட்ராஸ்லே நமக்கு உறவு முறை ஜாஸ்தி. எல்லாருக்கும் எல்லாமும் செய்யணும்னா முடியற காரியமா? நிறைய அநாவசியமான செலவு பண்ணி, பணம் போதாமே அவதிப்படறாரு. அவருகிட்டே போயி நாம, 'நகை பண்ணியிருக்கோம்' அது இதுன்னு காட்டினா அவருக்கு என்ன தோணும்? இவன்தான் இவ்வளவு வசதியாயிருக்கானே இன்னும் கொஞ்சம் சேர்த்துப் பணம் அனுப்பினா என்னன்னு தோணும்? அவரு கேட்டுட்டா நம்மாலேயும் முடியாதுன்னு சொல்ல முடியாது. அப்புறம் நாம எங்கே சேமிக்கறது? இது போன்ற அவசர நேரத்துலே அப்பாவுக்கு எப்படி உதவறது? அதுக்காகத்தாங்க மறைச்சு வச்சேன். வேறே எந்த கெட்ட எண்ணமும் இல்லேங்க...'' என்றாள்.

வெளியே கேட்டுக் கொண்டு நின்றிருந்த கன்னைய்யாவின் கண்களிலிருந்து நீர் பொழியத் தொடங்கியது. 'இப்படிப்பட்டவளைப் போய்த் தப்பாக நினைத்தோமே' என்று அவருக்கு அவமானமாக இருந்தது.

போராட்ட ஜனநாயகம்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

"நமது நாட்டில் இன்று ஜனநாயகம் நிலவுகிறதா?" என்று கேட்டால் "ஆம்! உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயகம் இந்தியாதான்!" என்று எல்லோரும் சொல்வோம். உண்மைதான். ஆனால் ஜனநாயகப் பண்புகளான சமத்துவம், சுதந்திரம், சம வாய்ப்பு, போன்ற உயர் பண்புகள் இங்கே எப்படி செயல்படுகின்றன என்று பார்த்தால் ஜனநாயகத்தின் இந்தத் தன்மைகளை மக்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை; அதை விடப் பரிதாபம் இவை பற்றித் தலைவர்கள் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை.

ஜனநாயகம் எல்லா இடங்களிலும் பண நாயகமாக இருக்கிறது. ஒரு பாலிடெக்னிக்குக்கு அட்மிஷன் வாங்குவதிலிருந்து ஒரு சப்–இன்ஸ்பெக்டர் வேலை வாங்குவது வரை எங்கும் பணம்தான் பேசுகிறது. மக்களுக்கு உரிமைகள் உண்டு என்பதை அதிகார வர்க்கம் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. ஆட்சியைப் பிடித்துவிட்ட அரசியல்வாதிகளும் அரசு அதிகாரிகளும் அதிகாரம் செய்யவே தாங்கள் அவதாரம் எடுத்திருப்பதாக எண்ணுகிறார்கள். தடுப்புக் காவல் சட்டங்களும், பிடிக்காதவன் மீது பொய் வழக்குத் தொடுக்கக் காவல் துறை உபயோகிக்கப்படுவதும், சொந்தத் தொழில் செய்பவனிடத்து அரசாங்கம் செய்யும் கெடுபிடிகளும் மனித சுதந்திரம் இங்கே மதிக்கப்படுவதையல்ல, மிதிக்கப்படுவதைத்தான் உணர்த்துகிறது.






"அமைச்சர்கள் வருவார்கள், போவார்கள். சட்டம் எதை நியாயம் என்று சொல்கிறதோ அதை நிலைநிறுத்துவேன்!" என்று தார்மீக உணர்வுகளுடன் நிர்வாகப் பொறுப்பிலும் ஆட்சிப் பொறுப்பிலும் இருந்தவர்கள் செயல்பட்ட காலம் மாறி விட்டது. அதிகார வர்க்கம் எங்கே புகுந்து விளையாடும், எங்கே தன் ஆதிக்கத்தைக் காட்டும், என்பதற்கு எல்லையே இல்லாமல் போய் விட்டது. காங்கிரஸ்காரர்களே நாடாளு மன்றத்தில் 'இந்தியன் ஏர்லைன்ஸ்' அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இதர பயணிகளையும் கேவலமாக நடத்துகிறார்கள் என்கிற குற்றச்சாட்டைப் பகிரங்கமாகக் கூறி இருக்கிறார்கள். 'இந்தியன் ஏர்லைன்ஸ்' யார் வீட்டு நிறுவனம்? நமது நிறுவனம். நாம் கொடுக்கிற வரியில் விமானம் வாங்கப்பட்டு, அதை நிர்வகிக்க நமது வரியில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நம்மை — பயணிகளை — துச்சமாக மதிக்கலாமா?

ஓரளவுதான் மக்கள் இதுபோன்ற அநியாயத்தையும் அவமானத்தையும் ஏற்றுக் கொள்வார்கள். அதற்குப் பின் சீற்றம், போராட்டம், வன்முறை, என்றுதான் போகும். இதை எந்த ராணுவப் பட்டாளம் வந்தாலும் தடுக்க முடியாது.

மயிலாடுதுறையில் ஒரு கூட்டுறவு சர்க்கரைத் தொழிற் சாலையின் நிர்வாக இயக்குனர் தொழிற்சாலையின் பங்குதாரர்களை உட்கார வைத்துப் பேசுகிற அடிப்படை மரியாதைகளைக் கூடக் கொடுக்காத போது — அவர்களை உதாசீனப்படுத்திக் கேவலப் படுத்திய போது — பங்குதாரர்கள் என்ன செய்தார்கள்? எல்லோரும் கையெழுத்துப்



"நம்ப மாதர் சங்கத்திலே கல்யாணம் ஆகிக் குழந்தை பெற்றவங்க மட்டும் தானே அங்கத்தினர்களாகச் சேருகிறார்கள்? என்ன பண்ணலாம்?"

"'மதர்ஸ் சங்கம்'னு பேரை மாத்திடலாம்!"

— வி. பி. கிருஷ்ணசாமி.

போட்டு "இவரை வேலையை விட்டு நீக்கு!" என்று எழுதிக் கொடுத்தார்கள். நிர்வாக இயக்குனருடைய ஆணவத்தினால் அவருக்கும் கீழ் வேலை பார்த்த நல்லவர்களெல்லாம் வேலையை விட்டுப் போய் விட்டார்கள் என்று பங்குதாரர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இது ஒரு புதிய அணுகுமுறை. **Agitational Democracy**. போராட்டத்தின் மூலம் நியாயத்தை நிலைநிறுத்தும் 'போராட்ட ஜனநாயகம்'. ஜனநாயகத்தில் நியாயம் கிடைக்காத போது, சமத்துவம் தரப்படாத போது, சுதந்திரம் நசுக்கப்படும் போது அங்குள்ள நல்லவர்களும், படித்தவர்களும், விஷயம் தெரிந்தவர்களும் சும்மா இருக்கப் போவதில்லை. போராடத் துவங்குகிறார்கள். ஒரு தனி மனிதன் போராடினால் அரசாங்கம் காவல் துறையை ஏவி அவனை அடித்து உதைத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லலாம். ஆனால் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் அமைப்பாக — ஓர் இயக்கமாகப் — போராடும் போது அங்கே நியாயம் வெல்கிறது. அடக்கு முறை பயன்படுவதில்லை; தோற்றுப் போகிறது. இத்தகைய போராட்ட ஜனநாயகத்துக்கு அவசியம் ஏற்படுவது அந்நாட்டின் ஆட்சித் தலைவர்களுக்கும் அரசாங்க யந்திரத்திற்கும் தலைகுனிவு. ஏனெனில் மக்களுடைய பிரச்னைகளையும் குறைகளையும் உடனுக்குடன் கவனித்து அந்த ஆட்சி சரிவர நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதையே போராட்ட ஜனநாயகம் உணர்த்தும். ஒரு திறமைமிக்க நல்லாட்சி தீர்க்க தரிசனத்துடன் செயல்பட்டுப் போராட்டங்களுக்கே இடமில்லாமல் செய்து விடும். போராட்டங்கள் வெடித்த பிறகு அந்தப் பிரச்னையில் கவனம் செலுத்த முன் வருவது ஆட்சியின் ஆற்றலின்மையையே உணர்த்தும். நிலைமை கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போகும் போது மட்டும் செயல்படுவது, அதுவரை அலட்சியமாக இருப்பது அல்லது அடக்கு முறையை உபயோகிப்பது, என்பது இன்று அரசாங்கத்துக்கு வழக்கமாகி விட்டது. அதாவது நியாயங்களுக்கு உடனடியாக அரசாங்கம் செவி சாய்ப்பதில்லை.

இதன் விளைவாக இந்தியாவில் போராட்ட ஜனநாயகத்துக்குத் தேவை அதிகரித்து விட்டது. அரசாங்க அநியாயங்களும், கட்சிக்காரர்களது தூண்டுகோலால் செயல்படும் அக்கிரமங்களும் அதிகரிக்கும் போது ஜனநாயகத்தில் மக்கள் கிளர்ந்தெழுந்து தங்களுடைய உரிமைகளுக்காகவும் — நியாயத்திற்காகவும் போராடுவதைத் தவிர்க்க முடியாது. இப்போதெல்லாம் லஞ்சம் வாங்கும் அதிகாரிகளை மக்கள் கூட்டம் 'கேரோ' செய்கிறது; கள்ளச் சாராயம் கிராமங்களில் விற்கப்படுவதை எதிர்த்துக் கிராம மக்களே போராடுகிறார்கள். தஞ்சை மாவட்டத்து ஆக்கூரில் மின்சார ஜெனரேட்டருக்குக் கடன் வழங்கும் போது, கமிஷன் பெற்றுக் கொண்ட வங்கி மானேஜருக்கு எதிராக மக்கள் போர்க் கொடி உயர்த்தினார்கள்.

ஏர்லைன்ஸ், வங்கி, ரேஷன் கடை, அரசாங்க அலுவலகம், காவல் துறை என்று நமது வரியில் ஜீவனம் நடத்துபவர்கள் செய்கின்ற அநீதிகளுக்கெதிராக வரி கொடுப்பவர்களாகிய நாமே போராடித்தான் நியாயம் பெற வேண்டுமென்றால்; இது எவ்வளவு கேவலம்? அந்தந்தத் துறைகளிலுள்ள நல்லவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

போராட்ட ஜனநாயகம் இங்கே முளைவிட ஆரம்பித்து விட்டது என்பதைத்தான் இன்று நம் தேசத்தில் உள்ள சூழ்நிலை உணர்த்துகிறது. பத்திரிகைச் செய்திகள் பல இதைத்தான் சுட்டிக் காட்டி எச்சரிக்கின்றன. இன்றிருக்கும் ஆளுனர் போன்ற அறிஞர்கள், ஆளுநரின் ஆலோசகர்கள், பல்கலைக் கழகத்துப் படித்த பெருமக்கள் எல்லாம் இதன் ஆபத்தான பின்விளைவுகள் என்ன என்பதை யோசிக்க வேண்டும். போராட்ட ஜனநாயகத்துக்கு அவசியமில்லாமல் அமைதியான ஜனநாயகத்திலேயே மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். இதற்கு என்ன வழி? அரசாங்கத்தின் அதிகாரங்களைக் குறைத்து மக்களுக்கே அதிக அதிகாரங்களை வழங்குவதுதான் வழி. அதாவது நாடாளுமன்றத்தில் மட்டுமின்றி, குக்கிராமப் பஞ்சாயத்து வரை படிப்படியாக மக்களின் ஜனநாயக அமைப்புக்கள் மலர வேண்டும். அந்த அமைப்புக்களுக்கு அவ்வட்டார மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க அதிகாரமும் தரப்பட வேண்டும். தங்கள் முன்னேற்றத்துக்குத் தாங்களே திட்டம் தீட்டுகிற உரிமை இருக்க வேண்டும். அதற்கான நிதி வசதி வழங்கப்பட வேண்டும். அதிகாரங்களை மையத்தில் குவிக்காமல் இப்படி அதிகாரங்களைப் பரவலாக்குவதே மெய்யான ஜனநாயகம். இதுதான் அதிகார ஆணவத்துக்கும் பண நாயகத்துக்கும் இடமளிக்காது. போராட்ட ஜனநாயகத்துக்கும் தேவையில்லாமல் போகும்.



* 180 சார்ட்களில் ஒரு சில.

சீதையைத் தீ தொட்டது ஏன்? ரூப்கன்வரைச் சுட்டது ஏன்?



* கண்காட்சியில் மாணவிகள்.

''சீதையைத் தொட்ட தீ, ரூப்கன் வரைச் சுட்டது!''

—இவ்வாறு கவித்துவமாய் ஒரு தலைப்புக் கொடுத்தார்கள் கவிதைப் போட்டிக்கு. எங்கே? கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில். இங்கு பெண்ணுரிமை வாரம் கொண்டாடிய போது கல்லூரி மாணவிகளுக்கான கவிதைப் போட்டி நடத்தது.

அந்தப் போட்டியில் படிக்கப்பட்ட கவிதைகளில்தான் என்ன ஓர் ஆவேசம்!

''அங்கே ராமனுக்குப் பணிவிடை செய்ய வேண்டிய கடமை சீதைக்கு இருந்ததால், சீதையைத் தீண்டிய தீ, கொல்லாமல் விட்டு விட்டது: ரூப்கன்வரின் கணவன் இறந்து விட்டதால், அவளுக்கு இனி வாழ்க்கை அவசியமில்லை என முடிவு கட்டிச் சுட்டு விட்டது!'' என்று ஒரு மாணவி சொன்ன போது வானதிரக் கரகோஷம்!

இந்தியாவில் எத்தனையோ விதமான ராமாயணங்கள் வழக்கில் இருந்தாலும், நேபாள மொழி ராமாயணம்தான் சிறப்பானது என்று குறிப்பிட்டார் ஒரு மாணவி. காரணம், அதிலே ராமனின் கட்டளையைப் பெண்ணினத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியாய்க் கருதி, சீதை தனியே காட்டுக்குப் போய் விடுவதாய் வருகிறதாம்!

கல்லூரி முதல்வர் வசந்திதேவி, ''இன்றைய இளம் பெண்கள், பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு கொதித்து எழும் மனநிலையைப் பெற்றிருக்கிறார்கள்; அவர்களுக்கு மேலும் விழிப்புணர்ச்சியூட்டத்தான் நாங்கள் பெண்ணுரிமை வாரம் கொண்டாடினோம்'' என்றார். அப்போது, மாணவிகளைப் பல குழுக்களாய்ப் பிரித்து, 'வரதட்சிணைக் கொடுமையை ஒழிப்பது எப்படி' என்றும் விவாதிக்க வைத்தார்களாம். ஒவ்வொரு குழுவும்,

பல்வேறு கருத்துக்களைக் கொண்ட அறிக்கை தயாரித்துக் கொடுத்து விட்டது!


இக் கல்லூரியில் 'மாணவிகள் நல் வாழ்வுக் குழு' என்று சுமார் பத்து ஆசிரியைகள் அடங்கிய குழு இயங்குகிறது. இவர்களில் தினமும் இரண்டு பேர், முறை போட்டுக் கொண்டு கல்லூரி முடிந்து ஒரு மணி நேரம் வரை ஒரு தனி அறையில் இருப்பார்கள். மாணவிகள் தங்களுக்கு எந்தப் பிரச்னை என்றாலும், இவர்களிடம் எடுத்துச் சொல்லலாம். விதம் விதமான பிரச்னைகள் பலவற்றைத் தீர்த்து வைக்க ஆசிரியைகள் எடுத்துக் கொள்ளும் முயற்சி ஒருபுறமிருக்க, ''ஒருவருக்கு எத்தனை பெரிய பிரச்னை என்றாலும், இன்னொருவரிடம் மனம் திறந்து அதைச் சொல்லும்போதே மனம் லேசாகி விடுமில்லையா? சினிமாக்கள் எத்தனை மோசமாய் இளைய சமுதாயத்தினரைப் பாதிக்கின்றன என்று மாணவிகள் நல்வாழ்வுக் குழுவினருக்கு நன்கு தெரியும்'' என்று குழு அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார்.

கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் குறிப்பிடத்தக்க இன்னோர் அம்சம் இங்குள்ள 'கண்காட்சி'. 180 சார்ட்கள் இதில் இடம் பெற்றுள்ளன. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைச் சித்திரிக்கும் பகுதியில், குறைந்த கூலியில் ஆரம்பித்து, வரதட்சிணை, கற்பழிப்பு, சதி, இரு தார மணம், பால்ய விவாகம் என்று பல தரப்பட்ட பிரச்னைகளுக்குப் 'பளிச்' கார்ட்டூன்கள் உள்ளன. பெண் குழந்தைகளைப் பிறந்ததுமே விஷம் கொடுத்துக் கொன்று போடும் கொடுமை பற்றின திடுக்கிடும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

'பாஸிடிவ்' அம்சங்களும் உண்டு. பெண்களின் உரிமைகளை மீட்டுத் தந்த, புகழ்மிக்க கோர்ட் தீர்ப்புகளின் விவரங்கள் இடம் பெற்றுள்ளன. சட்ட ரீதியாய்ப் பெண்களுக்குள்ள உரிமைகள் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. பெண்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனால் எப்படி நடத்த வேண்டும்; வரதட்சிணை கேட்டுப் புக்ககத்தினர் கொடுமை செய்தால் என்ன செய்ய வேண்டும்; கற்பழிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் பெண்களுக்கு எடுத்துச் சொல்லும் அட்டைகள் உள்ளன. பெருமைப்படத்தக்கப் பெண் திலகங்கள் பற்றின விவரங்களும் உண்டு. (உ.ம்): ராக்மேபாய் என்பவர் பால்ய விவாகத்தினால் இளம் பருவத்திலேயே விதவையானவர். இவர் மருத்துவம் படித்து மராட்டிய மாநிலத்தின் முதல் பெண் டாக்டர் ஆனாராம்!

விரைவிலேயே இலவச சட்ட உதவி மையமும் இக் கல்லூரியில் துவக்கப்படவிருக்கிறது. உள்ளூர் வக்கீல்களும், மாஜிஸ்திரேட்டும் தொழில் ரீதியான ஆலோசனைகள் வழங்கவிருந்தாலும், கல்லூரி மாணவிகள்தான் சுற்றுப்புற கிராம மக்களுக்குச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து சட்டப் பிரச்னைகள் உள்ள மக்களை இந்த மையத்துக்கு அழைத்து வரப் போகிறார்கள். இத்தகைய ஆலோசனை மையம், வேறு எந்தக் கல்லூரியிலும் இல்லையாம்!

— எஸ். சந்திரமௌலி.



சிலந்திகளிடம் இப்படி ஒரு பழக்கம்: ஆண் சிலந்தி வந்து, பெண் சிலந்தி கட்டியுள்ள வலையில் சில இழைகளைப் பிடித்து மெல்ல அசைக்கிறது. அசைப்பது ஏதோ ஓர் இசை போல இருக்கிறது. ''நான் இரை அல்ல; தைரியம் உள்ள ஆண்'' — என்பது அதன் பொருள்.

பெண் சிலந்தி இதைப் புரிந்து கொண்டால் மெல்ல ஆண் சிலந்திக்குப் பக்கத்தில் வருகிறது. மெல்லிய இழைகளால் சுற்றப்பட்ட 'பரிசை' ஆண் சிலந்தி, பெண் சிலந்திக்குக் கொடுக்கிறது. பெண் சிலந்தி, மெல்ல அந்தப் பரிசாகிய இரையை அவிழ்க்கும் போது, ஆண் சிலந்தி நைசாகக் காதலிக்கத் தொடங்கி விடுகிறது!

ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்.
தகவல்: சேலம் சக்திக்கொடி.

''பொங்கலுக்குப் பத்து நாட்களுக்கு முன்பே நம்ம நாலு பசங்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு வரும்படி எங்க அப்பா கடிதம் போட்டிருக்கிறார்!''

''நம் கல்யாணத்துக்கு அப்புறம் நாம் இருப்பதையே கண்டு கொள்ளாத உங்க அப்பாவுக்குத் திடீரென ஏன் இந்த அக்கறை?''

''அவருடைய தையல் கடையில் காஜா எடுத்துப் பட்டன் வைக்கும் பையன்கள் அதிகக் கூலி கேட்டு ஸ்ட்ரைக் செய்கிறார்களாம்!''

— க. ரவீந்திரன்.



கலியுகம்



பிரபு போலீஸ் இன்ஸ்பெக்டர். நாணயம், நேர்மை, லஞ்சமின்மை — இவற்றின் கலவை. அன்பான மனைவி — துறுதுறுப்பான பையன். (அந்த கொழுக் மொழுக் பையன், அவன் மூக்குக் கண்ணாடிக்கு மேல் வழியாகப் பார்க்கும் பார்வை — தூள்!) இவர்களை வைத்து இந்த நாணயமான இன்ஸ்பெக்டரை மடக்கி, அவரையே ஜெயிலுக்கு அனுப்பும் வில்லன்.

ஜெயிலில் சந்திக்கும் இன்னொரு கைதி — ரகுவரன். சாது. அவருடைய சுவையான ஃப்ளாஷ் பேக்கில் ஜோடியாக அமலா. 'சுவையான' என்று சேர்த்ததற்குக் காரணமே அமலாதான். ஹோட்டலில் பில் கொடுக்க வைத்து வம்பில் மாட்டி, மறுபடி அழைத்துப் போய் அதே ஹோட்டலில்... படத்தின் சொற்பமான சந்தோஷத் தருணங்கள் — அமலா, ரகுவரன் காதல் மலரும் காட்சிகள்.

பிரபுவை எதிர்க்கும் வில்லனின் மகள்தான் அமலா என்று யூகித்தவர்கள் தமிழ் சினிமாப் பாடத்தில் எண்பது மார்க் வாங்கி விட்டீர்கள். ரகுவரனை ஜெயிலுக்கு அனுப்பியதும் அதே வில்லன்தான் என்பதையும்.. சொல்லித் தெரிய வேண்டுமா, என்ன?


இவ்வளவு தான் சார் கதை. மற்றதெல்லாம் டிஷ்யூம், டொஷ்யூம், புஷ்யாங்தான். நீள, நீள, நீ...ளமான சண்டைக் காட்சிகள். அதுவும் ஜெயில் அண்டர்கிரவுண்டில் பிரபுவுக்கும், ஒரு 'பல்லான' கைதிக்கும் இடையில் சாக்கடைத் தண்ணீரில் நடக்கும் யுத்தம்! அதன் ஆரம்பம் என்ன, முடிவு என்ன — எதற்காக அந்தச் சண்டை, யார் அந்தப் பல்லாண்டி? கேட்பதென்றால் இன்னும் நிறையக் கேட்கலாம். பதில்தான் கிடைக்காது.

மியூஸிக்? சந்திரபோஸ். ஜெயிலில் வரும் ஜனகராஜின் கோரஸ் பாடல் மட்டும் தாளம் போட வைக்கிறது. மற்றதெல்லாம் புஸ்.

கற்காலமானாலும், கலியுகமானாலும் — தமிழ் சினிமாவின் விதி என்று ஒன்று இருக்கத்தான் இருக்கிறது — ஹும்!

— ஜெயமன்மதன்.

இந்த குடும்பத்திற்கு பிடித்தமான சோ
எது என்று யூகிக்க முடியுமா?



சன்ஸார். குடும்பம் முழுவதும் விரும்ப
ஒரே குளியல் சோப்.

சன்ஸார் சோப், உலகின் சில முக்கிய தொழிற்சாலைகளின் ஒன்றான இத்தாலியன் தொழில் நுட்ப துறையின் மூலம் நவீனமயமாக்கப்பட்ட தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. சுத்தமான மூல பொருட்களை மட்டுமே கொண்டு தயாரிக்கப்பட்டு உங்கள் பணத்திற்கு மதிப்பையும், உங்கள் குடும்பத்திற்கு நாள் முழுவதும் புத்துணர்ச்சியை கொடுக்கிறது.

FROM THE HOUSE OF MYSORE SANDAL SOAP

கர்நாடகா சோப்ஸ் அண்டு டிடர்ஜென்ட்ஸ் லிட்.,பெங்களூர் 560



அண்ணா
தங்கை
விசேட சலுகை!
Sansar
THE FRESH FAMILY BATH SOAP
Sansar
புதிய
குறைக்கப்பட்ட
விலை ரூ.3.75+
உள்ளூர் வரிகள்
தனி
Sansar
THE FRESH FAMILY BATH SOAP

ஓடறதுதான் ஓட்டும்!

பாரதி வீரராகவன்

மணி பத்துக்கு மேலிருக்கும்.

படுக்கையில் விழுந்த முரளிக்கு, உடம்பெல்லாம் அடித்துப் போட்ட மாதிரி வலித்தது. சுட்டெரிக்கும் வெயிலில், தெருவில், செக்குமாடாகச் சுற்றிச் சுற்றிக் கால் தேய நடந்த அலுப்பு அவனுக்கல்லவா தெரியும்... கால்கள் இரண்டும் சன்னமாய்க் கடுகடுத்தன. தூக்கம் வராமல் புரண்டான்.

இன்னும் அம்மா வந்து படுக்கவில்லையே! ஒருக்களித்துத் திரும்பி, சமையல் கட்டைத் துழாவினான்.

அம்மா, அவசர அவசரமாய் இரண்டு வாய் அள்ளிப் போட்டு, மிஞ்சியைக் கழுவித் துடைத்து, விளக்கை அணைத்து, கூடத்துக்கு வந்தாள். ஒரு மணி நேரமாய்த் தூக்கம் வராமல், புரண்டு கொண்டிருக்கும் மகனைக் கனிவுடன் ஒருதரம் முழுசாய்ப் பார்த்தாள்...

மனத்தை என்னவோ செய்து உறுத்தியது.

'...ஹூம்... முரளி பிறந்தப்போ, அவனப் பாவாட்டம், மூக்கும் முழியுமாச் செக்கச் செவேல்னு, எப்படி இருந்தான்? கொள்ளை அழகு. இப்போ... வெயில்னும் பார்க்காமெ, மழைன்னும் பார்க்காமெ, தெனமும் அலையறதிலே, ஆள் அடையாளமே தெரியாமெ மாறிப் போயிட்டான். உடம்பு சுக்கு மாதிரி ஆய்ஞ்சு, கறுத்தே போச்சு. இவன் கூட படிச்சதுகள், எல்லாம், காலேஜ் போறதுகள். அதுக்கெல்லாம், இவனுக்குக் குடுத்து வெக்கலையே...? அப்பா திடீர்னு, மண்டையைப் போட்டதாலே, இவன் படிப்பு ஹைஸ்கூலோட நின்னு போச்சு. சோத்துக்கும், துணிக்கும் வழிவகை வேண்டாமா? தெருத் தெருவா, நாயா அலைஞ்சு, லாட்டரிச் சீட்டு விக்கறான். தெனமும் பத்தோ பதினைஞ்சோ கெடைக்கறது. குடும்ப பாரம் பூரா இவன் தலையிலே விடிஞ்சது... அப்பப்பா... ரெண்டு பேர் வயிறு கழுவ என்ன பாடு பட வேண்டியிருக்கு? எங்க கஷ்டம் எப்ப விடியுமோ? அந்தப் பெருமாளுக்குத் தான் தெரியும்...'

—சின்னஞ் சிறு வயதில், முரளிக்கு இப்படியொரு நிலை வந்து விட்டதே என்ற தவிப்பும், தடுமாற்றமும், தினமும் வருவது தான். அந்த நிமிஷங்களில் நெஞ்சம் ரணகளமாகி, அந்தத் தாயின் கண்களில் ஈரம் எட்டிப் பார்ப்பதும் சகஜம்தான்.

சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள்.

மகனருகில் பாயை விரித்து, விளக்கை அணைத்து உட்கார்ந்தவள், சட்டென்று அவன் கால்களிரண்டையும் எடுத்து மடி மேல் போட்டு, மெல்ல அமுக்கி விட ஆரம்பித்தாள். செருப்பில்லாமல் நடப்பதால், முரளியின் பாதங்கள் கன்றிச் சிவந்து போயிருந்தன.

"முரளி... கால் கடுப்புத் தீரக் கொஞ்சம் மண்ணெண்ணெய் தேய்ச்சு, நீவி விடட்டுமா...?" எனக் கரிசனமுடன் கேட்டாள்.

"அம்மா... வேண்டாம்மா. மகன் காலை அம்மா பிடிக்கறது பாவம்மா. விட்டுடும்மா" என்றான் முரளி.

சும்மா ஒப்புக்குத்தான் அப்படிச் சொன்னான்.

நிஜமாய், அம்மாவின் இதமான ஸ்பரிச சுகம் இப்போது அவனுக்குத் தேவைப்பட்டது. கால்வலி போன இடம் தெரியவில்லை. கண்கள் தானாகச் சொருகத் தொடங்கின.

"முரளி தூங்கிட்டியாப்பா" என்று கேட்டாள் அம்மா.

நெருங்கி வந்த தூக்கத்தை வலுக்கட்டாயமாய் விரட்டி, "இல்லே... ஏம்மா?" என்றான் முரளி.

"நாளைக்கு நீ சீட்டு விக்கப் போகணுமாப்பா?"

"சரியாய் போச்சு போ... நாளைக்குச் சந்தை கூடறநாள். தெனத்தை விட அம்பது சீட்டு அதிகமாப் போட்டிருக்கேன். ஏம்மா, நாளைக்கு என்ன விசேஷம்? அப்பா திதியா? சீட்டு விக்கப் போகணுமான்னு இழுத்த மாதிரி கேக்கறயே...! போனாத் தானேம்மா நம்ம வயிறு வாடாமெ இருக்கும்."

அவன் சொன்ன தினுசில் நிறைய அக்கறை புலப்பட்டது.

அம்மா ஒரு கணம் ஏதும் பேசாமல் விக்கித்துப் போனாள்.

முரளி எழுந்து உட்கார்ந்து மறுபடியும் பேசினான்

"தெனமும் நூறு சீட்டு விக்கறேன். இருபது ரூபா கமிஷன் கெடைக்
கறது. டவுனுக்குப் போக வர பஸ் டிக்கெட்; ரிசல்ட் பேப்பர், மத்தியானம்
ம, வடைன்னு அஞ்சு ரூபா பக்கம் செலவாயிடறது. மீதிதான் நம்ம செல
வுக்குன்னு உன் கையிலே தர முடியறது. ஆனா நாளைக்கு முழுசா இருபத்
தஞ்சு ரூபாய் தரப் போறேனே. வாரத்திலே ஒருநாள்தானே இப்படிக்
கிடைக்கும்?"—எனப் பெருமிதமுடன் சொன்னான்.





டெய்லர்: "ஆபீஸில் மேஜையடி வருமானம் உங்களுக்கு ஜாஸ்தின்னு கேள்விப்பட்டேன்!"

அவன்: "அதுக்காக நான் தைக்கக் கொடுத்த சட்டைக்கு இப்படியா பாக்கெட் வைக்கிறது?"

— உ. ராஜாஜி

மகனின் பொறுப்புணர்ச்சியைக் கண்டு, குளிர்ந்து, மனசுக்குள் சிலாகித்து மகிழ்ந்தாள், அம்மா.

..."ஆமா முரளி... வாரத்திலே ஒரு நாள் கெடைக்கற வருமானம் உனக்குப் பெரிசு... ஆனா... வருஷத்திலே ஒருநாள் வர்ற ஒன் பிறந்த நாள் எனக்குப் பெரிசாத் தெரியறதே..." — என அவன் பேசிய தோரணையிலேயே பேசி அவனை மடக்க முயற்சி செய்தாள்.

"என்னம்மா... சொல்றே?" எனப் புரியாமல் விழித்தான்.

..."நாளைக்கு என் முரளிக் கண்ணுக்குப் பிறந்த நாள். பதினைஞ்சு முடிஞ்சு பதினாறு வயசு ஆரம்பம்!"

"அடடே... மறந்துட்டேன்மா. போன வாரமே சொன்னேயில்லே. அதனாலென்ன விடு. பொழச்சுக் கெடந்து, வசதியும் வந்தா அடுத்த வருஷம் ஜாம் ஜாம்னு கொண்டாடிடுவோம்...." என் விரக்தியுடன் சொன்னான்.

"அப்போ நாளைக்கு எதுவுமே வேண்டாமா?"

"பிறந்த நாள் கொண்டாடற மாதிரியா இருக்கு நம்ம நெலமை? போட்டுக்க மாத்துச் சட்டையைக் காணோம்!" என யதார்த்தமாய்ச் சொன்னான்.

அம்மாவின் நெஞ்சை அந்த வார்த்தைகள் குத்தியிருக்க வேண்டும். குற்ற உணர்ச்சி தலைதூக்க, அப்படியே துடித்துப் போய் விட்டாள். அவளும் இந்த இரண்டு மாதங்களாய், எப்படி எப்படியோ சிக்கனம் பிடித்து, எட்டணா, நாலணாவாய் நூறு ரூபாய்வரை சேர்த்துத்தான் வைத்திருந்தாள், முரளிக்குப் புது பேண்ட், சட்டை வாங்க வேண்டும் என்று.....

போனவாரம் அந்தச் சில்லறையை எல்லாம் எடுத்து, எண்ணி, மளிகைக் கடைக்காரனிடம் தந்து, ஒரு முழு நூறு ரூபாய் நோட்டாய் மாற்றி வாங்கி, மடியில் சொருகி, வீட்டுக்கு வந்து பார்த்தால்..... மடியில் நோட்டில்லை. எங்கோ விழுந்திருக்க வேண்டும். மண்டைக்குள் எரிமலை வெடிக்க, வந்த வழியெல்லாம் தேடினாள். கிடைக்கவே இல்லை. போனது போனதுதான். அந்த இழப்பு அவளை, மூன்று நாள் சாப்பிடாமல் துக்கம் அனுஷ்டிக்க வைத்தது. அதை முரளிவிடம் கூட சொல்லவில்லை.

இந்த இரண்டு நாளாகத்தான் அதையெல்லாம் மறந்து, சகஜநிலைக்கு வந்திருந்தாள்.

"முரளி புதுத்துணி இல்லைன்னாக் கெடக்கிறது. நல்ல நாளும் அதுவுமா வெறிச் சோன்னு இருக்கப்படாது. ஒனக்குப் பிடிச்ச பால் பாயசம் மட்டுமாவது வெச்சுத் தறேன். நாளேக்கு மத்தியானமே வந்துடு."

"நல்லாச் சொன்னே போ... அது எப்படிம்மா முடியும்? தெனம் வர்றதுக்கே ராத்திரியாவிடறது. நாளைக்குச் சீட்டும் அதிகம். மத்தியானத்துக்குள்ளே வித்தாத்தானாச்சு. இல்லேன்னா எந்தலையிலே விடிஞ்சதுதான். ஊஹூம்... நீ செய்யறதை ராத்திரி செய்யறதுதான் நல்லது. அதுதான் தோதுப்படும்."

அவளுக்குச் 'சப்'பென்றாகி விட்டது. விதியைச் சபித்தாள். "சரிப்பா அப்படியே செஞ்சிடறேன். நீ முடிஞ்சாச் சீக்கிரமா வரப்பாரு. கோவிலுக்குப் போய்ப் பெருமாளைச் சேவிச்சுட்டு வருவோம்..."

அவன் பதிலேதும் சொல்லாமல் தலையாட்டியது இருட்டில் அவளுக்குத் தெரியவில்லை.

நாலு வீடு தள்ளியிருக்கும் மோகன் வீட்டில், புதிதாய், டேப்ரிக்கார்டர் பாடிக் கொண்டிருந்தது. சன்னமாய்க் கேட்டது.

மோகனும் இவனைப் போல் லாட்டரி டிக்கட்தான் விற்றுக் கொண்டிருந்தான். ஆனால் இவனைப் போல் கமிஷனுக்கு விற்பவனல்ல; வாரம் ஒரு தடவை கோவை போய், மொத்தமாய் ஆயிரம், ரெண்டாயிரத்துக்குப் பில் போட்டு வாங்கி வருபவன். பில் போடுவதால் வின்னிங் போனஸ் அவனுக்கே கிடைக்கும். இந்த வகையிலும் மோகனுக்கு வருமானம் ஜாஸ்தி. அந்த தெம்பில் தான் பாட்டு ஒலிக்கிறதோ! அம்மாவிடம் காரணம் கேட்டான்.

"எனக்கே நேத்துத்தான் தெரியும். போன வாரம் அவன் வித்த சீட்டிலே ஒரு சீட்டுக்கு ஆயிரம் ரூபா ஒக்காந்துச்சாம். அந்த சீட்டை வாங்கினவன் யாரோ படிக்காத பட்டிக் காட்டு ஏமாளியாட்டம் இருக்கு. நேரா இவன்கிட்டேயே வந்து, சீட்டைக் காட்டி ஏதாவது விழுந்திருக்கான்னு பார்க்கச் சொல்லியிருக்கான். பார்த்ததுமே மோகனுக்குத் தெரிஞ்சு போச்சு. குறுக்கு மூளை ஜாஸ்தியாச்சே...! 'டபக்'குன்னு சீட்டை ஜோபியிலே போட்டுக்கிட்டு நூறு ரூபா விழுந்திருக்குன்னு பொய் சொல்லி டபாய்ச்சிருக்கான். பரிசு விழுந்த இளிச்சவாயனும், வந்தவரைக்கும் சரி, லாபம்தான்னு நூறெ



எழுத்தாளர்: "ஏன் சார், என் கதையைத் திருப்பி அனுப்பிட்டீங்க...?"

எடிட்டர்: "அது பிரகரிக்கிற மாதிரி, இல்லியே...?"

எழுத்தாளர்: "அதான் திருத்த உரிமை உண்டு'ன்னு போடறீங்களே? உங்களுக்குப் பிடிச்ச மாதிரி, திருத்தி எழுதிப் போட்டுட வேண்டியது தானே...?"

— ஆர். வசந்த குமார்.

வாங்கிக்கிட்டு பஸ் ஏறிப் போயிட்டானாம். மோகன் எமகாதகன். சித்த நேரத்திலே தொள்ளாயிரம் அடிச்சுட்டான். அந்தப் பணத்திலேதான் டேப்ரிகார்டர் வாங்கினோம்னு அவனம்மா எங்கிட்டே ரகசியமாச் சொன்னா. நீயும் தான் இருக்கயே வெளுத்ததெல்லாம் பால்னு சொல்லிக்கிட்டு, ஒங்கப்பா மாதிரி... ஒனக்கு அந்த சாமர்த்தியம் எல்லாம் எப்ப வரப் போறதோ" என மோகனின் மேல் ஏற்பட்ட வயிற்றெரிச்சலில், முரளியைக் கையாலாகாதவன் என்ற தோரணையில் சொன்னாள்.

அந்தச் சொற்கள் முரளியைச் சங்கடப் படுத்தியது. மனம் கசந்து 'சுர்'ரென்று கோபம் வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். அம்மாவைத் திட்டுவது ரசாபாசமான விஷயமல்லவா?

"அம்மா... அது சாமர்த்தியமில்லே. துர் சாமர்த்தியம். ஏமாத்திப் பிழைக்கறதும் ஒரு பிழைப்பா? தூ... ஒரு வகையிலே பார்த்தா இதுவும் திருட்டு வேலைதான். அந்தப் பாவ வழியே எனக்கும் காட்டறயேம்மா! நான் நாணயமா உழைக்கிறது உனக்குப் பிடிக்கலையா? இந்த மாதிரி தில்லு முல்லு வேலையெல்லாம் ரொம்ப நாளைக்கு நீடிக்காது. ஒருநாள் இல்லாட்டி இன்னொரு நாள் மாட்டிக்கிட்டே தீரணும். நேர்மைக்கு எப்பவுமே அழிவில்லே."

முரளி வெகு நேர்த்தியாய் அவனை வெளிச்சம் போட்டுக் காட்டினான்.

அது அவளைச் சுட்டெரித்தது. எல்லோரையும் போல் ஒரு சாதாரண மனுஷியாய், பேராசைப்பட்டதை எண்ணிக் கூசிக் குறுகிப் போனாள்.

கொஞ்ச நேரம் இருவரும் பேச மறந்தார்கள். அப்படியே தூங்கியும் போனார்கள்.

சரியாக ஐந்து மணிக்கெல்லாம் அவனுக்கு விழிப்பு வந்து விட்டது.

பத்து மைல் தொலைவில் நிறையக் கடைகளும், நீண்ட தெருக்களும் கொண்ட டவுன்தான் அவன் தொழில் செய்யுமிடம். பஸ் பிடித்துப் போக வேண்டுமே!

குளித்துமுடித்துநெற்றிக்கிட்டுக்கொண்ட முரளி, ஸ்வாமி படத்தைத் தொழுதான்.

"அம்மா ஸ்வாமி படத்துக்குக் கீழே, தினமும் ஒரு சீட்டை நமக்குன்னு எடுத்து வைப்பேன். இதுவரைக்கும் எதுவுமே விழலே. இன்னைக்கு என் பிறந்த நாளில்லையா? ரெண்டு சீட்டு வெச்சிட்டுப் போறேன். நாளையோட நம்ம தரித்திரம் தொலையுதான்னு பார்ப்போம். வரட்டுமா? சாயங்காலம் சீக்கிரமா வந்திடறேன்..."

புறப்பட்டுப் போனான்...

அம்மா வாசல் தெளித்துக் கொண்டிருந்தாள்.

கோலம் போடும் போது இரண்டு மூன்று போலீஸ் ஜீப்புகள் 'சர்' 'சர்' என்று மோகன் வீட்டை முற்றுகையிட்டன. ஏன்?

எல்லோரோடும் சேர்ந்து அவளும் வேடிக்கை பார்த்தாள். போலி லாட்டரிச் சீட்டுக்களைப் பதுக்கி வைத்திருந்ததற்காக மோகனைப் பிடித்துப் போனார்கள்.

மோகனின் அம்மா தலையிலடித்துக் கொண்டு அழுதாள்.

இவள் வீட்டினுள் சென்று ஸ்வாமியிடம் வேண்டினாள்.

"பெருமாளே...! தில்லு முல்லு வேலைக்குக் கை மேலே பலன் கொடுத்திட்டே. மோகனைப் போல முரளி மாற வேண்டாம். அவன் பாதையிலேயே அவன் போகட்டும். அவனுக்குத் திட புத்தியைக் குடு. கழிஞ்சது கடுகளவு... கழிய வேண்டியது மலையளவு."

மனத்தின் ஓரத்தில் கொஞ்சம் போல் ஒட்டிக் கொண்டிருந்த பேராசை எங்கோ ஓடி விட்டது. பெரு நஷ்டத்தைக் கண்கூடாய்ப் பார்த்து விட்டாளே...!

அன்று ஏனோ தெரியவில்லை. ஐந்தாறு தெருக்களில் சுற்றியும் திருஷ்டிபட்டது போல் ஒரு சீட்டும் போணியே ஆகவில்லை முரளிக்கு. தொண்டை வறண்டு பாலையானதுதான் மிச்சம். தொழிலில் மந்தம் கண்டு, நீரில் மூழ்கிய பஞ்சு மூட்டையாய் மனம் கனத்துப் போயிற்று.

ஜனங்களிடம் லாட்டரிச் சீட்டு மோகம் குறைந்து விட்டதா? நாளுக்கு நாள் அந்தக் கூட்டம் பெருகிக் கொண்டுதானே வருகிறது! பின் ஏன் இப்படி?

கோடை விடுமுறையல்லவா? நிறைய மாணவர்கள் லாட்டரிச் சீட்டு விற்க வந்து விட்டார்கள். அந்த ஏழைச் சிறுவர்களின் தலையீட்டால்தான் வியாபாரம் டல்லடிக்கிறது. ஸ்கூல் திறந்து விட்டால் இந்தப் போட்டி இருக்காது. ஆயிற்று... அடுத்த வாரம் ரீ ஓபனிங். அப்புறம் சுறுசுறுப்புப் பிடிக்கும்.

வீட்டில் — அம்மா கடுகு டப்பா, பருப்பு டப்பாக்களைத் துழாவிக் கொண்

மூருந்தாள். கொஞ்சம் போல்தான் சில்லறை சேர்ந்தது. 'அதிகம் சீட்டு போட்டதாலே நேத்து எதுவுமே தரலை முரளி. இருக்கிற காசு மத்தியானம் உலை வெக்கத்தான் காணும். ராத்திரிக்கு என்ன செய்யறதாம்? பால் பாயசம் வெக்கக் காசுக்கு எங்கே போறது? பெருமாளே... இன்னும் எத்தனை நாளைக்கு எங்களை இப்படி சோதிக்கப் போறே? விடிவே கெடையாதா? மத்தியானம் அடுப்பு மூட்டவே வேண்டாம். இந்த அவலங்கெட்ட வயிறு ஒருநாள் பட்டினி கிடந்தாலும் தேவலை. இருக்கிற காசை வெச்சுச் சாயங்காலம் பாயசம் பண்ணணும். வருஷத்துக்கொரு நாள். புள்ளை மனசு 'பொசுக்'குன்னு ஆயிடக் கூடாது'.

துழாவி எடுத்த சில்லறையுடன் கடைக்கு ஓடினாள். அடுத்த பத்தாவது நிமிடம் அடுப்பில் பாயசம் கொதித்துக் கொண்டிருந்தது. அவள் மனத்தைப் போல.

'அக்கம் பக்கம் வீடுகளிலே, ஒத்தாசையா ஏதாவது காரியம் செஞ்சு குடுக்கலாம். மாசம் நாப்பதோ அம்பதோ சம்பளம் தருவாங்க. முரளிக்கு, நான் வேலைக்குப் போறது. பிடிக்காதே! பாவி நான்... அவன் ஒழைப்பைத் தின்னுண்டு ஒக்காந்திருக்கேன். ஹூம்... நல்ல அறிவைக் குடுத்த பெருமாள், அவனுக்கு நீண்ட ஆயுசையும் குடுக்கட்டும். முரளி பேரிலே ஒரு அர்ச்சனை பண்ணணும்னு நெனைச்சா அதுக்கும் காசில்லே. எல்லாம் தொடச்சு வெச்சிருக்கு. பெருமாளெ சேவிச்சு, உண்டியலிலே ஒரு நாலணாக் காசு போடக் கூட வக்கில்லாதவளாப் போயிட்டேனே!' என மனசுக்குள் குமைந்தாள்.

மூளையில் ஒரு பொறி தட்டியது.

முரளி, ஸ்வாமி படத்துக்கு கீழே ரெண்டு சீட்டு வெச்சுட்டுப் போயிருக்கான். அதிலே ஒரு சீட்டை எடுத்துப் பெருமாள் உண்டியலிலே போட்டு அவனுக்காகப் பிரார்த்தனை பண்ணினா என்ன? அதுதான் சரி.

விளக்கு வைத்ததும் கோவிலுக்குப் போய் அதைச் செயலாக்கவும் செய்தாள்.

நன்றாக இருட்டின பிறகுதான் முரளி வந்தான். பாயசம் பரிமாறும் அவசரத்தில், அம்மா, உண்டியல் பற்றிச் சொல்ல மறந்து விட்டாள்.

அடுத்த நாள் பொழுது பெரிய அதிர்ஷ்டத்துடன் விடிந்தது.

டவுனுக்குப் போய், ரிசல்ட் பேப்பர் பார்த்த முரளிக்குப் பேரதிர்ச்சி. இப்படியும் சம்பவிக்குமா? என அதிசயப்பட்டான்.

நேற்று அவன் எடுத்து வைத்த இரண்டு சீட்டுக்குமே, சொல்லி வைத்தது போல் பரிசு விழுந்திருந்தது.

ஒரு சீட்டுக்குப் பத்தாயிரம். ஒரு சீட்டுக்கு நூறு!

விடிவு காலம் வந்த சந்தோஷத்தில் வீட்டை நோக்கி ஓடினான். மனம் படபடக்க அம்மாவிடம் சொன்னான். அப்படியே மலைத்து நின்று விட்டாள் அவள்.

"அம்மா... அந்த ரெண்டு சீட்டையும் கொண்டு வாம்மா" என முரளி அவசரப் படுத்தினான்.

அப்போதுதான் அவள் செய்தது அவளுக்கு நினைவு வந்தது. ஒரு சீட்டு பெருமாள் கோவில் உண்டியலிலல்லவா அடைக்கலமாகி விட்டது. திருதிருவென விழித்தபடி ஒரு சீட்டை எடுத்து வந்து முரளியிடம் தந்தாள். எல்லாத் தெய்வங்களையும் ஒரு சேர வேண்டிக் கொண்டாள்.

"இது நூறு ரூபா விழுந்த சீட்டு. பத்தாயிரம் விழுந்த அந்தச் சீட்டு எங்கேம்மா?" என்று கேட்டான்.

அம்மாவின் நெஞ்சில் இடி இறங்கியது. பூமி தட்டாமாலை சுற்றியது.

"கைக்கு எட்டினது வாய்க்கு எட்டலையே..." எனப் புலம்பித் தீர்த்தாள். பைத்தியமாய், மண்டையிலடித்துக் கொண்டு அழுதாள்.

ஏதும் புரியாத முரளி தவித்துப் போய் மலங்க, மலங்க விழித்தான்.

கொஞ்ச நேரத்தில் அம்மா தெளிவடைந்து நிதானத்துக்கு வந்தாள்.

"முரளி... ஒங்கப்பா அடிக்கடி சொன்னது அப்படியே பலிச்சிருக்கப்பா. உனக்குச் சட்டைத் துணியெடுக்க, நான் சேர்த்து வெச்ச நூறு ரூபா அநியாயமாத் தொலைஞ்சு போச்சு. அந்த நூறு ரூபாதான், இந்தச் சீட்டு மூலமா நமக்கிப்போ திரும்பக் கெடைச்சிருக்கு. பத்தாயிரம் கெடைக்கப் பிராப்தமில்லையே. அந்தச் சீட்டைத்தான் கோவில் உண்டியலிலே சேர்த்துட்டேனே! பத்தாயிரம் பகவானோட ஐக்கியமாயிடுச்சு. இதுதான்பா விதி."

பெருமாளின் விளையாட்டைக் கண்டு, இருவர் கண்களிலும் கங்கை பிரவாகமெடுத்திருந்தது.


எம்.எல்.ஏ.: "அடிக்கடி தொகுதிப் பக்கம் போனது வம்பாப் போச்சு!"

மனைவி: "ஏங்க?"

எம்.எல்.ஏ.: "கட்சித் தலைவர் என்னைக் கூப்பிட்டுக்கண்டபடித்திட்டிவிட்டார்... நானே நாலு வருஷத்திற்கொருமுறை தொகுதிக்குப் போகிற போது நீ அடிக்கடி தொகுதிக்குப் போய் என் பெயரைக் கெடுக்கப் பார்க்கறியான்னு!"

— உ. ராஜாஜி.





Planting new hope for farmers all over the country.

Farmers trust NOCIL. For a range of pesticides and other agrochemicals that enable them to reap a record harvest year after year. For the quality that never fails them in their critical hour of need.

NOCIL—A name that means hope. That means **Ripcord, Monocil, Miraculan, Aldrex, Vapona, Bengard, Nocilon, Weedoff, Sugarup, Miticil, Ruban, Butachlor and Phosphamidon.** Names to count on as each new crop is planted and harvested.

NOCIL AGROCHEMICALS

NATIONAL ORGANIC CHEMICAL INDUSTRIES LIMITED

Rajan House, Prabhadevi, Bombay 400 025

CHAITRA 8 NOC 353 RR



அத்தியாயம் — 4

ஐயனார் கோயில்

கெடில நதிக்கரையில் பாட்டனும் பேரனும் பேசிக் கொண்டிருந்த அதே சமயத்தில் கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள திருக்கானாட்டு முள்ளூர் என்னும் ஊரில் நம் பழைய நண்பர்களான ஆழ்வார்க்கடியானும் வந்தியத்தேவனும் ஒரு விநோதமான காரியத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அக்காலத்தில் வடகாவேரியாகிய கொள்ளிடமும் தென் காவேரியைப் போலவே புண்ணிய நதியாகக் கருதப்பட்டு வந்தது. துலா மாதத்தில் தினந்தோறும் கானாட்டுமுள்ளூர் ஆலயத்தில் கோயில்கொண்டுள்ள சிவபெருமான் ரிஷபாரூடராகக் கொள்ளிடக் கரைக்கு எழுந்தருளி ஸ்நானத்துக்கு வந்துள்ள பக்தர்களுக்குச் சேவை தருவது வழக்கம். மத்தியான வேளையில் ஒவ்வொரு நாளும் உற்சவமாகவே இருக்கும். அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து பக்தர்கள் திரண்டு வருவார்கள். சைவர்களும் வருவார்கள்; வைஷ்ணவர்களும் வருவார்கள். விஷ்ணு கோயில் அந்த ஊரில் சிறிதாக இருப்பினும் அந்தக் கோயிலிலிருந்தும், பகவான் கருட வாகனத்தில் ஆரோகணித்துக் கொள்ளிடக் கரைக்கு எழுந்தருளுவார்.

இவ்விதம் துலா மாதத்தில் வட காவேரியில் ஸ்நானம் செய்வதற்காக வந்து கூடியிருந்த ஜனக் கூட்டத்தினிடையே ஆழ்வார்க்கடியான் ஒரு நாவல் கிளையை மண்ணில் நட்டு வைத்துக் கொண்டு, ''நாவலோ நாவல்! நாவலோ நாவல்! இந்த நாவலந்தீவில் வைஷ்ணவ சமயமே மேலான சமயம் என்று நிலைநாட்டுவதற்கு வாதப் போர் புரிய வந்துள்ளேன். சைவர்கள், சாக்தர்கள், அத்வைதிகள், காபாலிகர்கள், காளாமுகர்கள், புத்தர்கள், சமணர்கள் யார் வேண்டுமானாலும் வாதப் போர் புரிய வரலாம். அவர்கள் வெற்றி பெற்றால் அவர்களை என் தோள் மீது தூக்கி வைத்துக் கொண்டு ஊரைச் சுற்றி ஊர்வலம் வருவேன். அவர்கள் தோற்றால் இடுப்புத் துணியைத் தவிர மற்றதையெல்லாம் இங்கே கொடுத்து விட்டுப் போக வேணும்! நாவலோ நாவல்!'' என்று கத்திக் கொண்டிருந்

அமரர் கல்கி

தான். அவனுக்கு முன்னால் ருத்திராட்ச மாலைகள், மகர கண்டிகள், கமண்டலங்கள், குண்டலங்கள், பட்டு பீதாம்பரங்கள், பொற்காசுகள் ஆகியவை குவிந்து கிடந்தன. இவற்றிலிருந்து அவன் வெகுநேரம் வாதமிட்டுப் பலரை வாதப் போரில் வென்றிருக்க வேண்டும் என்பது தெளிவாகியிருந்தது. அவனுக்குப் பக்கத்தில் கடம்ப மரம் ஒன்றில் சாய்ந்து கொண்டு வந்தியத்தேவன் கையில் உருவிய கத்தியுடன் நின்று கொண்டிருந்தான். இப்போது அவனுடைய அரையில் உடுத்திய ஒரு துணியும் கையில் ஒரு கத்தியும் மட்டும்தான் இருந்தன. அவனுடைய தோற்றத்திலிருந்து ஆழ்வார்க்கடியான் மீது பலாத்காரத்தைப் பிரயோகிக்கப் பார்த்தவர்களை அவன் கத்தியை வீசிப் பயமுறுத்தி அனுப்பியிருக்க வேண்டும் என்று தோன்றியது. அந்தச் சமயத்தில் கூட்டமாகவும் கோஷித்துக் கொண்டும் வந்த சைவர் கூட்டம் ஒன்றைப் பார்த்து அவன் கூறிய மொழிகளிலிருந்தும் அது வெளியாயிற்று.

''எச்சரிக்கை! நியாயமாக வாதப் போர் செய்வோர் செய்யலாம். அத்து மீறி இந்த வைஷ்ணவன் மீது யாராவது கையை வைத்தால் இந்த வாளுக்கு இரையாவார்கள்!'' என்று கூறியதுடன், கத்தியையும் இருமுறை சுழற்றினான். கோபத்துடன் வந்த சைவர்கள் சாந்தமடைந்தார்கள். அவர்களில் ஒருவர், ''ஓ! வைஷ்ணவனே! ஏதோ நீ இன்றைக்கு வாதத்தில் ஜயித்து விட்டதாக எண்ணிக் கர்வம் கொள்ளாதே! திருநாரையூருக்குப் போ! அங்கே உன்னை வாதில் வென்று புறமுதுகிட்டு ஓடச் செய்யக்கூடிய நம்பியாண்டார் நம்பி இருக்கிறார்!'' என்றார்.

''உங்கள் திருநாரையூர் நம்பியைத் திருநாராயணபுரத்து அனந்த பட்டரிடம் வந்து வாதமிடச் சொல்லுங்கள்! அங்கே நானும் ஒரு வேளை இருந்தாலும் இருப்பேன்!'' என்று கூறினான் ஆழ்வார்க்கடியான்.



பலமுறை அவன் ''நாவலோ நாவல்!'' என்று கூவியும் யாரும் புதிதாக வாதமிட வரவில்லை. எனவே, நாவல் கிளையை எடுத்து விட்டுச் சங்கு சக்கரம் பொறித்த வெற்றிக் கொடியை ஆழ்வார்க்கடியான் நட்டான். பக்கத்தில் நின்று எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவர்கள் சிலர் உடனே அவன் அருகில் வந்து அவனைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு,

''நாராயணனே நம் தெய்வம்!
நாமெல்லாரும் துதிசெய்வம்!''

என்று பாடிக் கொண்டு கூத்தாடினார்கள். பிறகு அவர்கள், ''வீர வைஷ்ணவனே! எங்கள் இல்லத்துக்கு வந்து திரு அமுது செய்து அருள வேண்டும்!'' என்று பிரார்த்தித்தார்கள். ''அங்ஙனமே ஆகுக!'' என்று ஆழ்வார்க்கடியான் கம்பீரமாகக் கூறிவிட்டு, வந்தியத்தேவனையும் அழைத்துக் கொண்டு சென்றான். இருவரும் புளியோதரை, திருக்கண்ணமுது, ததியோன்னம் ஆகியவற்றை வயிறுமுட்டும்படி ஒரு கை பார்த்தார்கள். ஆழ்வார்க்கடியான் தான் வாதப் போரில் சம்பாதித்த பொருள்களில், அங்கவஸ்திரமாக அணியக் கூடிய பீதாம்பரம் ஒன்றை மட்டும் வந்தியத்தேவனிடம் கொடுத்து விட்டு மற்றவற்றை ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் கொடுத்து அவற்றின் பெறுமானத்துக்குப் பொற் கழஞ்சுகள் பெற்றுக் கொண்டான். வைஷ்ணவ சமயத்தின் மேன்மையை நிலைநாட்டிக் கொண்டு வடக்கே ஹரித்வாரம்வரையில் போக வேண்டியிருப்பதால் தனக்குப் பொற்காசு தேவை என்பதாக அவன் தெரிவித்துக் கொண்டான். ஸ்ரீ வைஷ்ணவர்களும் மனமுவந்து பொருள்களின் பெறுமானத்துக்கு அதிகமாகவே பொற் காசுகள் கொடுத்தார்கள். பெற்றுக் கொண்டு ஆழ்வார்க்கடியானும் வந்தியத்தேவனும் பிற்பகலில் கடம்பூரை நோக்கிப் பயண

மானார்கள்.

கொள்ளிடத்தில் அப்போது பெரு வெள்ளம் போய்க் கொண்டிருந்தபடியால் அவர்கள் ஏறி வந்த குதிரைகளைக் கொண்டு வர முடியவில்லை. அவர்கள் நதியைக் கடந்த ஓடத்தில் ஜனங்கள் அதிகமாக ஏறியிருந்தபடியால் படகு வட கரையை அடையும்சமயத்தில் கவிழ்ந்து விட்டது. மற்றவர்களைப் போல் வந்தியத்தேவனும் ஆற்று வெள்ளத்தில் விழுந்து நீந்திக் கரை சேர வேண்டியதாயிற்று. அச்சமயம், அத்தனை காலமாக எத்தனையோ நெருக்கடியான நிகழ்ச்சிகளிலும் வந்தியத்தேவன் காப்பாற்றிக் கொண்டு வந்த அவனுடைய அரைக் கச்சச் சுருளும் அதில் அவன் பத்திரப்படுத்தி வைத்திருந்த இலச்சினைகளும் இளைய பிராட்டி தந்த ஓலையுங்கூட நதி வெள்ளத்தில் போய் விட்டன. அவற்றுடன் இருந்த பொன் நாணயங்களும் போய் விட்டன. புதிய குதிரைகள் வாங்குவதற்குப் பணம் சேகரிப்பதற்காகவே மேற்கூறிய யுக்தியை அவர்கள் கையாண்டார்கள். யுக்தி பலித்துக் கொஞ்சம் பணமும் கிடைத்தது. ஆனால் அந்தக் கிராமாந்தரப் பகுதிகளில் குதிரை எங்கும் விலைக்குக் கிடைக்காது என்றும் தெரிந்தது. கடம்பூர் கிராமத்தில் வாரம் ஒருநாள் நடைபெறும் சந்தையில் ஒருவேளை குதிரைகள் விற்பனைக்கு வரலாம். இல்லாவிடில் திருப்பாப்புலியூர் சென்றுதான் வாங்க வேண்டும்.

கடம்பூருக்குப் போவதா, வேண்டாமா என்பது பற்றி அந்த நண்பர்களுக்குள் விவாதம் நடந்தது. அதில் உள்ள சாதக பாதகங்களைப் பற்றி விவாதித்தார்கள். கடம்பூரில், ஆதித்த கரிகாலரின் வருகையைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைத்தாலும் கிடைக்கலாம். காஞ்சியிலிருந்து புறப்பட்டு விட்டாரா, எந்த வழியாக வருகிறார் என்று ஏதேனும் தகவல் தெரிந்தால் நல்லது அல்லவா? ஆனால் கடம்பூரில் தெரிந்தவர்களின் கண்ணில் படக் கூடாது. கந்தமாறனைச் சந்திக்க நேர்ந்து விட்டால் ஆபத்தாய்ப் போய் விடும். ஒருவேளை பழுவேட்டரையரின் பரிவாரங்கள் இதற்குள் வந்திருந்தால், அதுவும் தொல்லைதான்!—

''வைஷ்ணவனே! உனக்குத் தான் இரவில் சுவர் ஏறிக் குதிக்கத் தெரியுமே? சம்புவரையர் குதிரை லாயத்திலிருந்தே இரண்டு குதிரைகளைக் கொண்டு வந்து விடலாமே?'' என்றான் வந்தியத்தேவன்.

''நான் சுவர் ஏறிக் குதிப்பேன். ஆனால் குதிரைகளுக்குச் சுவர் ஏறிக் குதிக்கத் தெரிய வேண்டுமே?'' என்றான் வைஷ்ணவன்.

''பழுவூர்ப் பரிவாரங்கள் அங்கே வந்திருந்தால், இரண்டு குதிரைகளை அடித்துக் கொண்டு போகலாம். அவர்கள் முன்னொரு சமயம் கடம்பூரில் என்னுடைய குதிரையை விரட்டியடித்தார்கள் அல்லவா? அதற்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்!'' என்றான் வாணர்குல-வீரன்.

சில மாதங்களுக்கு முன்பு கடம்பூரில் அவர்கள் சந்தித்தது பற்றியும் அன்று இரவு நடந்த அபூர்வ சம்பவங்களைப் பற்றியும் வழிநெடுக பேசிக் கொண்டு வந்தார்கள். இருவரும் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்துக்குக் கடம்பூரை அடைந்தார்கள்.

கடம்பூர் அவர்கள் எதிர்பார்த்தது போல் அமர்க்களப்பட்டுக் கொண்டுதானிருந்தது. அரண்மனையும் கோட்டை வாசலும் கொடிகளாலும் தோரணங்களாலும் தொங்கல் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. கோட்டை வாசலிலும் சரி, மதில் சுவரைச் சுற்றியும் சரி, முன்னை விடக் காவல் பலமாக இருந்தது. பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் வருகிறார் என்றால், கேட்க வேண்டுமா! அதே சமயத்தில், தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரும் ராணியுடன் வரப் போகிறார். இரண்டு பேருடைய பரிவாரங்களும் வருவார்கள். சில

நாளைக்கு ஊர் தடபுடல் பட்டுக் கொண்டுதானிருக்கும்.

இதையெல்லாம் பற்றிக் கடம்பூர் கடைத் தெருவில் ஜனங்கள் பேசிக் கொண்டிருந்ததை இரு நண்பர்களும் கேட்டார்கள். ஜனங்கள் பேச்சிலிருந்து இரு சாராரும் இன்னும் வந்து சேரவில்லை என்று தெரிந்தது. சம்புவரையர் மகன் கந்தமாறன் ஆதித்த கரிகாலரை அழைத்து வரக் காஞ்சிக்கே புறப்பட்டுப் போயிருக்கிறான் என்றும் தெரிந்தது. இந்தப் பரபரப்பான பேச்சுக்களுக்கிடையில் சிலர் 'கடல் கொண்டு விட்ட' இளவரசன் அருள்மொழிவர்மனைப் பற்றியும் மெல்லிய குரலில் பேசினார்கள். அவ்வளவு பெரிய துக்க சம்பவம் நடந்திருக்கும் போது இங்கே விருந்துகளுக்கும் களியாட்டங்களுக்கும் ஏற்பாடு நடந்து வருவது பலருக்குப் பிடிக்கவில்லை என்பது, ஜாடைமாடையாக அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து தெரிந்தது.

ஆழ்வார்க்கடியானும் வந்தியத்தேவனும் இந்தப் பேச்சுக்களையெல்லாம் காது கொடுத்துக் கேளாதவர்கள் போல் கேட்டுக் கொண்டு ஊரைத் தாண்டிப் போனார்கள். ஊருக்குள் எங்கேயும் இரவு தங்க அவர்கள் விரும்பவில்லை. ஊருக்கு அப்பால் சமீபத்தில் எங்கேயாவது பாழடைந்த மண்டபம், அல்லது சத்திரம் சாவடி இல்லாமலா போகும்? அப்படியில்லாவிட்டால், இரவு திருநாராயணபுரத்துக்குப் போய்த் தங்கி விடுவது நல்லது. அங்கேயுள்ள பெரிய பெருமாள் கோயிலின் நூற்றுக்கால் மண்டபத்தில் நிம்மதியாகப் படுத்து உறங்கலாம். முதல் நாள் இரவு நிகழ்ச்சிகளுக்குப் பிறகு ஓர் இரவு நல்ல தூக்கம் அவர்களுக்கு அவசியமாயிருந்தது.

கடம்பூரைத் தாண்டிச் சாலையோடு சிறிது தூரம் சென்றதும் அடர்த்தியான மூங்கில் காடு ஒன்றும் அதற்குள் ஐயனார் கோவில் ஒன்றும் தெரிந்தன. ''வைஷ்ணவரே! இனிமேல் என்னால் நடக்க முடியாது. இரவு இந்தக் கோயிலில் படுத்திருக்கலாம். யார் கண்ணிலும் படாமலிருப்பதற்கு இது நல்ல இடம்!'' என்றான் வந்தியத்தேவன்.

''அப்பனே! நீ சொல்வது தவறு! இம்மாதிரி இடங்களுக்கு நம்மைப் போல் இன்னும் யாராவது வந்து சேர மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''அப்படி வருகிறவர்கள குதிரைகளுடன் வந்தார்களானால் ரொம்ப நல்லது'' என்றான் வந்தியத்தேவன்.

''இந்த மூங்கில் காட்டுக்குள் எந்தக் குதிரையும் நுழைய முடியாது. மனிதர்கள் நுழைந்து செல்வதே கடினமான காரியம் ஆயிற்றே!''

''எங்கேயாவது ஒற்றையடிப் பாதை ஒன்று இல்லாமற் போகாது. கோயில் பூசாரி வரக்கூடிய வழியேனும் இருந்துதானே ஆக வேண்டும்?''

இருவரும் அடர்த்தியாக மண்டிக் கிடந்த மூங்கில் புதர்களைச் சுற்றிச் சுற்றி வந்து, கடைசியாகக் குறுகலான ஒற்றையடிப் பாதை ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். அதன் வழியாக உடம்பில் முட்கள் கிறாமல் நடந்து போவது மிகவும் பிரயாசையாக இருந்தது. இவ்விதம் சிறிது தூரம் சென்ற பிறகு கொஞ்சம் இடைவெளி காணப்பட்டது. அதில் சிறிய ஐயனார் கோவில் இருந்தது. கோவிலுக்கு எதிரே பலிபீடமும் அதையொட்டி மண்ணினால் செய்து காளவாயில் சுடப்பட்ட யானைகளும் குதிரைகளும் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. ஐயனாருக்கு வேண்டுதல் செய்து கொள்ளும் பக்தர்கள் இவ்விதம் மண்ணினால் செய்த குதிரைகளும் யானைகளும் கொண்டு வந்து வைப்பது வழக்கம்.

அவற்றைப் பார்த்ததும், வந்தியத்தேவன், ''குதிரைகளைப் பற்றி இவ்வளவு கவலைப்படுகிறோமே? ஐயனாரைக் கேட்டு இரண்டு குதிரைகள் வாங்கிக் கொள்ளலாமே?'' என்றான்.

''மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கக் கூடாது என்ற பழமொழி தெரியாதா!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.



அவன்: "நான் இப்ப உயிரோட இருக்கிறதுக்குக் காரணமே அந்த டாக்டரோட ஞாபக மறதிதான்!"

இவன்: "எப்படி?"

அவன்: "எனக்குப் பண்ண வேண்டிய ஆபரேஷனை வேறு ஒருத்தருக்குப் பண்ணி விட்டார்!"

— தென்கனிகை ஜூலியஸ்.

"வைஷ்ணவனே! எங்கள் ஐயனார் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். கேட்ட வரத்தை உடனே கொடுக்கக் கூடியவர். உங்கள் விஷ்ணுவைப் போல் பக்தர்களைத் தவிக்க விட்டு விட்டுப் பட்டப்பகலில் தூங்கிக் கொண்டிருப்பவர் அல்ல!" என்றான் வந்தியத்தேவன்.

"அப்படியானால் இந்த மண் குதிரைகளுக்கு உயிர் கொடுத்தாலும் கொடுப்பார் என்று சொல்லு! ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. பணம் மிச்சம்!"


"உண்மையான பக்தி இருந்தால் மண் குதிரைகளும் உயிர் பெறும்! பார்க்கப்போனால், நம்முடைய உடம்புகள் மட்டும் என்ன? பிரம்மதேவன் மண்ணினால் செய்து உயிர் கொடுத்ததுதானே?"

"நன்கு சொன்னாய், தம்பி! இந்த உடம்பு மண்ணினால் செய்த உடம்பு என்பதை மறந்து விடுகிறோம். அதை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வதற்காகவே திருமண்ணைக் குழைத்து நெற்றியிலும் உடம்பிலும் இட்டுக் கொள்ளும்படி வைஷ்ணவ ஆச்சாரிய புருஷர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்!"

வந்தியத்தேவன் "உஷ்!" என்று சொல்லி, ஆழ்வார்க்கடியானுடைய கையைப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையினால் எதிரே சுட்டிக் காட்டினான். சூரியன் அஸ்தமித்துச் சிறிது நேரம் ஆகிவிட்டது. நாலாபுறமும் இருண்ட மூங்கில் தோப்புகள் சூழ்ந்திருந்த அச்சிறிய இடைவெளியில் மிக மங்கலாகத் தெரிந்த வெளிச்சத்தில் ஐயனாருடைய வாகனங்கள் உயிர் பெற்று அசைவதாகத் தோன்றின. ஒரு யானையும் ஒரு குதிரையும் இடம் பெயர்ந்து நகர்ந்தன. கண்ணால் கண்ட இந்த அற்புதத்தை நம்புவதா, இல்லையா என்று தெரியாமல் வந்தியத்தேவன் சிறிது நேரம் திகைத்து நின்றான். ஆனாலும் ஐயனாருடைய அற்புத சக்தியை ஆழ்வார்க்கடியானுக்கு உடனே உணர்த்தி விடக் கூடிய சந்தர்ப்பத்தை இழக்கவும் அவனுக்கு மனம் வரவில்லை. "வைஷ்ணவரே! பார்த்தீரா?..." என்று அவன் சொல்வதற்குள், ஆழ்வார்க்கடியான் அவனுடைய கையை இறுக்கிப் பிடித்து, உதட்டில் விரல் வைத்துச் சமிக்ஞை காட்டி, பேச்சை நிறுத்தினான். பின்னர், இறுக்கிப் பிடித்த கையினால் வந்தியத்தேவனைப் பற்றியவாறு அவனை இழுத்துக் கொண்டு அந்த மூங்கில் புதருக்குப் பின்னால் சென்று நன்றாக மறைந்து நின்றான்.

குதிரையும் யானையும் அசைந்து சிறிது விலகிக் கொடுத்தன அல்லவா? அப்படி விலகிக் கொடுத்து இடைவெளி ஏற்பட்ட இடத்தில் ஒரு மனிதனுடைய தலை மட்டும் தெரிந்தது. அந்தத் தலை அப்பாலும் இப்பாலும் திரும்பி நாலுபுறமும் பார்த்தது. ஐயனாருடைய பலி பீடத்துக்குப் பக்கத்தில் இம்மாதிரி ஒரு தலை மட்டும் தோன்றி நாலாபுறமும் சுழன்று விழித்த காட்சி மிகப் பயங்கரமாயிருந்தது. எவ்வளவோ பயங்கரங்களைப் பார்த்திருந்த வந்தியத் தேவனுடைய மெய் சிலிர்த்தது. ஆனால் ஆழ்வார்க்கடியான் தன்னைப் பிடித்திருந்த கை சிறிதும் நடுக்கமுறாமலும் தளராமலும் இருந்ததை அறிந்து வந்தியத்தேவன் நெஞ்சுறுதி கொண்டான்.

இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தத் தலை எழும்பி மேலே வந்தது. ஒரு மனிதனுடைய மார்பு வரையில் தெரிந்தது. பிறகு



அம்மனிதன் முழுமையான உருவத்துடன் கிளம்பி மேலே வந்தான். அம்மனிதன் வெளிவந்த இடத்தில் ஒரு சிறிய பிளவு, கரிய இருள் சூழ்ந்த பாதாள பிலத்துவாரத்தைப் போல, பயங்கரமாக வாயைத் திறந்து கொண்டிருந்தது.

சற்று உற்றுப் பார்த்த பின்னர் அந்த மனிதன் யார் என்பதும் அவர்களுக்குத் தெரிந்து விட்டது. கடம்பூர் மாளிகையில் பணியாளனாக இருந்து கொண்டே ரவிதாஸனுடைய சதிக் கும்பலிலும் சேர்ந்திருந்த இடும்பன்காரிதான் அவன்.

இதை இருவரும் ஏக காலத்தில் அறிந்து கொண்டதும் ஒருவரையொருவர் பார்த்துத் தங்கள் வியப்பைச் சமிக்ஞையினாலேயே தெரிவித்துக் கொண்டார்கள்.

இடும்பன்காரி திறந்திருந்த துவாரத்தை அப்படியே விட்டு விட்டு, மறுபடியும் ஒரு தடவை சுற்று முற்றும் பார்த்து விட்டு, ஐயனார் கோயிலை நோக்கி நடந்தான். கோயில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். சிறிது நேரத்துக்கெல்லாம் கோயிலுக்குள்ளேயிருந்து முணுக்கு முணுக்கு என்று வெளிச்சம் தெரிந்தது. கோவிலுக்குள் விளக்கேற்றப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொண்டார்கள்.

"தம்பி! இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்!" என்று முணுமுணுக்கும் குரலில் அடியான் கேட்டான்.

''ஐயனார் சக்தியுள்ள தெய்வம் என்று நினைக்கிறேன்; குதிரைக்கு உயிர் வந்ததைப் பார்க்கவில்லையா?'' என்றான் வந்தியத் தேவன்.

''அது சரி! இப்போது வந்தானே அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

''அவன் ஐயனார் கோயில் பூசாரி போலிருக்கிறது. நாமும் போய்ச் சுவாமி தரிசனம் செய்யலாமா?''

''கொஞ்சம் பொறு! இன்னும் யாராவது சுவாமி தரிசனத்துக்கு வருகிறார்களா என்று பார்த்துக் கொள்ளலாம்.''

''இன்னும் யாரேனும் வருவார்கள் என்று நினைக்கிறீர்களா?''

''பின் எதற்காக இவன் விளக்குப் போடுகிறான்?''

''பூசாரி கோவிலுக்கு விளக்குப் போடுவதில் ஆச்சரியம் என்ன?''

''தம்பி! அவன் யார் என்று தெரியவில்லையா?''

''நன்றாய்த் தெரிகிறது. கொள்ளிடத்தின் தென் கரையில் எனக்குக் குதிரை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தானே? அந்த இடும்பன்காரி அவன்தான்! இப்போதும் அவனிடம் குதிரை கேட்கலாம் என்று பார்க்கிறேன்......''

''நல்ல யோசனை செய்தாய்!''

''உமக்குப் பிடிக்கவில்லையா?''

''இடும்பன்காரி உனக்குக் குதிரை வாங்கிக் கொடுத்தவன் மட்டும் அல்ல; ரவிதாஸன் கூட்டத்தைச் சேர்ந்தவன்.''

''அப்படியானால், இன்னொரு நல்ல யோசனை தோன்றுகிறது.''

''என்ன? என்ன?''

''இடும்பன்காரி ஐயனார் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும்போது, அவன் எங்கிருந்து வந்து முளைத்தான் என்பதைப் பார்த்துத் தெரிந்து கொண்டு வரலாம் என்று எண்ணுகிறேன்.''

''அது எப்படி முடியும்?''

''அவன் வெளியே வந்த துவாரத்தினால் நான் உள்ளே போக முடியாதா?''

''முடியலாம். ஆனால் அதில் உள்ள அபாயங்கள்....''

''அபாயம் இல்லாத காரியம் எது?''

''அப்புறம் உன் இஷ்டம்.''

''வைஷ்ணவரே! நீங்கள் இங்கேயிருந்து என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டிருங்கள்....''

''அதற்கென்ன





பிச்சைக்காரன் 1: "வெளிநாட்டிலேயிருந்து வந்த உன் மகன் உனக்கொரு புதுமையான திருவோடு கொடுத்தானாமே!"

பிச்சைக்காரன் 2: "ஆமாம்... பட்டனை அழுத்தினா 'அம்மா... தாயே'ன்னு குரல் கொடுக்கும்!"

— தென்கனிகை ஜூலியஸ்.

கஷ்டம்? நான் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். சுரங்க வழி எங்கே போகும் என்று உனக்கு ஏதாவது தோன்றுகிறதா?"

"தோன்றுகிறது சுவாமி, தோன்றுகிறது! அது சரிதானா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

"அதை நீ எதற்காகத் தெரிந்து கொள்ள வேணும்?"

"ஏதேனும் ஒரு சமயத்தில் உபயோகப் படலாம். யார் கண்டது?"

அச்சமயம் சற்றுத் தூரத்தில் வேறு பேச்சுக் குரல்கள் கேட்டன.

"தாமதிப்பதற்கு நேரமில்லை. வைஷ்ணவரே! நான் திரும்பி வருகிற வரையில் இங்கேயே இருப்பீர் அல்லவா? அல்லது சுக்ரீவன் வாலிக்குச் செய்தது போல் செய்து விடுவீரா?"

"உயிர் உள்ள வரையில் இங்கேயே இருக்கிறேன். ஆனால் நீ திரும்பி வருவது என்ன நிச்சயம்?"

"உயிர் இருந்தால் நானும் திரும்பி வருவேன்....

இவ்விதம் சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் நாலே பாய்ச்சலில் துவாரம் தெரிந்த இடத்தை நோக்கி ஓடினான். அதற்குள் இறங்கினான். மறு கணமே அந்த இருண்ட பள்ளத்தில் மறைந்தான். பிலத்துவாரம் அவனை அப்படியே விழுங்கி விட்டதாகத் தோன்றியது.

கோயிலுக்குள் சென்றிருந்த இடும்பன்காரி வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்தான். திறந்திருந்த துவாரம் அவன் கண்ணில் பட்டது. உடனே அவ்விடம் சென்று பலி பீடத்துக்குப் பக்கத்தில் நாட்டப்பட்டிருந்த சூலாயுதத்தைச் சுழற்றித் திருகினான்.

இடம் பெயர்ந்து அகன்றிருந்த யானையும் குதிரையும் மறுபடியும் நெருங்கி வந்தன. துவாரம் அடைபட்டு, இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

இந்தக் காரியத்தைச் செய்து விட்டு இடும்பன்காரி மறுபடியும் கோவில் வாசற்படியண்டை வந்தான். அதே சமயத்தில் ரவிதாஸன், சோமன் சாம்பவன் முதலியவர்களும் வேறு திசையிலிருந்து வந்து சேர்ந்தார்கள்.

ஆழ்வார்க்கடியான் மூங்கில் காட்டுக்குப் பின்னால் இன்னும் நன்றாக மறைந்து கொண்டான்.

கோவில் வாசற்படிமேல் ரவிதாஸன் உட்கார்ந்து கொண்டான். மற்றவர்கள் அவன் எதிரே தரையில் அமர்ந்தார்கள்.

"தோழர்களே! நாம் கைக்கொண்ட விரதம் நிறைவேறும் சமயம் நெருங்கி விட்டது!" என்றான் ரவிதாஸன்.

"இவ்வாறுதான் ஆறு மாதமாக 'நெருங்கி விட்டது' 'நெருங்கி விட்டது' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்" என்றான் ஒருவன்.

"ஆம்; அதில் தவறு ஒன்றுமில்லை. ஆறு மாதமாகவே அந்த நாள் நெருங்கி வந்து கொண்டிருந்தது. இப்போது விரல் விட்டு எண்ணக்கூடிய நாள் கணக்கில் நெருங்கி விட்டது. ஆதித்த கரிகாலன் காஞ்சியை விட்டுக் கிளம்பி விட்டான் என்ற செய்தி வந்திருக்கிறது. திருக்கோவலூர்க் கிழவன் அவனைத் தடுத்து நிறுத்தச் செய்த பிரயத்தனம் பலிக்கவில்லையாம்!"

"வழியில் வேறு யாராவது தடுத்து நிறுத்த மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?"

"ஆதித்த கரிகாலன் முன் வைத்த காலைப் பின் வைக்கிறவன் அல்ல. இனி யார் தடுத்தாலும் கேட்கமாட்டான்...."

"அவனுடைய தமக்கை சொல்லி அனுப்பிய செய்தி போய்ச் சேர்ந்

ஸர்ஜரி நம்முடைய வைத்திய முறையில் இல்லை என்று நாம் நம்பும்படியாகியிருப்பதுதான் தப்பு. வாஸ்தவத்தில் நம்மிடம்தான் ஆதியிலேயே ஆயுர்வேத சாஸ்திரம் ஏற்பட்ட இந்தப் புராதன காலந்தொட்டே 'ஸர்ஜரி' என்பதான சஸ்த்ர சிகித்ஸை இருந்திருக்கிறது. ஆயுர்வேதத்துக்கு இரண்டு பெரியவர்கள், மூலபுருஷர்கள். ஒருத்தர் சரகர், இன்னொருவர் ஸுச்ருதர். இவர்கள் எழுதிய ஸம்ஹிதைகள்தான் ஆயுர்வேதத்துக்கு மூல க்ரந்தங்களாக இருப்பவை.

சரகர், ஸுச்ருதர் என்ற இருவரில் சரகர் மருந்து கொடுத்துக் குணப்படுத்துவது பற்றிச் சொல்கிறார். ஸுச்ருதர் சஸ்த்ர சிகித்ஸை செய்து குணப்படுத்துவது பற்றிச் சொல்கிறார். Physicion, Surgeon என்று இப்போது இரண்டு பேரைப் பற்றிச் சொல்கிறோம். மருந்து கொடுப்பவன் ஃபிஸிஷியன், சஸ்த்ர சிகித்ஸை செய்பவன் ஸர்ஜன்.

ஆயுர்வேதத்தை நாம் ஜாக்கிரதையாகப் பூர்ணரூபத்தில் காப்பாற்றி வந்திருந்தால் ஆயுர்வேத வைத்தியர்களும் இப்படி மருந்து கொடுப்பதில் மட்டுமின்றி சஸ்த்ர சிகித்ஸை செய்வதிலும் திறமை படைத்தவர்களாயிருந்திருப்பார்கள். ஆனால் சரக ஸம்ஹிதை பிரசாரத்தில் வந்திருக்கிற மாதிரி ஸுச்ருதருடைய 'ஸர்ஜரி' நூல் வராமல் நஷ்டமடைந்திருக்கிறோம்.

'என்ஸைக்ளோபீடியா ப்ரிட்டானிகா' என்ற வால்யூம்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதிலே ஒவ்வொரு ஸயன்ஸ், சாஸ்திரம், கலை பற்றியும் விவரமாகச் சொல்லியிருக்கும். அதைப் பற்றிய சரித்திரமும் போட்டிருக்கும்.



அதிலே என்ன போட்டிருக்கிறதென்றால், ஸர்ஜரி என்கிற ரணசிகித்ஸை வித்யை இந்தியாவிலேயே முதலில் தோன்றிற்று என்று இருக்கிறது. இங்கே இருந்து அது அரேபியா வழியாக க்ரீஸ் தேசத்துக்குப் போனதாகவும் அங்கேயிருந்து இத்தாலிக்குப் பரவி, பிறகு ஐரோப்பா பூரா பிரசாரமானதாகவும் போட்டிருக்கிறது.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தால்....''

''அது எப்படிப் போய்ச் சேர முடியும்? செய்தி கொண்டுபோன வாலிபனைத்தான் காட்டில் கட்டிப்போட்டு விட்டு வந்தோமே?''

''அழகுதான்! அவனை இன்று காலையில் கொள்ளிடத்தின் வடகரையிலே பார்த்தேன். அவனோடு நமது இன்னொரு பகைவனும் சேர்ந்திருக்கிறான்.....''

''அது யார்?''

''போலி வைஷ்ணவ வேஷதாரி!''

''அப்படியானால் நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியதுதான். அவர்கள் ஆதித்த கரிகாலனைச் சந்திக்காமல் தடுக்கப் பார்க்க வேண்டும்.''

''தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற கதையாக இருக்கிறது. கையில் அகப்பட்டவனை அங்கே ஒரு வழியாகத் தீர்த்திருக்கலாம். ராணி எதற்காக அவனை உயிரோடு விடச் சொன்னாள் என்று தெரியவில்லை.....''

''தோழர்களே! எனக்கும் அது அப்போது புரியாமல்தான் இருந்தது. அப்புறம் தெரிந்து கொண்டேன். ராணி என்னையும் மிஞ்சி விட்டாள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். மிக முக்கியமான ஒரு நோக்கத்துடன் தான் வந்தியத் தேவனை உயிரோடு விட்டுவிடச் சொன்னாள் ராணி. அதை நீங்கள் இப்போது தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. வந்தியத் தேவனைப் பற்றிக் கவலை வேண்டாம். ஆனால் அந்த வைஷ்ணவனைக் கண்டால் சிறிதும் தயங்காமல் உயிரை வாங்கி விட்டு மறு காரியம் பாருங்கள்.....'' என்றான் ரவிதாஸன்.

(தொடரும்)

பெனாசிர் புட்டோ:

ஒரு பிரதமரின் மகள் திரும்பிப் பார்க்கிறார்...

ஜூன் 28, 1972, பாகிஸ்தான் ஜனாதிபதியான என் தந்தை (புட்டோ)க்கும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும் சிம்லாவில் பேச்சு வார்த்தை நடக்க இருந்தது.

"இந்தப் பேச்சு வார்த்தையின் முடிவுகள் எப்படியிருந்தாலும் அது பாகிஸ்தான் சரித்திரத்தில் ஒரு திருப்பு முனையாக இருக்கும். எனவே நீயும் என்னோடு வந்து இந்தப் பேச்சு வார்த்தையை நேரில் காண வேண்டுமென்று விரும்புகிறேன்!" என்றார் என் தந்தை.

அவரோடு புறப்பட்டு வந்தேன். எங்களோடு பாகிஸ்தான் அரசின் முக்கிய பிரதிநிதிகளும் வந்தார்கள். பேச்சு வார்த்தைக்காக என் தந்தை எந்தவிதமான முஸ்தீபுகளுடனும் வரவில்லை. காரணம், பாகிஸ்தான் போர்க் கைதிகளை இந்தியா சிறைப் படுத்தியிருந்தது. ஐயாயிரம் சதுர மைல் பரப்புள்ள எங்கள் தேச எல்லைப் பகுதியை இந்தியாதான் எங்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது.

"உலகிலுள்ள ஒவ்வொருவரும் இப்போது சிம்லாவில் நடக்கப் போகும் பேச்சு வார்த்தையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நாம் அதி ஜாக்கிரதையோடு நடந்து கொள்ள வேண்டும். இந்தப் பேச்சு வார்த்தை நடக்கும் போது நீ யாரைப் பார்த்தும் புன்னகை செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் நமது தேசத்துப் போர் வீரர்கள் இந்திய ராணுவக் கூடாரங்களில் கைதிகளாக்கப்பட்டிருக்கும் ஒரு நிலையில் நீ சந்தோஷமாக இருப்பதாக நினைப்பார்கள். அதே போல் முகத்தைக் கடுகடுப்பாகவும் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அது நீ ஏதோ இந்தப் பேச்சு வார்த்தையின் மேல் அவநம்பிக்கை கொண்டிருப்பது போல் தோன்றும்..." என்று நாங்கள் விமானத்தில் வரும் போது என் தந்தை எனக்கு அறிவுரை சொன்னார்.

"பின் எப்படித்தான் அப்பா முகத்தை வைத்துக் கொண்டிருப்பது?" என்றேன்.

"எந்தவிதமான உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் வைத்துக் கொள்" என்றார்.

"அது ரொம்பவும் கஷ்டம்!" என்றேன்.

"அது ஒன்றும் கஷ்டமே இல்லை..." என்றார் அவர்.

அவர் அப்படிச் சொன்னாலும், நாங்கள் சிம்லாவில் இறங்கிய போது, டெலிவிஷன் காமிராக்களின் பார்வைகளுக்கு மத்தியில் எங்களை இந்திரா காந்தி வரவேற்ற போது என் தந்தை சொன்னது போல் முகத்தை வைத்துக் கொள்வது மிகவும் சிரமமாகப் போய் விட்டது!

அதுவரை இந்திரா காந்தியின் புகைப் படங்களை மட்டுமே பார்த்து அவரைப் பற்றியதோர் பெரிய உருவத்தைக் கற்பனை செய்து வைத்திருந்த நான், அவரை நேரில் கண்ட போது மிகவும் சிறிய உருவமாகவே தெரிந்தார். இத்தனைக்கும் அவர் கனமான மழைக் கோட்டு வேறு அணிந்திருந்தார்!

நான் இஸ்லாமிய முறைப்படி அவரைக் கண்டதும், "அஸ்ஸலாமு அலைக்கும்" என்றேன்.

"நமஸ்தே.... வாழ்த்துக்கள்!" என்றார் இந்திரா காந்தி புன்னகையோடு.

நானும் பதிலுக்குச் சிறிதாக ஒரு புன்னகை செய்தேன். அனேகமாக அந்த எனது புன்னகை என் அப்பா அறிவுரை சொன்னது போல் எந்தவிதமான உணர்ச்சியையும் வெளிக்காட்டாத புன்னகையாகத்தான் இருந்திருக்கும் என்று நம்புகிறேன்'

பேச்சு வார்த்தை துவங்கியது. "பேச்சு வார்த்தையில் நல்ல முன்னேற்றம் இருக்கிறது" என்று காலையில் சொல்லுவார்கள். மாலையில், "நல்லபடியாக முடியுமென்று தோன்றவில்லை" என்பார்கள். அடுத்தடுத்த நாட்களிலும் நிலைமை இதே போல் தான் இருக்கும்.

பேச்சு வார்த்தையின் நிலை இப்படியிருக்க, மறுபுறம், நாங்கள் தங்கியிருந்த ஹிமாசல் பவனிலிருந்து நான் வெளியில் போகும்போதெல்லாம் மக்கள் சாலையின் இரண்டு புறங்களிலும் கூடி என்னை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். நான் செல்லுமிடங்களுக்கெல்லாம் கூடவே வர ஆரம்பித்து விட்டார்கள்! அதனால் போக்குவரத்துக் கூட ஸ்தம்பித்துப் போகும்படி ஆகி விட்டது!

இது மட்டுமா? என்னை இந்தியாவுக்கு வரவேற்று ஏராளமான கடிதங்களும் தந்திகளும் வந்து குவிய ஆரம்பித்து விட்டன! அப்படி வந்த கடிதங்கள் ஒன்றில், என்னை இந்தியாவில் தூதுவராக நியமிக்க வேண்டும் என்றும் ஒருவர் ஆலோசனை வழங்கியிருந்தார். அப்போது நான் அணிந்திருந்த ஆடைகள் கூட தேசிய அளவிலான 'பாஷன்' ஆகி விட்டது.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் படிப்பவர்களெல்லாம் ஆடையலங்காரங்களில் கவனம் செலுத்தாமல் உயர்ந்த விஷயங்





* பெனாசிர் புட்டோ-சிம்லா வந்திருந்தபோது வரவேற்ற மக்களுக்குச் 'சலாம்' செய்கிறார்......

களையே சிந்திப்பார்கள் என்று ஒரு பெயர் உண்டு. நானும் ஹார்வர்டு மாணவி என்ற முறையில் அந்த மனப்பான்மை உடையவள் தான். போரின் கொடுமை பற்றியும் அமைதியின் அவசியம் பற்றியுமே சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆனால், அப்போது நடந்து கொண்டிருந்த பேச்சு வார்த்தைகள் ரகசியமாக நடந்து கொண்டிருந்ததால் அது பற்றிய செய்தி கிடைக்காமல் போனதாலோ என்னவோ, என்னைச் சந்தித்த பத்திரிகையாளர்கள் பலர் எனது உடைகளின் 'பாஷன்' பற்றியே கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுப் பிரசுரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதைத் தாங்க முடியாத நான் கடைசியில் ஒரு நிருபரிடம், ''பாஷன்களெல்லாம் பூர்ஷ்வாக்களின் பொழுது போக்கு!'' என்று கோபமாகச் சொல்லி வைத்தேன். அப்படிச் சொன்ன போதும் கூட அடுத்த நாள் பத்திரிகைகளில் நான் பாஷனுக்கான புதுப் பாதையைக் காட்டியிருப்பதாகத்தான் எழுதினார்கள்!"

பேச்சு வார்த்தையின் போது ஒருநாள் இந்திரா காந்தி எங்களுக்கு ஒரு விருந்து வைத்தார். அந்த விருந்தில் அவர் என்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். எனக்கு ஒரே படபடப்பாகப் போய் விட்டது. 'ஒருவேளை என்னைப் பார்த்ததும் அவருக்குப் பழைய நினைவுகள் வந்து விட்டனவோ! நான் என் தந்தையோடு வந்திருப்பது போல், அவரும் அவர் தந்தை நேருவோடு சென்றதெல்லாம் நினைவுக்கு வந்தனவோ! என்னில் அவர் தன்னையே பார்த்துக் கொள்கிறாரோ...' என்றெல்லாம் நான் நினைத்துக் கொண்டேன்.

"**க**டவுளின் விருப்பப்படி ஒப்பந்தம் ஏற்படுவதற்கான நம்பிக்கை பிறந்து விட்டது'' என்றார் என் தந்தை ஒரு பெரிய புன்னகையுடன்.

எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ஏனென்றால் அன்று காலைதான் அவர் ''மூட்டை கட்டு'' என்று சொல்லியிருந்தார். ''இந்தியா என் மீது திணிக்கும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை விட ஒப்பந்தமே இல்லாமல் திரும்புவது மேல்'' என்று கூறியிருந்தார்.

இந்தியா பெரிய வெற்றி பெற்றிருந்ததால் பலம் மிக்க நிலையில் இருந்து பேசியது. பாகிஸ்தானிய யுத்தக் கைதிகளை விடுவிப்பது; மற்றும் இந்தியா கைப்பற்றியிருந்த பாக் பகுதிகளைத் திருப்பித் தருவது ஆகியவற்றைக் காஷ்மீரப் பிரச்னையுடன் இணைத்துப் பின்னதற்கும் ஒரு தீர்வு காண முனைந்தது. என் தந்தைக்கு இதில் சற்றும் விருப்பமில்லை. எனவேதான் ''மூட்டை கட்டு'' என்று உத்தரவிட்டிருந்தார். அன்று மாலை நாலரை மணிக்கு என் தந்தை இந்திரா காந்தியை அவரது இருப்பிடத்துக்குச் சென்று சந்திக்க வேண்டியிருந்தது. இது ஒரு சம்பிரதாய மரியாதை தவிர வேறில்லை. ஆனால் அதிகாரிகள் உடன் இல்லாத இந்தத் தேநீர் உபசாரத்தின் போதுதான் பாரதப் பிரதமரிடம் ஒரு மனமாற்றத்தை உண்டாக்கி விட்டார் என் தந்தை!

''எப்படி இதைச் சாதித்தீர்கள் அப்பா?"

"தோல்வி என்பது நமக்கு மட்டும் அல்ல. ஒப்பந்தம் ஏற்படவில்லையென்றால் அது இந்திரா காந்தியையும் பாதிக்கும். இருவருக்குமான அரசியல் எதிரிகள் இந்தத் தோல்வியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்களல்லவா? இதைத்தான் அவரும் நினைத்திருப்பார். அதனால்தான் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த போது கூட அவர் டீயின் சுவையை உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஒருவிதமான அமைதியின்மையால் கைப்பையின் ஓரத்தைத் திருகியபடியே மௌனமாக இருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நான் அரை மணி நேரம் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டியதன் அவசியத்தை இந்திரா காந்தியிடம் எடுத்துக் கூறினேன்! இரு நாடுகளிடையிலும் அமைதி நிலவ வேண்டியதன் அவசியத்தையும் வெற்றி பெற்றுள்ள பலசாலிதான் பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுக்கவும் வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தேன்'' என்றார் தந்தை.

''அவர் ஒப்புக் கொண்டாரா?''

''அவர் மறுக்கவில்லை. அது போதாதா?" என்றார் சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டே.

இந்திரா காந்தியும் என் தந்தையும் இறுதிச் சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதிகாரிகளெல்லாம் பக்கத்து அறைகளில் ஒப்பந்தத்திற்கான ஷரத்துக்களை ஒவ்வொன்றாகத் தயாரித்து அவ்வப்போது ஒப்புதலுக்காக இவர்களிடம் அனுப்பியும், திருத்தங்கள் செய்து கொண்டும் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருந்தார்கள்.

ஒப்பந்தம் வெற்றியென்றால் ''ஆண் குழந்தை பிறந்திருக்கிறது'' என்றும் தோல்வி என்றால் ''பெண் குழந்தை பிறந்திருக்கிறது'' என்றும் சொல்லித் தெரிவித்துக் கொள்ளலாம் என்று பாகிஸ்தானிய அதிகாரிகளுக்குள் ஓர் ஏற்பாடு. ''பெண் இனத்தை இழிவுபடுத்த இப்படியும் ஒரு வழியா?'' என்று நான் சொன்னேன். அங்கு

கங்கைபோல் கரைபுரளும்
புது ரக பட்டுப்புடவைகள்
மங்கை சில்க்ஸில் கிடைக்குதே
மங்கையர் கூட்டம் குவியுதே...



காஞ்சிபுரம் மற்றும்
அனைத்து மாநில
பட்டு புடவைகளுக்கு...



மங்கை சில்க்ஸ்

ஏர்-கண்டிஷண்ட்

Y.M.C.A. காம்ப்ளக்ஸ் நகை கடை பஜார்,
மதுரை-625001 போன்: 36040

ரமணி சந்திரனின் அற்புதமான நாவல்கள்,

	ரூ. பை
இது ஓர் உதயம்	8.00
நின்னையே ரதி என்று...!	11.00
என் உயிரே கண்ணம்மா	10.00
மானே மானே மானே	16.00
என் கண்ணில் பாவையன்றோ	16.00
மெல்லத் திறந்தது கதவு	10.00
வெண்மையில் எத்தனை நிறங்கள்	22.00
மயங்குகிறாள் ஒரு மாது	20.00
காதலெனும் சோலையிலே	20.00
கண்ணே கண்மணியே	15.00
விடியலைத் தேடும் பூபாளம்	15.00
மதுமதி	10.00
தொடுகோடுகள்	12.00
பூங்காற்று	14.00
ஒரு மலர்	15.00
ஒரு கல்யாணத்தின் கதை	10.00
நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்	9.00

புதிய நாவல்கள் ராஜேஷ்குமார்,

ஒரு பௌர்ணமி மரணம்	13.00
தூரத்தும் துரோகங்கள்	20.00
எங்கேயும் எப்போதும்	15.00
நான் உன்னோடு, நீ யாரோடு	16.00
அக்கரையாய் ஒரு அக்கிரமம்	10.00

அனுராதா ரமணன்

அந்தப் புர ராகங்கள்	15.00
கண்ணே காத்திரு	18.00
வரம்தா வசந்தா	16.00

ராஜேந்திரகுமார்

தங்கவிழித் தாரா	12.00
எட்டாவது மாடி	10.00
ஒரு ஆரம்பம் பல முடிவுகள்	15.00

ஜோதிடக் கலைக்கோ A. M. பிள்ளையின்

ஜோதிடக் களஞ்சியம் 7 பாகங்கள்	98.00
ஆயுள் பலம் அறிவது எப்படி?	8.00
குழந்தை பாக்கியம் உண்டா?	6.00
நட்சத்திரங்கள் மூலம் எதிர்காலப் பலன் அறிய வழிகள்	7.00
புதிய மனையடி சாஸ்திரம்	8.00

முதல் தரமான பக்தி நூல்கள்.

அற்புதமான இந்து மதம்	16.00
திருமுறைத் தேன் துளிகள்	8.00
பாவம் தீர்க்கும் பாகவதம்	15.00
தியானமும் மனக்கட்டுப்பாடும்	8.00
திருமலையான் திருவருள் கதைகள்	10.00

இன்னும் ஆயிரக்கணக்கான அற்புத நூல்கள். தேவையான புத்தக விலையுடன் பதிவுத் தபால் செலவுக்கு ரூ. 6 சேர்த்து M.O. அனுப்பவும்.

அருணோதயம்

3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை — 600 014. போன்: 867553



* புட்டோ

நிலவிய பரபரப்பில் யார் அதைப் பொருட் படுத்தினார்கள்? நீண்ட நேரத்திற்குப் பிறகு, ''ஆண் குழந்தை பிறந்திருக்கிறது... ஆண் குழந்தை பிறந்திருக்கிறது...'' என்று சப்தம் கேட்டது. பிரசித்தி பெற்ற சிம்லா ஒப்பந்தம் கையெழுத்தானது!

''இந்திய ராணுவ முகாம்களில் போர்க் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானிய வீரர்களை வேண்டுகிறீர்களா? அல்லது எல்லைப் பிரச்னைக்கான தீர்வை வேண்டுகிறீர்களா? ஏதாவது ஒன்றை மட்டும் கேளுங்கள்' என்று இந்திரா காந்தி என்னிடம் கேட்ட போது, நான், 'எல்லைப் பிரச்னைக்கான தீர்வுதான் வேண்டும்' என்றேன். ஏன் அப்படிச் சொன்னேன் தெரியுமா?'' என்று என் தந்தை கேட்ட போது, ''நிஜமாகவே எனக்குப் புரியவில்லை, அப்பா!'' என்றேன் நான். ''கைதிகளின் விடுதலைதானே பாகிஸ்தான் மக்களுக்கு அதிக மகிழ்ச்சி தரும்?''

''93,000 பாகிஸ்தான் வீரர்களை இந்தியா போர்க் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மனிதாபிமானப் பிரச்னை. எனவே, உலகின் கவனத்தையே அது மிகச் சுலபமாக ஈர்த்து விடும். மேலும் அத்தனை பேரைக் கைதிகளாக வைத்திருப்பதில் உணவு, உடை என்று இந்தியாவுக்கும் பிரச்னைகள் ஏற்படும். எனவே, அவர்கள் விடுதலை செய்யப்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால், எல்லைப் பிரச்னை அப்படியல்ல; அது உலகின் கவனத்தைக் கவராது. அதனால்தான் எல்லைப் பிரச்னைகான தீர்வை நான் முதலில் தேர்ந்தெடுத்தேன்!'' என்றார் என் தந்தை. எப்படியும் போர்க் கைதிகள் இந்தியாவால் விடுவிடுக்கப்பட்டு விடுவார்கள் என்ற அவர் நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை. 1974—ல் பங்களாதேஷை பாகிஸ்தான் அங்கீகரித்ததும் அத்தனை கைதிகளும் விடுதலை பெற்றனர்.

ராவல் பிண்டியிலுள்ள பிரதமரின் இல்லம். ஜூலை 5, 1977. விடியற்காலை 1.45 மணி.

''எழுந்திருங்கள், எழுந்திருங்கள்... இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி விட்டது....'' என்று என் தாயார் சப்தமிட்டுக் கொண்டே என் அறையைக் கடந்து என் தங்கையின் அறைக்கு ஓடினார்.

இது எப்படி சாத்தியம்? இரண்டு நாட்களுக்கு முன்புதானே பாகிஸ்தான் இராணுவ ஜெனரல் ஜியாவும் மற்ற இராணுவ அதிகாரிகளும் பிரதமரான என் தந்தையைச் சந்தித்துத் தங்களின் விசுவாசத்தை உணர்த்தி விட்டுச் சென்றார்கள்?

நான் என் அறையை விட்டு வெளியே வந்து தந்தையை நெருங்கிய போது அவர், டெலிபோனில் ஜெனரல் ஜியாவையும் மற்ற அமைச்சர்களையும் தொடர்பு கொள்ள முயன்று கொண்டிருந்தார். கல்வியமைச்சர் வீட்டு லைன்தான் முதலில் கிடைத்தது. ''இராணுவ வீரர்கள் அப்பாவை அடித்து இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள்'' என்று அமைச்சரின் மகள் பேசினாள்.

அப்பாவுக்கு இந்த சதித் திட்டம் பற்றி எப்படி தெரிய வந்தது? அம்மா சொன்னாள்: பிரதமர் மாளிகை வாசலில் காவலிருந்த ஒரு போலீஸ்காரர், இராணுவத்தினர் கண்களில் படாமல் படுத்துக்கொண்டே ஊர்ந்து வந்து, ''எஜமானரை உடனே தப்பியோடச் சொல்லுங்கள். இராணுவம் பிரதமரின் மாளிகையைச் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறது. அவரைக் கொல்லப் போகிறார்கள்....'' என்று ஒரு வேலைக்காரரிடம் சொன்னார். அவர் அதை அப்பாவிடம் சொன்ன போது, ''என் மரணம் இராணுவத்தினரின் கைகளில் இல்லை; கடவுளின் கையில் இருக்கிறது. எனவே நான் தப்பியோடப் போவதில்லை'' என்று சொல்லி விட்டார்.

அம்மா இவ்வாறு எனக்கு விவரம் கூறிக் கொண்டிருக்கும் போது, அப்பா மேலும் ஃபோன்கள் செய்ய முடியாமல் லைன்கள் துண்டிக்கப்பட்டு விட்டன. ஆனால் பிரதமர் ஃபோன் தவிர, குடும்பத்தினருக்கு ஒரு தனி லைன் இருந்தது. அது ராணுவத்தினருக்குத் தெரியவில்லை போலும். அந்த டெலிஃபோனில் ஜெனரல் ஜியாவோடு அப்பா தொடர்பு கொண்ட போது, ''ஸாரி சார். நான் இது போல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது நாங்கள் உங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்போம். இன்னும் தொண்ணூறே நாட்களில் நான் புதிய தேர்தல்களை நடத்துவேன். நீங்களே மறுபடியும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் படுவீர்கள், நிச்சயம். அப்போது நானும் வந்து தங்களுக்கு சல்யூட் செய்வேன்...'' என்றார் ஜியா.

அன்று ஜியா சொன்னதுதான் எத்தனை பெரிய பொய்!


(Daughter of the East — பெனாசிர் புட்டோவின் சுயசரிதையிலிருந்து சில பகுதிகள்)


Marvel
COCONUT OIL
Godrej
மார்வல்-இதம் தரும் தன்மை
காஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.
ஸ்பன் ஸில்க் போன்ற தன்மை. காஞ்சீவரம் பட்டுப் போன்ற மென்மை. தேங்காய் எண்ணெயின் இயற்கையான நற்குணங்கள் தரும் நுரைவளத்தின் செழுமை.
மற்ற சோப்புகளை விட 3 மடங்கு அதிகம் தேங்காய் எண்ணெய் கொண்டது.
Mudra : B : G : 5004 : TM

இப்போது

ஹார்லிக்ஸ்
கூடுதல்
கால்ஷியத்துடன்





"அப்படி என்றால் ஒவ்வொருவருக்கும் கூடுதல் ஆரோக்கியம்"

ஹார்லிக்ஸ் இப்போது கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப் பட்டிருக்கிறது—வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் ஹார்லிக்ஸ் மிகவும் முக்கியமானது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு மிகவும் தேவையான கூடுதல் கால்ஷியம் கிடைப்பதிலும் இது உதவுகிறது.

ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது—புரோட்டீன்கள், விட்டமின்கள், மினரல்கள், மற்றும் கார்போஹைட்ரேட்டுகள்—இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. இப்போது கூடுதல் கால்ஷியத்தினால், கூடுதல் ஆரோக்யம்.

சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

18 நீரில் மிதக்கும் நிலவா

''பிடிங்க... பிடிங்க. சீக்கிரம் பிடிங்க. இல்லேன்னா மொத்த ஐஸ்க்ரீமும் கரைஞ்சிடும்...'' என்று அவர்களுக்கு இடையில் புனிதா வந்து சேர்ந்தாள்.

''நான் அப்புறம் சொல்றேன் பிருத்வி'' என்றான் ஸ்ரீநாத்.

பிருத்விராஜ் ஒரு பெருமூச்சு விட்டான்.

அவர்கள் மூன்று பேரும் வீடு திரும்பும் வரை ஸ்ரீநாத், அவன் கேட்க விரும்பிய கேள்வியைக் கேட்கவேயில்லை.

''நீ... நீ... நீ?'' என்று திகைத்தான் அஸ்வின்குமார்.

''நான் ஷில்பாவோட தங்கச்சி... வாங்க அஸ்வின்... ப்ளீஸ் உள்ளே வாங்க...'' என்று திலகா வெகு சுவாதீனமாக அஸ்வின் குமாரின் கையைப் பற்றினாள்.

அஸ்வின்குமார் உள்ளே நுழைந்தான்.

பின்னாலேயே ஜூபிடர் ரத்தினமும். ஜூபிடர் ரத்தினம் பத்து வயது கூடியவரைப் போல் களைத்து இருந்தார்.

வீட்டுக்குள் நுழைந்ததும், ''நீங்க வாங்க அஸ்வின்'' என்று அஸ்வின்குமாரை மாடிப் படிப் பக்கம் அழைத்துப் போனார். திடீரென்று நினைவுக்கு வந்த மாதிரி, ''என்ன சாப்பிடறீங்க அஸ்வின்?'' என்று கேட்டார்.

''நானா, இந்த நேரத்திலேயா? ஸ்காட்ச் தான். தொட்டுக்க சிப்ஸ், இல்லே முந்திரிப் பருப்பு... ஒண்ணுமில்லேன்னா ஊறுகாய்'' என்றான் அஸ்வின். ஓஹோ என்று சிரித்தான்.

ஜூபிடர் ரத்தினமும் பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டு விட்ட மாதிரி சிரித்தார். திலகா குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

''ஷில்பா எங்கே?'' என்றான் அஸ்வின் குமார்.

''ஷில்பா எங்கே திலகா?''

''மாடியிலே.''

''திலகா... உம் பேரு திலகாவா...? ஸ்வீட் நேம்... என்ன ஜூபிடர், நீ நெறைய விஷயங்களை எங்கிட்டேர்ந்து மறைக்கறே...?''

''நானா...?'' என்று பதறிப் போய்க் கேட்டார் ஜூபிடர் ரத்தினம்.

''ஆமா. ஷில்பாவை விட அழகா இன்னொரு பெண்ணைப் பெத்து வெச்சிருக்கே. மூச்சே விடலியே? எங்கேய்யா உன் ஒய்ஃப்? உனக்கும், ஒம்பொண்ணுங்களுக்கும் சம்பந்தமேயில்லே. ஒன் ஒய்ஃபைப் பார்க்கணும்...''

''அம்மா இறந்துட்டாங்க அங்கிள்'' என்றாள் திலகா.

''ச்ச்ச... ஐ'ம் ஸோ ஸாரி. ஐ'ம் ஸோ ஸாரி...'' என்றவன் திலகாவின் தலையில் கைவைத்து வருடினான். வருடிய கையை அப்படியே கீழிறக்கி முதுகைத் தொட்டு, முதுகிலிருந்து கீழிறக்கி...

திலகாவிற்குச் சந்தோஷமாய் இருந்தது.

''நீங்க எவ்வளவு பெரிய ஹீரோ. நீங்க எங்க வீட்டுக்கு வந்து எங்க கூடல்லாம் இவ்வளவு சகஜமாப் பழகுவீங்கன்னு நான் கனவுல கூட நெனைச்சிப் பார்த்ததில்லே அஸ்வின்'' என்றாள்.

''சபாஷ்'' என்றான் அஸ்வின்குமார். திலகாவின் தோளைப் பற்றி அப்படியே இறுக்கிக் கொண்டான். ''இந்தப் பொண்ணு தான்யா ஃபீல்டுக்கு ஏத்த பொண்ணு. டைரக்டர் கண்ல இவளைக் காமிக்கிறதை வுட்டுட்டு அந்தச் சிடுமூஞ்சியைக் காமிச்சித் தொலைச்சிட்டியே... நீ சினிமாவில ஆக்ட் பண்றியா திலகா?''

''நானா அஸ்வின்?'' என்று வியப்புடன் கேட்டாள் திலகா.

''நீதான்.''

''என் ஃபேஸ் சினிமாவுக்குச் சரிப்பட்டு வருமா அஸ்வின்?''

''இப்ப இருக்கிறதுங்க எல்லாம் என்ன நேரா தேவலோகத்திலேர்ந்தா எறங்கி வந்திருக்குங்க? நீ ஃபீல்டில நுழைஞ்சா எல்லாரையும் சாப்ட்டுருவே, உங்க அக்காவையும் சேர்த்துத்தான் சொல்றேன். என்ன நடிக்கிறியா சொல்லு, நான் ஏற்பாடு பண்றேன்.'' அஸ்வின் இன்னும் திலகாவை விடாமல் பேசினான்.

ஜூபிடர் ரத்தினம் நெளிந்தார். சமையல் கட்டின் வாசலில் நின்றிருந்த ராணி கண்களாலேயே அப்பாவை எரித்து விடுபவளைப் போல் பார்த்தாள்.

''நாம மேலே போய்ப் பேசுவோமே அஸ்வின்.''

''போகலாம். அதுக்கு முன்னால கொஞ்சம் ஊறுகாயாவது...''

''நான் எடுத்துட்டு வர்றேன் அஸ்வின்'' என்று திலகா ஓடினாள். சற்று முன்னால் ராணி திட்டியது, ராணியைப் பதிலுக்குத் திட்டியது, ஷில்பாவிடம் அறை வாங்கியது எல்லாம் மறந்து போய்த் திலகாவை முழுக்க முழுக்க அஸ்வின்குமார் ஆக்கிரமித்திருந்தான்.

ஜூபிடர் ரத்தினம் தான் போடப்பட்டிருந்த அறைக்கு முன்னால் நின்றுகொண்டு மூன்றாவது முறையாகக் கதவைத் தட்டினார்.

சிவா

"ஷில்பா, கதவைத் தெறம்மா... அஸ்வின் வந்திருக்காரு."

அஸ்வின்குமார் ஜூபிடருக்குப் பக்கத்தில் அலட்சியமாக நின்றிருந்தான். விரலிடுக்கில் சிகரெட்டைப் பற்றியிருந்தான். ஜெர்கின் பாக்கெட்டுக்குள் கையை விட்டு, ஸ்காட்ச் நிரப்பப்பட்ட பட்டையான அலுமினிய டப்பாவை வெளியில் எடுத்துத் திறந்து களக், களக் என்று இரண்டு 'மடக்'கு குடித்தான்.


படீரென்று கதவு திறக்கப்பட்டது. ஷில்பா ஆவேசத்தோடு அப்பாவைப் பார்த்தாள்

"இந்த ஆளைக் கூட்டி வரதுக்குத்தான் அவ்வளவு அவசரமா வெளியே போனியாப்பா? இது நம்ம வீடு. நமக்கு யாரைப்புடிச்சிருக்கோ அவங்களை 'வாங்க'ன்னு உள்ளே கூப்பிடலாம். புடிக்காதவங்களை 'வரவேண்டாம்'னு சொல்லலாம். எனக்கு இப்ப 'வரவேண்டாம்'னு சொல்லத் தோணுது..."

"ச்சே... ஆஸ்கார் வாங்கின ஆக்ட்ரஸ் கூட இவ்வளவு ஃபன்டாஸ்டிக்கா எக்ஸ்ப்ரஷன் குடுப்பான்னு எனக்குத் தோணலை ஷில்பா. உன் ஃபேஸ் அவ்வளவு அழகா சுவிட்ச் போட்டா மாதிரி எக்ஸ்ப்ரஷன் காட்டுது. இந்தப் பிடிவாதம்தான் எனக்கு உங்கிட்ட ரொம்பப் புடிச்சிருக்கு. ஆனா நீ இப்ப என்னவோ சொன்னியே 'வரவேண்டாம்'னு சொல்லத் தோணுதுன்னு அதான் பிடிக்கலை. ஏன் தெரியுமா? இது என் வீடு. சும்மா பேச்சுக்குச் சொல்லலை. என் சொந்த வீடு. பத்திரம் பார்த்தாத்தான் நம்புவேன்னு சொன்னா பத்திரம் காட்டச் சொல்றேன்" — அஸ்வின்குமார். ஜூபிடர் ரத்தினத்தை ஒதுக்கிவிட்டு, ஷில்பாவைத் தொட்டு விலக்கி உள்ளே நுழைந்து கட்டிலில் உட்கார்ந்தான்.

"என்னப்பா இது?" என்றாள் ஷில்பா.

"இது இவர் வீடுதாம்மா. நாம கௌரவமா இருக்கணுங்கறதுக்காகவே அவருடைய வீட்டை நமக்காகன்னு விட்டுக் கொடுத்திருக்காரு



பாப்பா."

"என்ன பாப்பா, இப்பவாவது நம்பறியா...?" அஸ்வின்குமார் அலுமினியக் குப்பியை எடுத்து இன்னொரு மடக்குக் குடித்தான். "நான் உம்மேல இவ்வளவு அக்கறை எடுத்துக்கறேன். நீ என்னடான்னா அந்த ரைட்டர் பின்னால போய்க்கிட்டிருக்கியே. ஹோட்டல்ல ஒங்கிட்ட என்ன சொல்லிக்கிட்டிருந்தான் அந்த ரைட்டர்?"

"என்னை வேவு பார்க்கிறீங்களா? நான் எனக்கு இஷ்டமானவங்க கூட போவேன், வருவேன். அதைக் கேக்கறதுக்கு உங்களுக்கு உரிமை கெடையாது."

"என் வீட்டிலேயே இருந்துக்கிட்டு என்னையே எதிர்த்துப் பேசற பார்த்தியா. நீ யார் கூட வேணும்னாலும் போ. வா. எனக்கு அதைப் பத்திக் கவலையில்லே. கூடவே நான் சொல்றதையும் கொஞ்சம் கேட்டுக்க. நான் நெனைச்சேன்னா உன்னை ஃபீல்டிலேர்ந்தே தூக்கி எறிஞ்சிருவேன். என் இஷ்டப்படி உன்னை என்ன வேணும்னாலும் செய்வேன். அதுவும் என்னால முடியும். போனாப் போகட்டும்னு விட்டு வெச்சிருக்கேன், உங்கப்பனுக்காக. உனக்கு அந்த ரைட்டர் பையன் மேல என்ன அவ்வளவு இன்ட்ரஸ்ட்? அவனையே இல்லாமப் பண்ணிட்டா? இந்தப் படம் அவனில்லாம முடிச்சிக் காட்டட்டா? ஆம்பிளை ஆம்பிளைதான், பொம்பளை பொம்பளைதாண்டி..."

அஸ்வின்குமார் லேசாகத் தள்ளாடினான். உள்ளே நுழைந்த திலகாவைப் பார்த்தான். அவள் கையிலிருந்த ஊறுகாயைப் பார்த்தான்.

"இதில்ல பொண்ணு" என்றான். திலகாவின் கையைப் பற்றி ஊறுகாயை ஒரு விரலால் தொட்டு நாக்கில் வைத்துக் கொண்டான்.

"ஊறுகா புதுசா திலகா, சும்மா சிர்னு தூக்குதே என்னை மாதிரி?" என்றான்.

இளங்குமரன் வீட்டு ஹால். சோஃபாவில் அவர்கள் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய கப்பல் ஏதோ ஒன்று இன்ஷூர் செய்யப்படாமலே கடலில் கவிழ்ந்து விட்ட முகபாவத்துடன் இருந்தார்கள்.

தப்பித் தவறி ஹாலுக்குள் நுழைந்த இளங்குமரன் வீட்டு வேலைக்காரனைப் பார்த்தவுடன் சடாரென்று எழுந்தார்கள்.

"எங்கேய்யா உன் டைரக்டரு...?" என்றார்கள்.

"தூங்கிட்டிருக்காருங்க. எழுப்பி இருக்கேன். இதோ வந்துடுவாரு" என்றான் வேலைக்காரன்.

"இன்னிக்கு ரெண்டுல ஒண்ணு பார்த்துட்டுத்தான்யா போறது... பணம் போட்ட நாங்க எல்லாம் மாங்கா மடையனுங்க. அந்தப் பணத்திலே கும்மாளம் போடற உங்க டைரக்டருதான் புத்திசாலி... அப்படித்தானேய்யா அவன் எண்ணம்?"

வேலைக்காரன் பதில் சொல்லாமல் மாடிப்படியேறினான்.

"அந்தாளைக் கூட்டிக்கிட்டுத்தான் நீ கீழே வரணும். இல்லே, மோசடி கேஸ் போட்டு, நீ, உன் டைரக்டரு எல்லோரையும் ஒட்டுமொத்தமா உள்ளே தள்ளிடுவோம், ஜாக்கிரதை."

இளங்குமரன் அவனுடைய அறைக்குள் இருந்தான். அறையில் இருந்த அத்தனை கண்ணாடி ஜன்னல்களையும் திரைச்சீலைகள் மறைத்துக் கொண்டிருந்தன. பட்டப் பகலில் அந்த அறையில் செயற்கை இருட்டு சூழ்ந்து கொண்டிருந்தது. இளங்குமரன் மல்லாந்து படுத்திருந்தான். பறக்கிறாற் போன்ற உணர்வுடன் இருந்தான். அவ்வப்போது விரலிடுக்கில் பிடித்திருந்த சிகரெட்டை உதட்டில் பொருத்தி ஆழ உறிஞ்சினான்.



பக்கத்தில் இருந்த அந்தப் பெண்ணுக்கு இருபதிலிருந்து இருபத்திரண்டு வயது சொல்லலாம். கதாநாயகி ஆகும் ஆசை யுடன் இருந்தாள். அவள் இளங்குமரன் மார்பு முடியினைத் தன்னுடைய வலது ஆட் காட்டி விரலில் சுற்றிச் சுற்றிக் களைந்து கொண்டிருந்தாள்.

''அடுத்த படத்திலயாவது எனக்கு ஹீரோயின் பார்ட் கொடுக்கறீங்களா?''

''ம்.''

''அண்ணே...''

இவன் வேறு. இத்துடன் மூன்றாவது முறையோ, நான்காவது முறையோ கதவைத் தட்டுகிறான்.

''என்னடா?'' என்றான் சிந்தனை பாதிக் கப்பட்ட இளங்குமரன்.

''ஆனா ரூனாவும், அய்யப்பனும் ஹால் லேயே உக்காந்திருக்காங்கண்ணே.''

''கெடக்கட்டும்.''

''ரொம்பக் கோவமா இருக்காங்க. போலீ சுக்குப் போகப் போறாங்களாம்!''

இளங்குமரன் கட்டிலில் இருந்து அப் படியே எழுந்தான்.

''என்ன எழுந்துட்டீங்க! புடிக்கலையா?'' என்றாள் அவள்.

''அடச்சீ... சும்மா இரு'' என்றான். தள் ளாடித் தள்ளாடிச் சென்று கதவைத் திறந்தான்.

''வாங்க... வாங்க'' என்று கையைக் கூப்பிக் கொண்டு அவர்கள் எதிரில் உட் கார்ந்தான் இளங்குமரன். ''என்ன சாப்பிட றீங்க?''

''சாக்கடையில கொட்டுய்யா உன் சாப் பாட்டை. கணக்கு எவ்வளவு ஆயிருக்குது தெரியுமா? இருபது லட்சம். அதுக்கு வட்டி எவ்வளவு தெரியுமா? ஏற்கெனவே பத்திரி கைக்காரனுங்க உன்னைப் பத்தி கன்னா, பின்னான்னு எழுதறானுங்க. உன்னை நம் பிப் பணத்தைப் போட்டுட்டு நாங்க அல்லா டிட்டு இருக்கோம். நீ என்னடான்னா பகல் பன்னெண்டு மணிக்குத் தூங்கிட்டிருக்கே...''

''ரொம்பக் கோவமா இருக்கீங்க போல இருக்கு...''

''இல்லே. ரொம்ப சந்தோஷமா இருக் கோம். செட்ல இருக்க வேண்டிய ஆளுக்கு வீட்ல என்னய்யா வேலை? படம் என்ன, தானா வளருமா?''

''நீங்க புரியாம பேசறீங்க. நம்ப காமிரா மேனும் ரைட்டரும் படத்தைப் பாத்துக் கறாங்க. உங்க பணம் எங்கேயும் போய் டாது. நான் கியாரண்டி.''

''கியாரண்டி கொடுக்கிற மூஞ்சைப் பாரு. படத்தில நடிக்கிற பொண்ணும் புதுசு. ஒன் அஸிஸ்டென்ட்டுக்கும் ஷாட்னா என் னன்னு தெரியாது. காமிராமேன் இருக் கான். ரைட்டர் இருக்கான்னு சொல்ற. நாங்க அவனுங்களைப் பாத்தாப் பணத் தைப் போட்டோம்? உம் பேரை நம்பித் தானே போட்டோம்? ஏற்கெனவே உன் 'எங்கே என் இதயத்தை டென்ட், டென்டா தொரத்தி அடிக்கறானுங்க. இதில எந்த தைரியத்தில நீ மொப்புல உக்காந்திருக்கே?''

''நீங்க செட்டுக்குப் போய்ப் பாத்துட்டு வந்து பேசுங்க. சும்மா கத்திக்கிட்டிருந்தா ஒண்ணும் நடக்காது. ஓடற நாயைப் பாத்தா தூரத்தற நாய்க்குக் குஷிங்கற மாதிரி நீங் களும் கத்திக்கிட்டேயிருப்பீங்க. நான் கேட்டுக்கிட்டே இருப்பேனா. உனக்குப் படம் பண்றதுன்னா என்னன்னு தெரியு மாய்யா? போய்யா... முதல்ல வெளிய போய்யா. உனக்குப் படம் பண்ணித் தர முடியாது. பணமும் திருப்பித் தர முடியாது. என்ன கிழிக்க முடியுமோ, கிழிச்சுக்க போ. போய்யா... போய்யான்னா... கெட்—அவுட்''

''ஆதை எங்க நிக்குது பிருத்வி, மீராவுக் கும் சந்திரமௌலிக்கும் கல்யாணம் பண்ணி ஜமாய்ச்சிடலாம்னு சொல்ற எடத்துல தானே?'' என்றான் ஸ்ரீநாத்.

''ஆமா.''

''அதுக்கு மேல பாப்போமா?''

ஹிக்கின் பாதம்ஸில் மனிதர்கள் நிறைந்திருந்தார்கள். ஜிப்பாவும், வேஷ்டி யும், பான்ட்டும், ஷர்ட்டும், குர்த்தாவும் பைஜாமாவும், பாவாடையும் தாவணியும் புடைவையும், ரவிக்கையும் என்று விதவித மாக இறைந்து மௌனமாய்ப் புத்தக முதுகு களை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

மதுமதி மணவியலைத் தேடிப் போனாள். துணையாக வந்திருந்த சந்துரு வேறு பக்கம் பார்வையைச் செலுத்தினான். நிறையப் புத்தகங்கள். எதை வாங்குவது என்று புரி யாமல் கடைசியில் மதுமதிக்குப் பக்கத்தி லேயே வந்து நின்று கொண்டான்.

மதுமதி மூன்று மணவியல் புத்தகங்களைக் கையில் எடுத்துக் கொண்டாள். கவுன்டரை நோக்கி நடந்தாள்.

''ஆமா, நீ அட்வர்டைஸ்மென்ட் லைன்ல இருந்துக்கிட்டு எதுக்கு சைக்காலஜி புக்கெல் லாம் வாங்கிட்டிருக்க மது?''

''பப்ளிசிடியும் அட்வர்டைஸ்மென்டும் சைகாலஜியைத்தான நம்பியிருக்கு சந்துரு. அது மட்டுமில்ல, எனக்கு எப்பவுமே சைகாலஜின்னா ரொம்பப் பிடிக்கும்.''

கவுன்டருக்கு வந்து பில்லுக்குப் பணம் கொடுக்கும்போது ''மேடம்'' என்று உற்சாக மாய் ஒரு குரல் வந்து மதுமதியைத் தாக்கி யது. மதுமதி திரும்பினாள்.


சகுந்தலா, நிர்மலா, ராஜலட்சுமி, சந்திர கலா. அத்தனை பேரும் அலுவலக உறவு கள். நின்றிருந்தார்கள். குரல் கொடுத்தவள் ராஜலட்சுமி.

''ஹலோ'' என்றாள் மதுமதி.

''உங்க ஃபியான்ஸியை எங்களுக்கும் இன்ட்ரட்யூஸ் பண்ணக் கூடாதா மேடம்?'' என்றாள் அபாயகரமாய்ப் புடைவை கட்டி யிருந்த சகுந்தலா. அவள் பார்வை சந்துரு வைக் கவனிக்க, மற்றவர்கள் சந்துருவை யும், மதுமதியையும் மாறி மாறிப் பார்த்தார் கள்.

(தொடரும்)

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து


6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை


"அம்மாவோட காபியை விட என் காபி ரொம்ப நல்லாயிருக்கும்!"
Parry's
காஃபி பைட்
"காபின்னு இப்படித்தான் இருக்கணும்!"
PARRY'S
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
காமில்க் • சாக்லேட் எக்ளேர்ஸ்
ட்ரை-மி • கோகனட் கிரீம் • சாக்லேர்ஸ்
லாலிபாப்ஸ் • காஃபி பைட்
Parry's
The King of Sweets
HTA 7037


துப்பறியும்
சூர்யா - கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
ஆய்வுக்கூடக் கழிவுப் பொருள்களின் வடிகால் கடலில் முடிவுற்றது.
கிரண், கடல் நீரில் அழுக்குப் போகக் குளித்தாள்...
ஒரே களைப்பாயிருக்கிறது......
கரையேறி, ஒரு பாறையில் உடை உலர அமர்ந்தாள்.
ஒரு நீர்மூழ்கிக் கப்பலின் 'பெரிஸ்கோப்' தெரிந்தது.
அது அவளை நெருங்கி வந்து கொண்டிருந்தது.
சட்டென்று ஒரு பாறைக் குவியலை நோக்கி ஓடி, ஒளிந்து கொண்டாள்.
ஒரு பெரிய ஹெலிகாப்டர் அந்தப் பக்கம் வந்து, கடற்கரையில் இறங்கியது.
(தொடரும்)

காதல் தயக்கம்

மதுமனோ

அட்டெண்டர் சுந்தரம் ஒரு கற்றைப் ஃபைலுடன் உள்ளே நுழைந்த போது இளம் மானேஜர் ரகுவரன் எரிச்சலுடன் அவனைப் பார்த்தான். காலையில் வந்ததிலிருந்து ஃபைல்களும் லெட்ஜர்களும் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாய் வந்து கொண்டிருக்க அவனுக்குச் சிறிதும் ஓய்வில்லாமல் போய் விட்டது.

வேண்டா வெறுப்பாய் மேலே இருந்த ஒரு ஃபைலை எடுத்துப் பிரித்தான். மனசில் தென்றல் அடித்தது.

அது பிரமிளா அனுப்பி வைத்த ஃபைல். அவள் போன மாதம்தான் வேலைக்கு வந்து சேர்ந்திருந்தாள். அவளைப் பார்த்த முதல் நாளே அவன் மனசு சபலமாயிற்று.

ஃபைலின் பக்கங்களை நிதானமாய்ப் புரட்டினான். முத்து முத்தான கையெழுத்து அவளைப் போலவே. அது ஒரு டீலர் கேட்டிருந்த வியாபாரத் தகவல்கள். சுத்தமாய் இருந்தது. மூன்று பக்கங்களில் எழுதியிருந்தாள். மூன்றாவது பக்கத்தின் கீழே கொஞ்சம் இடம் மிச்சமிருந்தது. யோசனையாய் அந்தக் காலி இடத்தைப் பார்த்தான்.

'டார்லிங் ஐ லவ்யு' என்று எழுதிக் கையெழுத்துப் போட்டு விடலாமா? விஷயம் சுலபமாய் முடிந்து விடும். எதற்காக இப்படி தினமும் முடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டும்? யாராவது பார்த்து விட்டால்....! சை! மானம் போய் விடும்.

"சார்...."

நிமிர்ந்தான். அட்டெண்டர் காத்துக் கொண்டிருந்தான். தான் வந்து அரைமணி நேரத்திற்கு மேல் ஆகி விட்டது என்பதைப் பார்வையால் உணர்த்தினான்.

"என்ன அவசரமா?"

"இல்லை சார்... வெளியே ரெண்டு பாம்பே ஏஜெண்டுங்க காத்துக்கிட்டிருக்காங்க..."



''எந்த ஃபைல்?''

அட்டெண்டர் அந்த ஃபைலை உருவி மேலே வைக்க, ரகுவரன் மேலோட்டமாய் ஒரு பார்வை பார்த்து விட்டுக் கையெழுத்திட்டான். அவன் அதை எடுத்துக் கொண்டு நகர்ந்ததும் சொன்னான்.

''மிஸ் பிரமிளாவை வரச் சொல்.''

''சரி சார்.''

சற்று நேரத்திற்கெல்லாம் கதவைத் திறந்து கொண்டு பிரமிளா வந்தாள். அவள் உள்ளே பிரவேசித்ததும் கண் இமைக்காமல் அவளையே பார்த்தான்.

என்ன நேர்த்தியான அழகுச் சிலை இவள்! புடைவை விளம்பரத்துக்குப் போஸ் கொடுப்பது போல என்ன ஒய்யாரம்!

''குட்மார்னிங் சார். என்னைக் கூப்பிட்டீங்களா?''

முறுவலித்தான். ''வெரிகுட்மார்னிங். உங்க ஃபைலைத்தான் பார்த்துக்கிட்டிருக்கேன்.''

''என்ன சார். ஏதாச்சும் ஸ்டேட்மெண்ட் தப்பா இருக்கா?''

''நோ..நோ... உங்க ஸ்டேட்மெண்ட்ல தப்புச் சொல்ல முடியுமா? ஜஸ்ட் ஒரு சேஞ்ச் அவ்வளவுதான். இதோ இந்த இடத்துல...'' என்று அவன் ஒரு வரியைச் சுட்டிக் காண்பிக்க, அவள் இன்னும் கொஞ்சம் மேஜையை நெருங்கி வர, சந்தன சோப்பின் சுகந்தம் நாசியில் ஜிலுஜிலுவென்று ஏறியது.

''எப்படி சார் இருக்கணும்?''

ரகுவரன் சுதாரித்துக் கொண்டு விளக்கினான். ''....போன வருடத் தயாரிப்பு விலையை விட'ன்னு எழுதறதுக்குப் பதிலா போன வருடத்தை விட புதிய தயாரிப்பின் விலைன்னு எழுதினா நல்லா இருக்கும்.''

''ஓ.கே. சார். வேற ஏதாச்சும் மாத்தணுமா?''

''வேற எதுவும் இல்லை. மத்ததெல்லாம் கிளியரா இருக்கு. சீக்கிரத்திலேயே வேலைய நல்லாக் கத்துக்கிட்டிருக்கீங்க. ஐ லைக் யுவர் பர்ஃபாமென்ஸ். வேலையை மட்டும் சொல்லலை.''

''தேங்க்யூ சார்.''

''அப்புறம்... வந்து... எனி ப்ராப்ளம் இன் ஓர்க்?''

''ஒண்ணுமில்லை சார்.''

''எனி ஹெல்ப்? எனிதிங் டு ஸே?''

''நோ. தேங்க்ஸ்.''

சின்னதாய் ஒரு புன்னகையை உதிர்த்தாள். அவன் ஒருவித கிறக்கத்ினூடே கையெழுத்துப் போட்டுத் தர, அந்த ஃபைலை வாங்கிக் கொண்டு வெளியேறினாள்.

அவள் சென்றதும் மனசு குத்தலாய்க் கேட்டது. நீ செய்தது கொஞ்சமாவது சரியா? இப்படியே எத்தனை நாள்தான் கோட்டை விட்டுக் கொண்டிருக்கப் போகிறாய்? உனக்கு அவளைக் காதலிக்க, மனைவியாய் அடைய எல்லாத் தகுதியும் இருக்கிறது. அப்படியிருந்தும் ஏன் தயக்கம்? ஏன் பயம்?

ஆபீஸ் வேலை ஏகமாய்ச் சேர்ந்து போயிருந்தது. மிகவும் சிரத்தையுடன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான் ரகுவரன். திடீரென மூடிய கதவையும் மீறி யாரோ சண்டை போடும் சத்தம் கேட்க, எழுதுவதை நிறுத்தி விட்டுக் கதவுப் பக்கமாய்ப் பார்த்தான். அதற்குள் அட்டெண்டர் கதவைத் திறந்து கொண்டு வேகமாய் உள்ளே வந்தான்.

''சார்! பிரமிளா மேடமும் அகௌன்ட்ஸ் கிளார்க்கும் சண்டை போட்டுக்கிட்டிருக்காங்க!''

திகைப்புடன் கேட்டான். ''என்ன விஷயம்?''

''தெரியலை.''

விருட்டென எழுந்து பில் செக்ஷனுக்குச் சென்றான். பிரமிளா ஆக்ரோஷத்துடன் குருபரனைத் திட்டிக் கொண்டிருந்தாள். ''யு ராஸ்கல்! என்னை என்னன்னு நெனைச்சே?''

''ஸாரி மேடம்.''

''என்ன ஸாரி, யு டர்டி ஸ்கௌன்ட்ரல்.''

''ஸ்டாப் தட்'' என்று இடை புகுந்தான் ரகுவரன். ''என்ன இதெல்லாம்?''

குருபரன் ஒன்றும் சொல்லவில்லை. பிரமிளாவே எல்லாவற்றையும் விவரித்தாள்.

''என்னை இவன் என்ன கேட்கிறான் தெரியுமா சார்? 'சாயங்காலம் ப்ரீயா? பீச்சுக்கு வாங்களேன்'னு கூப்பிடறான். ஒரே ஆபீஸ்ல அதுவும் ஒரே செக்ஷன்ல வேலை செய்றவளாச்சேன்னு பழகினதுக்கு எப்படி கேவலமா நடந்துக்கிட்டான் பார்த்தீங்களா?''

அவள் கண்கள் கலங்கின. ரகுவரனுக்கு மனது விண்ணென்றது.

''மிஸ்டர் குருபரன்!'' என்றான் கோபமாய். ''ஒரு பெண்கிட்ட இப்படித்தான் நடந்துக்கிறதா? என்ன துணிச்சல் இருந்தா அவங்களை பீச்சுக்கு வரச் சொல்லிக் கேட்டிருப்பீங்க. ஐ வில் டேக் சிவியர் ஆக்ஷன்.''


அவளே மேலும் பிசிறடித்த குரலில் சொன்னாள் —

''இது மட்டுமில்லை சார். போன மாதம் கூட என் மேஜை டிராயர்ல 'ஐ லவ் யு பிரமிளா'ன்னு ஒரு சின்னப் பேப்பர்ல எழுதி வைச்சுட்டான். வேலைல சேர்ந்த கொஞ்ச நாள்லயே எதுக்கு ரகளைன்னு பேசாம இருந்துட்டேன். கடைசில என்னை இப்படி கேட்டுட்டான். எனக்கு மனசு கொதிக்குது சார்.''

டிராயரைத் திறந்து அந்தச் சின்னத் துண்டுக் காகிதத்தை எடுத்துக் காண்பித்தாள். ரகுவரன் அதை வாங்கிப் பார்த்தான். அது குருபரனின் கையெழுத்துத்தான் என்பது தெள்ளத் தெளிவாய்த் தெரிந்து விட்டது.

''குருபரன்! இதை நீங்கதானே எழுதினீங்க?''

''மன்னிச்சுடுங்க சார். ஏதோ தெரியாம



''பீச்சுக்குப் போகலாமா?''

''அங்கே படகு மறைவுக்குக் கூட்டிட்டுப் போய்க் கைமாத்து கேட்கக்கூடாது. சம்மதம்னா வர்றேன்!''

— ஞா. ஞானமுத்து.

செஞ்சுட்டேன்.'' — அவன் குரலைத் தாழ்த்திப் பணிவாய்க் கேட்டுக் கொண்டான்.

''அதெப்படி மிஸ்டர் மன்னிக்க முடியும்? இது ஒரு பெண்ணோட மானப் பிரச்னை. அது மட்டுமில்லை. ஆபீஸ்ல நடக்கக் கூடாத ஒழுங்கீனமான செயல் இது. திஸ் ஈஸ் ஹைலி இன்டிஸிப்ளின்ட் ஆக்ட். உங்களை உடனே ஒரு மாதத்திற்கு சஸ்பெண்ட் பண்றேன்.''

''சார்...''

ரகுவரன் அங்கு நிற்கவில்லை. வேகமாய்த் தன் அறைக்குச் சென்று ஸ்டெனோவை அழைத்தான்.

குருபரனுக்கு ஒரு மாத கால சஸ்பென்ஷன் ஆர்டர் கிடைத்த பிறகு பிரமிளா கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். ரகுவரன் ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வழங்கினான்.

''நீங்க கவலைப்படாதீங்க மேடம். பொறுக்கிப் பயலுங்க. பெண்களைப் பார்க்கும்போதே தப்புக் கணக்குப் போடறானுங்க. உங்களுக்கு மனசு சரியில்லைன்னா லெட்டர் எழுதிக் கொடுத்துட்டு வீட்டுக்குப் போயி ரெஸ்ட் எடுங்க. நாளைக்கு வந்து வேலையைக் கவனிச்சாப் போதும்.''

அவன் மீதிருந்த அன்பு, கரிசனம் அத்தனையும் வெளியே கொட்டினான்.

''வேண்டாம் சார்'' என்றாள் அவள். ''நீங்க அவனுக்குக் கொடுத்திருக்கிற சஸ்பென்ஷன் ஆர்டரே போதும். இப்பத்தான் என் மனசுக்கு நிம்மதியா இருக்கு. இப்படியொரு தண்டனை கிடைச்சா இனி எந்த பொம்பளை பொறுக்கியும் இப்படி வாலாட்ட மாட்டான்.''

அவனுக்கு உள்ளுக்குள் சிவுக்கென்றது. தன்னையும் எங்கே பொம்பிளை பொறுக்கி வரிசையில் சேர்த்து விட்டாளோ என்று நினைத்துக் கொண்டான். பிறகு இயல்பாய் உபதேசித்தான்.

''இனிமே நீங்க ஜாக்கிரதையா இருக்கணும். யாரோடயும் இனி அவ்வளவா பேசாம இருக்கிறது நல்லது. ஏதாச்சும் சந்தேகம்னா தயங்காம என்கிட்ட வந்து கேளுங்க.''

''தேங்க்யூ சார்.''

சென்று விட்டாள்.

அவனுக்கு மனசில் பலவித எண்ணங்கள் ஓடியது. நல்ல காலம்! அவசரப்பட்டுக் காதல் கடிதம் எதுவும் எழுதிக் கொடுக்காமல் போனோம். இல்லையென்றால் நமக்கும் இதே தலைகுனிவுதான் ஏற்பட்டிருக்கும்!

அதெப்படி உறுதியாய்ச் சொல்ல முடியும்? பிரமிளா என்னிடம் பழகும் விதமே வேறுதானே? அந்தக் கண்களே சொல்கின்றனவே! கண்கள் மட்டும்தானா? இனியும் தயங்கக் கூடாது. ஏதாவது நாசூக்கான வழியில் அவள் மீதிருக்கும் காதலை வெளிப்படுத்தி விட வேண்டும்.

ஒருநாள் அட்டெண்டரை அனுப்பிப் பிரமீளாவை வரச் சொன்னான். அவள் வருவதற்குள் ஒரு விதியோகஸ்தர் கொடேஷன் கேட்டு அனுப்பியிருந்த கடிதத்தை எடுத்து மேஜை மீது வைத்தான்.

தொலைபேசியின் ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டான்.

அவள் உள்ளே பிரவேசித்ததும் —

''சொல்லுங்க. இப்படியே எத்தனை நாள்தான் காத்துக்கிட்டிருக்கிறது?''

''............''

''ஆமாம். ஆனா எல்லாத்தையும் மனசுலேயே வைச்சுக்கிட்டிருந்தா எனக்கு எப்படித் தெரியும்? வாழ்க்கையில எதிலும் தெளிவு வேணும். எல்லாத்துக்குமே தயங்கக் கூடாது.''

''...............''

''ஒய் நாட்? நல்லா யோசிச்சுப் பாருங்க. மனசுக்குப் பிடிச்ச ஒன்னை எதுக்காக மூடி மறைக்கணும்? அதுல என்ன பிரயோஜனம்? வாழ்க்கை சீர்ப்படணும்னா, முதல்ல மத்தவங்க பாதிப்பைப் புரிஞ்சுக்கத் தெரிஞ்சுக்கணும். மத்தவங்க உணர்வுகளை மதிக்கத் தெரிஞ்சுக்கணும்.''

''...............''

''நல்லது. சீக்கிரமா உங்க முடிவைச் சொல்லுங்க. நான் ஆவலாக் காத்துக்கிட்டிருப்பேன். அது சுபமான முடிவா இருக்கணும்.''

''...........''

''ஓகே. பை.''

ரிஸீவரை வைத்து விட்டுப் புன்முறுவலுடன் அவளை ஏறிட்டான். அவள் முகத்தில் ஒரு மாற்றம் வந்திருந்தது. பார்வையில் ஓர் ஆதங்கம் இழையோடியது.

''என்னைக் கூப்பிட்டீங்களா சார்?''

''ஐயாம் ஸாரி. ''நான் எதுக்காக உங்களைக் கூப்பிட்டேன்னு புரிஞ்சுக்கிட்டீங்களா?''

உங்கள் பால்காரர் இரவு 10 மணிக்கு பால் கொண்டு தருவாரா?




என் பால்காரர் தருவார்



உங்கள் மகன் இரவு வெகுநேரம் படிக்க விரும்புகிறான். அவனுக்கு காப்பி வேண்டும். பாட்டியோ இரவு சாப்பாட்டுக்குப் பதிலாக பால் வேண்டும் என்கிறார். அந்த நேரத்தில் எங்கு சென்று பால் வாங்குவீர்கள்? அமுல் மில்க் பவுடர் கைவசம் வீட்டில் வைத்திருங்கள். கவலையே இருக்காது. பால் தாமதமாக வராது. தீர்ந்து போகாது. திரிந்தும் போகாது.

அமுல் மில்க் பவுடர் கொண்டு தூய்மையான, ஆடை நிறைந்த பாலை நொடியில் தயாரித்து விடலாம். அப்படியே அருந்தலாம். தேனீர், காப்பி, தயிர், மோர், பாயசம், கஸ்டர்ட், கேக், ரஸகுல்லா... எது வேண்டுமோ தயாரிக்கலாம்.



அமுல் மில்க் பவுடர்

RADEUS/AMP/1-88-TAM

வீட்டினுள் இயங்கும் ஒரு பால்பண்ணை.

"எல்லாமே புரிஞ்சுக்கிட்டேன் சார்."

"தேங்க்யூ பிரமிளா."

ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை. ஒரு சினிமா பார்த்தால் தேவலை போல் தோன்றியது. சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு காரைக் கிளப்பினான். ஞாயிற்றுக் கிழமைக்காகக் காத்துக் கொண்டிருந்தது போல் ரசிகப் பெருமக்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. உள்ளே சென்று இருக்கையைத் தேடி கண்டுபிடித்து உட்கார்ந்தான். படம் அப்போதுதான் ஆரம்பமாகியிருந்தது.

கொடைக்கானலின் பச்சை பசேல் காட்சியை கேமரா அப்படியே திரையில் ஒட்ட வைத்திருந்தது. எடுத்ததும் ஜில்லென்று ஒரு காதல் காட்சி.

காதலர்களின் ஒவ்வொரு அசைவின் போதும் ரகுவரனுக்கு மனத்தில் பிரமிளாவின் நினைவு ஓடியது.

ஆகா! இந்தப் படத்திற்கு பிரமீளாவுடன் வந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? நாட்களை அநியாயமாய் வீணாக்கி விட்டோம். இனியும் சும்மா இருக்கக் கூடாது. நாளை முடிவாய்க் கேட்டு விட வேண்டும்.

லேசாய் 'ப்ரூட்' சென்ட் வாடை அடித்தது. அந்த வாடையை முகர்ந்ததும் அவனுக்குக் குருபரனின் ஞாபகம் வந்தது. மெள்ள முன் பக்கமாய் எட்டிப் பார்த்தான்.

அவனேதான்!

குருபரனின் சுருட்டை முடியும் டிஸ்கோ பனியனும் பளிச்செனக் காட்டிக் கொடுத்தன. அவன் பக்கத்தில் ஒரு பெண். அவள் தோள் மீது வசதியாய் அவனது முழங்கை.

யாரைத் தள்ளிக் கொண்டு வந்து விட்டான் என்று உற்றுப் பார்த்ததில் உறைந்தான்.

அது சாட்சாத் பிரமிளா!

மங்கலான வெளிச்சத்திலும் அவள் முகம் பிரகாசித்தது. அவர்கள் பேசிக் கொள்வது அட்சர சுத்தமாய்க் கேட்டது.

"ஸாரி குருபரன். உங்களை ரொம்பவும் புண்படுத்திட்டேன். நாலு பேர் மத்தியில ஏதேதோ பேசிட்டேன்."

"இட்ஸ் ஆல்ரைட் டார்லிங். எப்படியோ என்னைப் புரிஞ்சுக்கிட்டியே அதுவே எனக்குப் போதும்."

"இருந்தாலும் மானேஜர் இந்த அளவுக்கு ரியாக்ட் ஆவார்னு நான் எதிர்பார்க்கலை."

"அவன் கிடக்கிறான் மடையன்."

"அப்படி சொல்லாதீங்க குரு."

"ஏன்?"

"அவராலதான் உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் உணர்வுகளையும் புரிஞ்சுக்க முடிஞ்சுது."

"ஐஸி... அப்ப நாம அவருக்கு அவசியம் கல்யாணப் பத்திரிகை வைச்சாகணுமே."

"ஷ்யூர்."

அடுத்த நிமிடமே ரகுவரன் அங்கு காணாமல் போனான்.

தொடுவான மனிதர்கள் — வாசகர் கருத்து!



• இந்துமதியின் 'தொடுவான மனிதர்கள்' அமைதியான முறையில் சென்று அலாதியான பாதையில் முடிந்தது. ராதிகா திரும்பி வந்தது மனசுக்கு இதமாக இருந்தது.

சென்னை — 23. வண்ணை கணேசன்.

• 'தொடுவான மனிதர்கள்' ஒன்பது வாரமே வந்தாலும் ஓர் இனிய காவியம். கதையின் முடிவு மிக மிக ரம்மியமானது.

உச்சிப்புளி, கலைப்பிரியன்.

• தொடுவான மனிதர்கள் மினி தொடர் மட்டுமல்ல; 'மணி'யான தொடரும் கூட. பாராட்டுக்கள்.

கோவில்பட்டி, அ. கோபால்.

• 'தொடுவான மனிதர்கள்' என்று ஒரு தலைப்பு அமைந்ததே அருமை! அதைவிட அருமை தலைப்பை ஒட்டிக் கதை அமைந்த விதம். ராதிகாவும் கார்த்திகேயனும் நீண்ட நாள் வாழ என் வாழ்த்துக்கள்.

கடலூர் — 2, ஆர். வேணுமணி.

• ராதிகாவின் பாட்டி போல் வீட்டிற்கு ஒரு பாட்டி தேவை. தொடுவான மனிதர்களில் வரும் பாட்டி மறக்க முடியாத பாத்திரம். இந்துமதிக்குப் பாராட்டுக்கள்.

குத்தாலம், வி. வனஜா.

• கார்த்திகேயன் — ராதிகா திருமணத் தம்பதிகளுக்கு எனது திருமண வாழ்த்துக்கள். ராதிகாவுக்கு வாழ்வு கொடுத்த கார்த்திகேயனுக்கு எனது ஸ்பெஷல் வாழ்த்து.

நெல்லை, எம். என். எடிசன்.

• ஒரு கதைக்கு உயிரூட்டுவது கதாசிரியரின் நடை! மற்றொன்று, அந்தந்த வாரத்திற்கான படம்! கல்கியில் வந்த 'தொடுவான மனிதர்கள்' கதையும், படமும் ஒருங்கே அமைந்து சிறப்பூட்டின. இந்துமதி அவர்களுக்கும், படம் வரைந்த ஜெயராஜ் அவர்களுக்கும் வாழ்த்துக்கள்!

குத்தாலம், வி. சுந்தரராமன்.

5

இன்று இறப்பு விழா

கமிஷனர் ஹில் டெலிபோன் ரிஸீவரை வைத்துவிட்டு, நாற்காலியில் சோர்வாய்ச் சாய்ந்து, நெற்றியைப் பிடித்துக் கொண்டார். புருவங்களின் மேற்பரப்பில் மெலிதாய் வியர்வை.

பூபேஷ் மெல்லிய குரலில் கேட்டார், "ஸார்... எனிதிங் ராங்...?"

ஹில் பெருமூச்சு விட்டார். "எஸ்... ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருந்த கோர்டே இறந்து விட்டார்..."

ஹில் தளர்வான குரலில் சொல்ல, பூபேஷையும் மற்ற போலீஸ் அதிகாரிகளையும் திகைப்பு அள்ளிக் கொண்டது. பூபேஷின் குரல் நடுங்கியது.

"அ...அவர்க்கு எ...எ... என்னாயிற்று...? காரில் நாம் பார்க்கும் போது மயக்கமாகத் தானே கிடந்தார்? ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணும் போது கூட லேசாய் உணர்வு இருந்ததே....?"

ஹில் கர்ச்சீப்பால் தம் முக வியர்வையை ஒற்றிக் கொண்டே பூபேஷிடம் திரும்பினார்.

"டாக்டரின் ரிப்போர்ட்படி கோர்டே மிகக் கடுமையான விஷ வாயுவை முகர்ந்திருக்கிறார். அதாவது முகர வைக்கப்பட்டிருக்கிறார். விஷம் உடம்பில் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பரவி மரணத்தைக் கொடுக்க இவ்வளவு நேரமாகியிருக்கிறது..."

அதிகாரிகள் கமிஷனரைக் கவலையாய்ப் பார்த்தார்கள். கனமான மௌனத்திற்குப் பிறகு ஓர் அதிகாரி கேட்டார்.

"மேற்கொண்டு இந்த இந்தியக் கழுகுகள் விஷயத்தில் நாம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம் ஸார்?"

"முதல் காரியமாய் இதை விளையாட்டுத் துறை அமைச்சகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்தியக் கழுகுகள் விடுத்துள்ள கோரிக்கைக்கு அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரோ.... அமைச்சரின் செயலாளரோதான் பதில் சொல்ல வேண்டும். நாம் இந்த விஷயத்தில் எந்த முடிவுக்கும் வர முடியாது."

சொன்ன கமிஷனர் டெலிபோன் ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலைச் சுழற்ற ஆரம்பித்தார்.

விளையாட்டுத் துறை அமைச்சர் காமோத் பிரசாத், டெல்லியிலிருந்து தனி விமானத்தில் பறந்து வந்து, கவர்னர் மாளிகையில் தங்கி, பின்னங் கழுத்தை இடது கை விரல்களால் தேய்த்து விட்டுக் கொண்டே தன்னைச் சுற்றிலும் விறைப்பாய் உட்கார்ந்து விவரத்தைச் சொன்ன போலீஸ் அதிகாரிகளைப் புன்னகையோடு பார்த்தார். சுவர்க் கடிகாரம் நடுநிசி ஒரு மணி என்றது.

"இது இவ்வளவு தீவிரமான விஷயம் என்று என் மனத்துக்குப் படவில்லை. நம் நாட்டில் இது மாதிரி இயக்கங்கள் தோன்றுவதும் நாளாபட்சத்தில் அது அழிந்து போவதும் வாடிக்கையான ஒன்று."

கமிஷனர் ஹில் குறுக்கிட்டார். "எக்ஸ்க்யூஸ்மீ ஸார்... இந்த இயக்கத்தை நாம் அலட்சியப்படுத்துவதற்கில்லை. ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளவிருக்கும் வீரர்களின் மேல் அவர்கள் குறி வைத்திருக்கிறார்கள். இரண்டு பேர்களை ஏற்கெனவே இழந்து விட்டோம். விமான நிலைய வரவேற்பு நிகழ்ச்சிகளை வீடியோ கவரேஜ் செய்த கோர்டேயையும் கொன்றிருக்கிறார்கள்."

காமோத் ஜிப்பாவுக்குள் ஒளிந்திருந்த தம் தொப்பையை வலது கை ஆட்காட்டி விரலால் கீறிக் கொண்டே சிரித்தார். "தீவிரவாதிகள் என்றால் இப்படிப்பட்ட பயமுறுத்தல் வேலைகளையெல்லாம் செய்யத்தான் செய்வார்கள். இரண்டு பேர் இறந்து போனதற்காக — அவர்களின் கோரிக்கைக்கு இணங்கிப் போய் விடலாம் என்று சொல்ல வருகிறீர்களா... மிஸ்டர் கமிஷனர்?"

"நோ ஸார்... அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கிப் போக வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய மிரட்டலை நாம் அலட்சியம் பண்ணக் கூடாது என்றுதான் சொல்கிறேன்."

"அந்த இந்தியக் கழுகுகள் எத்தனை மணி நேரம் "கெடு" கொடுத்திருக்கிறார்கள்...?"

"இருபத்திநான்கு மணி நேரம்... அதில் ஏற்கெனவே நான்கு மணி நேரம் கழிந்து விட்டது."

"இன்னும் இருபது மணி நேரம் உயிரோடு இருக்கிறது!"

"ஆமாம்."

"இந்த இருபது மணி நேரத்தில் அந்த இந்தியக் கழுகுகளை வேட்டையாட பம்பாய் போலீஸால் முடியாதா...?"

"இந்த நிமிஷமும் பம்பாய் போலீஸ் ஜுர வேகத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது ஸார். புனேயிலிருந்தும், நாசிக்கிலிருந்தும் கூடுதல் போலீஸார் வரவழைக்கப்பட்டு, குற்றவாளிகளைத் தேடும்

பணியில் ஈடு படுத்தப்பட்டுள்ளார்கள்.''

''அந்தப் பணியை அப்படியே தீவிரப் படுத்திக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டியதுதானே...?''

''எஸ்... ஸார்'' ஹரில் தயக்கமாய்த் தலையாட்ட, அமைச்சர் குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டார். ''ஒரு முக்கியமான விஷயம்...! இந்தியக் கழுகுகள் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளுக்குக் கொடுத்து விட்டீர்களா...?''


''இன்னமும் கொடுக்கவில்லை...''

''இனிமேலும் கொடுக்க வேண்டாம். இந்தியக் கழுகுகளை நாம் பிரபலப்படுத்தினால் அதுவே அவர்களுக்கு ஒரு பலமாகி விடும். நாம் அந்த இயக்கத்தை 'இக்னோர்' செய்வது போல் காட்டிக் கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரைக்கும் இதெல்லாம் எதிர்க்கட்சிகளின் ரௌடித்தனம். பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டுத் தேர்தல் நடத்தச் சொல்லும் கோரிக்கை, எதிர்க்கட்சிகளைத் தவிர வேறு யாருக்குத் தோன்றும்...? ஒப்ராய் டவர்ஸில் தங்கியிருக்கும் நம் வீரர்களுக்குச் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொடுத்து – அவர்கள் விமானம் ஏறி லண்டன் போகும் வரை பாதுகாப்பு ஏற்பாடுகளை நீடித்தால் – அந்த இந்தியக் கழுகுகளின் மிரட்டல்கள் பிசுபிசுத்துப் போகும்...''

மந்திரி காமோத் பேசிக் கொண்டிருக்கும் போதே அவருடைய உதவியாளர் பக்கத்து அறையிலிருந்து நீளமான ஒயரோடு கூடிய டெலிபோனைத் தூக்கிக் கொண்டு வந்தார். நடையில் வேகம்.

''ஸார்... டெல்லியிலிருந்து கால்...''





''சார்! சுறுசுறுப்புப் பத்தாதுன்னு சொல்லுங்க... ஒப்புக்குவேன். ஆனா, அதுக்காக 'ரெண்டாவது சானல்'னு திட்டாதீங்க!''

— பொடுசி.

''யார் பேசுகிறார்கள்...?''

''பிரதமரின் அலுவலகத்திலிருந்து...''

உதவியாளர் சொன்னதும் — காமோத் இடுப்பில் துண்டைக் கட்டிக் கொள்ளாத குறையாக பவ்யமாக, ஒரு பூஜைக்குரிய பொருளை எடுக்கிற மாதிரி ரிஸீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்து ''ஹலோ'' — என்றார்.

மறுமுனையில் பிரதமரின் தலைமைச் செயலாளர் குரல் கொடுத்தார்.

''மிஸ்டர் காமோத்...?''

''ஹோல்டிங்.''

''இந்தியக் கழுகுகள் பற்றிப் பிரதமர் அறிய விரும்புகிறார். அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்தினீர்களா...?''

''நடத்தினேன். அந்த இயக்கத்தைப் பற்றிக் கவலை கொள்ள ஒன்றுமேயில்லை. இதெல்லாமே எதிர்க்கட்சிகளின் ஏற்பாடு என்பது என் கருத்து. இன்னும் இருபது மணி நேரத்தில் குற்றவாளிகளை மடக்கிப் பிடித்துவிட முடியுமென்று — போலீஸ் கமிஷனர் ஹில் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்...''

''ப்ரஸ்ஸுக்கு... ந்யூஸைத் தரவில்லையே...?''

''இல்லை...''

''ஒலிம்பிக் வீரர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள்?''

''நல்ல முறையில் செய்யப்பட்டிருக்கிறது.''

''மேற்கொண்டு இனிமேல் எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழக் கூடாது என்று பிரதமர் விரும்புகிறார்...''

''எதுவுமே நிகழாது. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள இருக்கும் வீரர்களும், வீராங்கனைகளும் மனக்கிலேசம் அடைந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்களிடம் கூட இந்தியக் கழுகுகளைப் பற்றி ஏதும் சொல்லவில்லை.''

''விளையாட்டு வீரர்கள் லண்டன் புறப்பட்டுப் போகும் வரை நீங்கள் பம்பாயில் தங்கியிருந்து, இந்தியக் கழுகுகள் விவகாரத்தை முடித்து வரவேண்டுமென்று பிரதமர் விரும்புகிறார். பத்திரிகைகளுக்கு விஷயம் கசியக் கூடாது என்பதிலும் தீவிரமாய் இருக்கிறார்.''

''நான் இங்கே எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறேன்.''

''நாளை மதியம் மறுபடியும் தொடர்பு கொள்கிறேன்.'' — மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டதும் — மந்திரி காமோத்தும் ரிஸீவரைப் பவ்யமாய் வைத்துவிட்டு, அதிகாரிகள் எல்லோரையும் ஒரு பொதுப் பார்வை பார்த்தார். ''நாம் என்ன பேசிக் கொண்டோமோ... அதையேதான் பிரதமரும் நினைத்திருக்கிறார்.''

அதிகாரிகளில் ஒருவர் காமோத்திடம் கேட்டார். ''விளையாட்டு வீரர்களிடம் இந்தியக் கழுகுகளைப் பற்றிச் சொல்லாமல் இருப்பது சரியா?''

''சரிதான்...! தங்கம் வெல்லுவதற்குக் கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ளப் போகும் அவர்கள் மனத்தளவில் தளர்ந்து விடக் கூடாது. மனத்தில் பயமும் கிலேசமும் புகுந்துவிட்டால் — அவர்களுடைய பயிற்சிகள் பாதிக்கப்படலாம்.''

''நீங்கள் சொல்கிற கருத்து சரிதான். ஆனால் ஹாக்கி கோச் குருதேவ் சிங்கும், காப்டன் உத்தமும் — காரில் டைனமைட் வெடித்து இறந்திருக்கிறார்கள். இந்த மரணங்களுக்கு நாம் சொல்லப் போகும் காரணம் என்ன?''

''குருதேவ் சிங்கும், உத்தமும் மரணமடைந்ததற்குக் காரணம் தனிப்பட்ட நபர்களின் விரோதம்தான்... என்பதை 'எஸ்டாபிளிஷ்' செய்துவிடலாம்... செய்தி நிறுவனங்களையும் இதே மாதிரி செய்தி கொடுக்க வற்புறுத்த வேண்டும்... எக்காரணம் கொண்டும் இந்தியக் கழுகுகளின் பெயர் வெளியே கசிந்து விடக்கூடாது. கமிஷனர் ஹில்லும் மற்ற போலீஸ் அதிகாரிகளும் இதில் தீவிரமாய் இருக்க வேண்டும்...''

''எஸ்... ஸார்'' — எல்லா அதிகாரிகளும் விறைப்பாய் எழுந்து நின்று சல்யூட் செய்ய — காமோத் தம் 'பல்செட்' பொருத்தப்பட்ட வாயைத் திறந்து தாராளமாய்க் கொட்டாவி விட்டுப் பின்னங் கழுத்தைச் சொறிந்து கொண்டார்.

ஹோட்டல் ஒபராய் டவர்ஸ்.

காலை ஐந்தரை மணி.

நீச்சல் வீராங்கனை நிகிலாவும் அவளுடைய கோச் ரீட்டா சென்னும் — லிப்டில் உயரம் இழந்து ரிசப்ஷன் ஹாலுக்கு வந்த போது, குவித்து வைக்கப்பட்டிருந்த போலீஸுக்கு மத்தியில் விளையாட்டு வீரர்கள் தெரிந்தார்கள். ஹோட்டலுக்கு வெளியே கார்களும், போலீஸ் சம்பந்தப்பட்ட வாகனங்களும் வரிசையில் நின்றிருந்தன.

மௌனமாய் நின்றிருந்த விளையாட்டு வீரர்களுக்கு மத்தியில் கவலை முகமாய் — பூபேஷ் பேசிக் கொண்டிருந்தார். ''ஹாக்கி கோச் குருதேவ் சிங்கும், காப்டன் உத்தமும் தனி நபர் விரோதத்தின் காரணமாகத்தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதை நினைத்து யாரும் மனக் கிலேசம் கொள்ள

வேண்டியதில்லை. நீங்கள் உங்களுடைய வழக்கமான பயிற்சிகளை மேற்கொள்ள — ஸ்டேடியத்திற்குத் துணிச்சலோடு போகலாம். போலீஸ் பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்டேடியத்தின் உள்ளேயும் வெளியேயும் போலீஸின் தீவிர கண்காணிப்புப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. பயிற்சிக் காலம் முடிகிற வரைக்கும் அந்தப் பிரிவுகள் இயங்கும். ஸ்டேடியத்திற்குப் போக விருப்பம் இல்லாதவர்களைப் போகச் சொல்லி நான் கட்டாயப்படுத்த மாட்டேன். நீங்கள் விரும்பினால் போகலாம்; இல்லாவிட்டால் ஹோட்டலிலேயே இருக்கலாம்...''

பூபேஷ் பேச்சை முடித்த போது — நிகிலாவும் ரீட்டா சென்னும் அவருக்கு முன்பாக வந்து நின்றார்கள். ரீட்டா சென் இறுகிப் போன முகத்தோடு பூபேஷை ஏறிட்டாள்.

''ஸார்... நானும் நிகிலாவும் ஸ்டேடியம் நீச்சல் குளத்திற்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறோம். மற்றவர்கள் வருவதைப் பற்றியோ, வராததைப் பற்றியோ எங்களுக்குக் கவலையில்லை... ஆறு மணிக்கெல்லாம் நான் நிகிலாவுக்குப் பயிற்சிகளை ஆரம்பிக்க வேண்டும். கார் ஏற்பாடு செய்கிறீர்களா...?''

பூபேஷ் மலர்ந்தார். ''உங்களுடைய துணிச்சலுக்கு என்னுடைய பாராட்டுக்கள் மிஸஸ் ரீட்டா சென். வெளியே, ஸ்டேடியம் போக மொத்தம் இருபது கார்கள் போலீஸ் எஸ்கார்ட்டோடு தயாராக உள்ளன. நீங்கள் எந்தக் காரில் வேண்டுமானாலும் ஏறிக் கொள்ளலாம்...''

''தாங்க்யூ...''

நிகிலாவும், ரீட்டா சென்னும் ஹாலில் சிதறியிருந்த கும்பலுக்கு நடுவே வழி ஏற்படுத்திக் கொண்டு, ஹோட்டலின் போர்டிகோவுக்கு வந்தார்கள். தோள்களில் ஊஞ்சலாடும் காமிராக்களோடு ஒரு சின்ன பத்திரிகைக் கும்பல் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. கேள்விகள் நாலா பக்கத்திலிருந்தும் பீறிட்டன.

''குருதேவ் சிங்கும், உத்தமும் டைனமைட் வெடித்து இறந்திருக்கிற இந்த நேரத்தில் நீங்கள் வெளியே செல்வது பாதுகாப்பற்ற செயல் அல்லவா...?''

நிகிலா புன்னகை செய்தாள். ''அப்படி என்று பார்த்தால் ஹோட்டலில் தங்கியிருப்பதும் உங்களோடு பேசிக்கொண்டிருப்பதும் கூட பாதுகாப்பற்ற செயல்தான்.''

''மற்ற வீரர்கள் தயங்கிக் கொண்டிருக்கும் போது நீங்கள் மட்டும் புறப்படுவது ஏன்?''

ரீட்டா சென் குறுக்கிட்டுச் சொன்னாள்.

''நான் நிகிலாவுக்கு நீச்சல் மட்டும் கற்றுத் தரவில்லை. துணிச்சலையும் கற்றுத் தந்திருக்கிறேன். ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் குறைந்தது நான்கு தங்கமாவது வெல்ல வேண்டும். ஒவ்வொரு விநாடியும் நானும் நிகிலாவும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். விபத்துக்கள் வாழ்க்கையில் சாதாரணமாக நடப்பவை. இதையெல்லாம் பெரிதுபடுத்திக் கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை.''

போலீஸார் வழி ஏற்படுத்திக் கொடுக்க, போர்டிகோவில் காத்திருந்த காருக்கு வந்தார்கள் நிகிலாவும் ரீட்டா சென்னும். டிரைவர் கதவைத் திறந்துவிட உள்ளே போனார்கள்.

பம்பாயின் கிழக்கு வானம், சூரியனுக்காக ஆரத்திக் கரைத்துக் கொண்டிருக்க, முதலில் போலீஸ் ஜீப்பும் பின்னால் காரும் புறப்பட்டன.

(தொடரும்)

வட்டமேஜை

* 'தேர்தல் அரங்கில் மற்றொரு நாடகம்' என்ற தலையங்கம் கண்டேன். 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது போல வெறும், வாய் வார்த்தைகளால் மட்டுமே, எதுவும் நிகழ்ந்து விடப் போவதில்லை. சொன்னதை நிறைவேற்றும் மனப் பக்குவம் கண்டிப்பாகத் தேவை. அதை நமது பிரதமருக்கு யார் கொடுப்பது...?

கூதூர், எஸ். ஏ. மயில்சாமி.

* 'தேர்தல் சாணக்கியங்கள்' கட்டுரை படித்தேன். 'இந்தத் தேர்தல் நிச்சயமாக ஆரோக்கியமான ஜனநாயகத்துக்குப் படுதோல்வியே' என்று முடிவில் கூறியிருக்கும் வாக்கியம் அட்சர லட்சம் பெறும்.

பழநி, பொற்கொல்லன்.

* ஒருமுறை மொரார்ஜி தேசாய் தமிழகத்திற்கு வந்திருந்த பொழுது, சில தமிழ் வார்த்தைகளைச் சொல்லி, 'இதனை உங்களுடைய பேச்சில் பயன்படுத்தி, உங்களது பேச்சைத் தொடருங்கள். அப்பொழுதுதான் உங்கள் மீது தமிழ் மக்களுக்கு ஒரு பிடிப்பு ஏற்படும்!' என்றார்களாம். அதற்கு அவர், 'அந்த மாதிரி நான் மக்களை ஏமாற்ற மாட்டேன். முடிந்தால் தமிழை முழுமையாகக் கற்றுக் கொண்டு பேசுகிறேன். அந்தப் பிடிப்பு அப்பொழுது ஏற்படட்டும்' என்று சொன்னாராம். அந்த தேசாய் எங்கே? இந்த ராஜீவ்காந்தி எங்கே? அந்தந்த மாநிலங்களுக்குப் போகும் போது, அந்தந்த மொழியில் பேசுவதும், அதே உடைகளை அணிவதும், தேர்தல் சாணக்கியம்தானே தவிர வேறென்ன?

விருத்தாசலம், ஏ. டி. பூவராகவன்.

* அரசியல்வாதிகளின் பகட்டு வார்த்தைகளில் ஏமாந்து இளைஞர்கள் வோட்டுப் போட்டு விடுவார்கள் என்பதை முழுமையாக ஒப்புக் கொள்ள இயலாது. சினிமா கவர்ச்சிக்கும் அடுக்கு மொழிப் பேச்சுக்கும் மயங்கி நிற்பவர்கள் பாமரர்கள் தானே ஒழிய இளைஞர்கள் அல்ல!

வைத்தீஸ்வரன் கோவில்,
வை. ஆ. யதார்த்தன்.

* ராஜீவின் தமிழக விஜயம் பற்றிப் பிரசுரித்த 'சின்ன வீடு' கார்ட்டூன் மிகவும் அருவருப்பாக இருந்தது. கல்கியின் தரத்திற்கு அது தேவைதானா?

பம்பாய், வி. பிச்சுமணி.

* பொதுவாகச் 'சின்ன வீடு' என்பதற்கு விளக்கம் — சட்டபூர்வமாக எந்தவிதமான அந்தஸ்தையும் பெறாத, வெறுமனே அனுபவிக்க மட்டும் தேர்ந்தெடுக்கப்படும் கள்ளத்தனமான இரண்டாந்தாரப் பெண். அது போல் தான் பிரதமருக்குத் தமிழகம் ஒரு சின்ன வீடு என்ற அர்த்தமுள்ள கார்ட்டூன் மூலம் விளக்கி விட்டீர்கள்!

திருச்சி — 2, ஆற்காடு எழிலன்.

மொரார்ஜி எங்கே? ராஜீவ் எங்கே?

* 'வளைந்து கொடுக்கிறது தோத்துட்டதாக அர்த்தம் ஆகாது' என்ற வரி அர்த்தம் நிறைந்த வரி. பல்வேறு யூனியன்கள் நிறைந்த ஒரு ஸ்தாபனத்தில் உற்பத்தி இலக்கினை எட்டச் சில விஷயங்களைக் கண்டும் காணாமலும் விடத்தான் வேண்டும் என்ற கருத்தினை நயம்பட உரைத்தது 'வளைய மறுக்கும் நாணல்கள்' சிறுகதை.

திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

* 'முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்' என்னும் முதுமொழியை ஞாபகப்படுத்தி, ஆழமாய் அடி மனத்தைத் 'தொட்டு' விட்டார். 'ஆயிரம் பொய் சொல்லி' சிறுகதையாசிரியர் ஜுவனி. பாராட்டுக்கள்.

இடையக்கோட்டை,
அல்—அமீன் ஃபாரூக்.

* எங்கள் கல்லூரியின் வான இயல் சங்கம் பற்றிக் கட்டுரையை வெளியிட்டதற்கு நன்றி. முழு சூரிய கிரகணம் காண ஹூப்ளி போகத்தான் கிளம்பினோம். ஆனால் கார்வாரிலேயே எங்களுக்குப் பூரண சூரிய கிரகணம் காணத் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டன. அதனால் அங்கேயே பார்த்தோம். மேலும் வால் நட்சத்திரம் KAHOUTEK என்பது கோவ் டெக் என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது.

சென்னை — 4, கே. கணேஷ்.
விவேகானந்தா கல்லூரி.

* 'அறிவு ஆளட்டும்; உணர்ச்சிகள் அல்ல' என்ற தலைப்பிலான டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி அவர்களின் அருமையான கட்டுரையைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை. நமது அரசியல்வாதிகள் அனைவரும் இக் கட்டுரையைப் படிக்க வேண்டும். அத்துடன் இல்லாமல் அக் கட்டுரை நோட்டீஸ்களாக அச்சடித்துத் தமிழக வாக்காளர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டும். அதைப் படித்த பிறகாவது தமிழக மக்கள் உணர்ச்சி அரசியலில் இருந்து உண்மை அரசியலுக்குத் திரும்பட்டும்.

திருச்சி — 8, என். வெங்கடசுப்பு.

* 'ஐயோ பாவம்' என்ற உணர்வை மக்கள் மத்தியில் எழச் செய்து, தங்களுக்கு இருக்கின்ற அந்த ஒரு தகுதியை மட்டும் வைத்தே ஆட்சியைப் பிடித்து விடத் துடிக்கும் இரு பெண்களோடு கலைஞரை ஒப்பிட்டுக் காட்டுவது சரியல்ல. விழுப் புண்களைக் காட்டுகின்றார் கலைஞர்; மற்றவர்களோ சொந்த இழப்புகளால் ஏற்பட்ட புண்களைக் காட்டுகின்றனர். இந்த வேறுபாட்டை எம். எஸ். உதயமூர்த்தி மறக்கலாமா?

கல்லிடைக்குறிச்சி, கே. பி. கே. மரகதம்.

* "காலத்தை வென்றவன் காத்திருந்த கதை" என்ற கட்டுரை தொடர்பாகச் சில விளக்கங்கள்: "தீரோட்டம்" என்ற படம் எனது நண்பர் கே. திருநாவுக்கரசு, (டி. எம். மூவிஸ்) தயாரித்தது. அதன் தயாரிப்பாளர் நானல்ல. இரண்டாவதாக, ப. நீலகண்டன் எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய குருநாதர். அவரை "நண்பர் ப. நீலகண்டன்" என்று நான் குறிப்பிடவில்லை. மூன்றாவதாக, 'காலத்தை வென்றவன்' படம் சம்பந்தமாக ஜெயலலிதா தெரிவித்த தகவல் தவறானது என்பதை நான் பதில் அறிக்கையில் விளக்கிச் சொல்லி இருந்தேன். அதை அவர் ஏற்றுக் கொண்டார். அவ்வளவுதான். 'கப்சிப் ஆகி விட்டார்' என்ற வார்த்தைகளை நான் பேட்டியின் போது பிரயோகிக்கவில்லை.

சென்னை — 17, மோகன் காந்திராமன்.



10 கணக்குகள் போட வேண்டும்.
ஆங்கில பாடத்தில் வீட்டு வேலை.
பூகோளப் பரீட்சைக்குப்படிக்க வேண்டும்.
மேலும், நாளைக்கு அவனுக்கு கிரிக்கெட்
மேட்ச் வேறு இருக்கிறது.
"அம்மா, இந்த கொசுத்தொல்லைக்கு ஏதாவது செய்யேன்!"
BANISH
மாலை, இரவு நேரங்களில் கொசுவுடன் விடாது போராட வேண்டியிருந்தால், பள்ளிப்பாடத்தில் மட்டுமல்ல, விளையாட்டிலும் சாம்பியனாக இருப்பது அவ்வளவு எளிதல்ல.
ஆகவே இன்றே பேனிஷ் வாங்குங்கள்.
அது மிகவும் பாதுகாப்பானது. (உங்கள் குழந்தை அதைக் கையாளலாம்.) அத்துடன், அது கொசுக்களை விரைவாக ஒழிக்கும் மிக நவீனமான சாதனம்.
அதில் உள்ள விசேஷ எலக்ட்ரானிக் சிப், தொடர்ந்து ஒரே சீராக சூடாவதற்கு உறுதி செய்கிறது. மிகவும் செறிவாக மருந்து பூசப்பட்ட வில்லைகள், எந்த வில்லைகளையும் விட அதிக சக்தியுடன் செயலாற்றுகின்றன. பேனிஷ் இருந்தால் கொசுத்தொல்லையே இருக்காது.
BANISH
HTA 7003
மிகவும் சக்தி வாய்ந்த எலக்ட்ரானிக் கொசு விரட்டி.

யாருக்கு இம்முறை வாக்களிக்கலாம்?



இழப்பு: முதல் மரியாதை.



கிண்டருக்கு வாய்ப்பு!



சமாதான விருது.



பண்பாடு தெரியாதா?



நாறுசத ஆசை!

*** எஸ். ஏ. மயில்சாமி, கோவை.**

? தராசே! நடுநிலை நின்று பதில் சொல்லும்! யாருக்கு இம்முறை வாக்களிக்கலாம்?

! நானும் அதைத்தான் யோசித்து யோசித்துக் குழம்பிக் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தேன். எந்தக் கட்சியுமே நமது நன்மதிப்பைப் பெறாத போது என்ன செய்ய? நம் தொகுதி வேட்பாளர்களை நன்றாக அலசி ஆராய்ந்து பார்த்து உள்ளதற்குள் நல்லவருக்கு வோட்டுப் போடுவது; கட்சிக் கண்ணோட்டத்தில் அல்ல என்ற முடிவுக்கு வந்து விட்டேன்.

*** ஆர். மின்னல் ராஜன், திருச்சி — 8.**


? பெனாசிரின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும்?

! எங்கே, மந்திரி சபை அமைக்கவே விட மாட்டார்கள் போலிருக்கே! அரசியல் சட்டத்துக்கு ஆறுவித அர்த்தம் கற்பித்துக் குழப்புகிறார்கள். ஜனாதிபதியாகப்பட்டவர் இப்போதுள்ள காபந்து சர்க்காரிடம் அஞ்சி அவர்களின் கைப்பாவையாகியிருக்கிறாரோ, என்ற சந்தேகம் எழுகிறது. இப்போதைக்குத் தமக்கு நியாயம் கிட்ட பெனாசிர் இங்குமங்குமாகத் துள்ளிப் பாய்ந்து மோதிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சுவரில் அடித்த பந்து போல் புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்து கொண்டிருக்கிறார். 'கல்யாணம் பண்ணியும் பிரும்மச்சாரி, கடன் வாங்கியும் பட்டினி' என்ற நிலைமை அவருக்கு ஏற்பட்டுவிடாமலிருக்க அல்லா அருளட்டும்.

*** ஆர். அப்துல் சலாம், திருச்சி.**

? வி. பி. சிங் பற்றிய மத்திய அமைச்சர் பூட்டா சிங்கின் பேச்சிலிருந்து பதினான்கு கருத்துக்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருப்பது பற்றி?

! ரிகார்டிலிருந்து நீக்கப்பட வேண்டியவற்றைப் பேசுவதில் பூட்டாசிங் புதியதொரு ரிகார்டு ஏற்படுத்தியிருக்கலாம். அது ஒரு பக்கமிருக்க, நாடாளுமன்றப் பண்பாடு (Decorum) என்பதாக ஒன்று இருப்பதைக் கூட அறியாதவர், அமைச்சராக இருக்கவே அருகதையற்றவர். அவர் கருத்துக்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியது போதாது,



° நியாயம் கிட்டுமா?

நீங்கள் கேட்டவை — தராசு

அவரையே அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும்!

* இடலை சுதா, குளத்தூர்.

? திருநாவுக்கரசு மீண்டும் ஜெயலலிதா அணியில் சேர்ந்திருப்பது பற்றி...?

! தூக்குப் போட்டுக் கொண்டு சாவதானாலும் ஜெ. அணியில் திரும்பவும் சேர்வதானாலும் இரண்டும் ஒன்றுதான் என்ற முடிவுக்கு அவர் வந்திருக்க வேண்டும். அல்லது, ஜெ. பிராண்ட் தைலம் உபயோகித்தால் உதிர்ந்த முடிகள் கூடத் திரும்ப வந்து ஒட்டிக் கொள்ளும் என்று நிரூபிக்க விரும்பியிருக்க வேண்டும்!

* எஸ். கலீல் ரகுமான், பொள்ளாச்சி.

? 'கொடி பறக்குது' வெற்றிப் படமா?

! வெற்றிப் படமா இல்லையா என்பதை உங்களைப் போன்ற ரசிகர்கள்தான் தீர்மானிக்கிறீர்கள். என்னைப் போன்ற விமர்சகர்கள் அது நல்ல படமா இல்லையா என்பதைத்தான் கூற முடியும். படத்தைப் பார்த்த பிறகு, பாரதி ராஜாவை முதல் மரியாதைக் குரியவராக இனி கருத முடியாது என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது.

* சாரதி ப்ரியா, தஞ்சை.

? இந்த மழை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?

! எங்கே, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்கள் பாதி அளவு கூட நிரம்பவில்லையே... கோடையை நினைத்தால் பயமாயிருக்கிறதே... பசித்தவன் ருசிக்குச் சாப்பிட்ட கதைதான் இன்று. 'கார்த்திகை முடியுமுன் இன்னொரு மழை அடிக்கும்' என்று வானிலைத் துறை கூறியது... ஒன்றையும் காணோம்!

* எம். முகம்மது யூசுப் அலி, திட்டச்சேரி.

? நான் பத்திரிகை ஆரம்பிக்கலாம் என்றிருக்கிறேன், என்ன பெயர் வைக்கலாம்?

! "நஷ்டம்."

* டி. அனு, போடிநாயக்கனூர்.

? பிரதமர், டீ.வி.யில் தம்மைப் பற்றியும் தமது அமைச்சர்கள் பற்றியுமே என்பது சதவிகித செய்திகள் வருவது விரும்பத்தக்கதல்ல என்று சண்டே இதழுக்குப் பேட்டி அளித்திருக்கிறாரே?

! நூறு சதவிகிதமும் தம்மைப் பற்றியே வர வேண்டும் என்பதைத்தான் அப்படி மறைமுகமாகச் சொல்லியிருப்பார்! "தூதன்" அறியாததா இது!

* கே. ஆர். பவானி, கும்பகோணம்.

? பெண்களின் பின்னழகைக் கூட்டுவது நீண்ட சடையா? அழகிய இடையா? கவர்ச்சி நடையா?

! கொஞ்ச நாள் காணாமல் போயிருந்த என் தோழர்தான் திரும்பி வந்து விட்டாரே, அங்கே அனுப்பி விடுங்களேன், இந்தக் கேள்வியை!

* கே. ரமேஷ், பள்ளிபாளையம்.

? ரஷ்ய அதிபர் கார்பசேவுக்கு — இந்திரா காந்தி சமாதான விருது வழங்கப்பட்டுள்ளது குறித்து?

! விருதை வைத்துக் கொண்டு பணத்தை இங்கேயே நன்கொடையாக வழங்கி விட்ட அவருடைய பண்பைக் கவனியுங்கள்! மற்றபடி சமாதான விருதுக்குத் தகுதி உள்ளவர்தான் என்பதை ஆப்கானிஸ்தானிலிருந்து ருஷ்யப் படைகள் பின்வாங்கியதும் ஏவுகணைகள் குறைப்பு ஒப்பந்தத்தில் ரேகனுடன் கையெழுத்துப் போட்டதும் நிரூபிக்கின்றன.

* எல். ஆர். சுந்தர ராஜன், சென்னை—28.*

? ஹெக்டேயைப் போல் ஊழல் செய்த முதல்வர் வேறுயாருமில்லை என்று பிரதமர் கூறியுள்ளாரே?


! இதோடு நின்றிருந்தால் பரவாயில்லையே! அதற்கும் மேலே போய், ஹெக்டே மீதுதான் பல கமிஷன்களும் கோர்ட்டுத் தீர்ப்புகளும் ஊழல் குற்றச்சாட்டுக்களை நிரூபித்துள்ளன என்றும் பத்திரிகைகள்தாம் ஹெக்டேயைப் பெரிய மனிதராக்கி விட்டன என்றும் கூறிப் பதிலுக்கு வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறாரே ராஜீவ்! 'ஹெக்டே மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆதாரமே இல்லை' என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பதை எடுத்துக் காட்டவும் 'ராஜீவ் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டியவர்' என்று கிண்டல் செய்யவும் ஹெக்டேக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தாகி விட்டதே!

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**
எல். ஆர். சுந்தர ராஜன்,
D 25, பட்டினப்பாக்கம் காலனி,
எல். ஐ. ஜி. பிளாக், 2—வது மாடி,
சென்னை — 28.

சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து போராட்ட ஊர்வலம்!

• அரசின் சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வளவோ வித்தியாசம். ஓர் உதாரணம்: நீதி மன்றங்களில் வழக்குகள் குவிவதைத் தவிர்க்கப் புதிதாகத் தொண்ணூறு உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமிக்கப் போவதாக மத்திய சட்ட அமைச்சர் சென்ற மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால் இன்று வரை புதிய நீதிபதிகள் நியமிக்கப்படாதது மட்டுமல்ல; உயர் நீதிமன்றங்களில் காலியாக இருக்கும் அறுபது நீதிபதி ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்படவேயில்லை! நாட்டின் உச்ச நீதிமன்றத்திலோ இருபத்தியாறு நீதிபதிகள் பணியாற்ற வேண்டிய இடத்தில் பதினைந்து பேர்களே இருக்கிறார்கள்!

• பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து நவம்பர் பதினைந்தாம் தேதி பரத்தையர் போராட்ட ஊர்வலம் ஒன்று நடந்தது. ஐந்நூறுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். இதற்கு தலித் பாந்தர் கட்சி



ஆதரவு தந்தது. இப்பெண்கள் எதற்குப் போராடுகின்றனர்? 1. தீராக் கடன் தொல்லையிலிருந்து விடுதலை; 2. அடிமைத்தளையிலிருந்து விடுதலை; 3. போலீஸ் கொடுமையிலிருந்து விடுதலை; 4. இலவச மருத்துவப் பரிசோதனையும் மருத்துவச் சிகிச்சையும் பெற; 5. குண்டர்களின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்பு; 6. தொழிலைத் துறக்க



முன் வருவோருக்கு மறுவாழ்வு இல்லங்கள் என்று இவர்களின் கோரிக்கைப் பட்டியல் நீள்கிறது. பரிதாபத்துக்குரிய இவர்களுக்கு நல்ல பதில் கிடைக்குமா?


• உலகிலேயே மிக நீளமான கடிதத்தை எழுதியவர் என்று கோட்டயத்தைச் சேர்ந்த ரேகன் ஜோன்ஸ் கருதப்படுகிறார். இருபத்தேழு வயதான இவர், போப்பாண்டவருக்கு எழுதிய கடிதம் 2.4 கி. மீ. நீளம்! பத்து கோடி வார்த்தைகள் கொண்டது! 100 கிலோ எடை! இதனை போப்பாண்டவருக்கு அனுப்ப ஆன தபால் செலவு ரூ. 2058! கடிதத்தின் சாராம்சம்: உலக அமைதி. ரேகன் ஜோன்ஸ் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

• 'ரொம்பப் படித்தவர்,' 'மெத்தப் படித்தவர்' என்றெல்லாம் ஒருவரை வர்ணிக்கிறோம். ஆனால் யாருமே சோவியத் யூனியனைச் சேர்ந்த அலெக்ஸாண்டரை விஞ்ச முடியாது. இவருக்கு வயது அறுபது. இதற்குள் 24,752 புத்தகங்களைப் படித்திருக்கிறார்! நாளிதழ்கள், சஞ்சிகைகள் தனிக் கணக்கு. ''எனக்குக் கண்பார்வை நன்றாக இருக்கிறது; இன்னும் நிறையப் படிப்பேன்!'' என்கிறார்.

• ஜப்பானிய ஃபாஷன் அலாதி ரகம். அன்றைய உஷ்ணத்துக்கு ஏற்ப நிறம் மாறும் ஆடை வகைகளைக் கண்டுபிடித்து விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்! உஷ்ணம் அதிகமானால் அழுத்தமான நிறத்துடனும் உஷ்ணம் குறைந்தால் வெளிர் நிறத்துடனும் விளங்கும் இந்த ஆடைகள். போதாக் குறைக்கு இப்போது நறுமணம் பரப்பும் ஸ்வெட்டர்கள், கைக்குட்டைகள், கழுத்துடைகள், முதலியன விற்பனைக்கு வந்துள்ளன! நூலிழைகளுக்கு இடையில் கண்களுக்குப் புலப்படாத செண்டுக் குப்பிகள் உள்ளன. ஆடை, அதனை அணிபவர் உடல் மீது உராயும் போது இந்தக் குப்பிகள் உடைந்து மணம் பரப்புகின்றன. நமக்குப் பிடித்தமான மணத்தைப் பரப்பும் ஆடைகளை நாம் தேர்ந்தெடுக்கலாம்!

— பி. கே; கே. ஆர்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா—உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அரையாண்டுச் சந்தா—உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.


குளியலுக்குப் பின்
சொகுசான மிருது
அல்ட்ரா எக்ஸ் லக்ஸரி டவல்ஸ். கண்கவரும் வண்ண வகைகளிலே. ஜப்பானிய தொழில்நுட்பத்தின் உன்னத தயாரிப்பு. உலகின் மிக நேர்த்தியான டவல்களுக்கு இணையானவை. அதிமென்மை. அதிக உறிஞ்சும் திறன். அதிக அடர்த்தியான டவல் குஞ்சங்கள். 100% சுத்தமான பருத்தியிழை களாலானது. ஒற்றையாகவோ ஜோடியாகவோ கிடைக்கும் டவல்கள். விசேஷமான சொகுசுக்கு பெரிய சைஸில் கூட...
ல க் ஸ ரி ட வ ல் க
பாம்பே டையிங்
ஸ் தா பி த ம்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

